# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

செப்டம்பர் 2006 விலை ரூ.10







# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நிலம் வழங்கும் திட்டத்தின் செயலாக்கம்






ஆழ்துளை குழாய் கிணறு அமைப்பு



முட்புதர்கள், கூழாங்கற்கள் அகற்றுதல்



பண்படுத்தப்பட்ட நிலம்



சமப்படுத்துதல்



பயன்பெற்ற ஏழை விவசாயக் குடும்பம்

திருவள்ளுவர் ஆண்டு 2037
ஆவணி - புரட்டாசி
செப்டம்பர் 2006
மலர் : 38 இதழ் : 3

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

**புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.**

பிறர்க்கு உதவிடும் பண்பாகிய 'ஒப்புரவு' என்பதைவிடச் சிறந்த பண்பினை இன்றைய உலகிலும், இனிவரும் புதிய உலகிலும் காண்பது அரிது.

- **கலைஞர்**
திருக்குறள் உரையிலிருந்து

## இந்த இதழில்...

2 — ஐந்தாண்டுகளுக்குள் நிலமற்ற ஏழை-எளிய விவசாயிகளுக்கு இலவசமாக நிலம் வழங்கிட தொடர்ந்து பணியாற்றுவோம் -மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்

காவல்துறை அறிவிப்புகள் — 6

13 — 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் ரூ.750 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும் - மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்

தொழில்துறை அறிவிப்புகள் — 19

தமிழ் வளர்ச்சித்துறை அறிவிப்புகள் — 34

நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அறிவிப்புகள் — 37

பலாப்பழம் - சிறுகதை — 66

## அட்டைப்பட விளக்கம்

**முதலாம் பக்க அட்டை**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தந்தை பெரியார் பிறந்தநாளான 17.9.2006 அன்று ஏழை விவசாயக்குடும்பங்களுக்கு நிலம் வழங்கும் திட்டத்தை தொடங்கிவைத்தார்கள்.

**மூன்றாம் பக்க அட்டை**

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு (18.9.2006)

**நான்காம் பக்க அட்டை**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அறிஞர் அண்ணா பிறந்தநாளான 15.9.2006 அன்று, இலவச வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கிவைத்தார்கள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **சி. கோசலராமன், இ.ஆ.ப., இயக்குநர்,**
செய்தி – மக்கள்தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு,
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை, சென்னை – 600 002. தொலைபேசி : 25368926/25364906 தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu2@hotmail.com இணைய தளம் : www.tn.gov.in



# ஐந்தாண்டுகளுக்குள் நிலமற்ற ஏழை–எளிய விவசாயிகளுக்கு இலவசமாக நிலம் வழங்கிட தொடர்ந்து பணியாற்றுவோம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கள்

"வயதில் அறிவில் முதியார்
வாய்மைப் போருக்கு என்றும் இளையார்
உயர் எண்ணங்கள் மலரும் சோலை"

தந்தை பெரியார் அவர்களுடைய பிறந்த நாளில் ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நிலம் வழங்குகின்ற இந்த நாள் – இன்பநாள்; நிலங்களைப் பெற்றவர்களுக்கு மாத்திரமல்ல; அந்த நிலங்களை வழங்கிய எனக்கும், இதுபோன்ற இன்பநாள் என்றுமே வாய்த்ததில்லை. என்னுடைய வாழ்க்கையில் உணர்ச்சிகரமான உள்ளத்தை தொட்டு இழுக்கின்ற பல நிகழ்ச்சிகள் நடைபெற்றதுண்டு. ஆனால், அந்த நிகழ்ச்சிகளெல்லாம் இந்த நிகழ்ச்சிக்கு ஈடில்லை என்று சொல்லுகின்ற அளவுக்கு இன்று இந்த மாவட்டத்திலே, இந்தப் பகுதியிலே ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவசமாக நிலங்களை வழங்குகின்ற திட்டத்தினுடைய தொடக்க விழாவை நடத்துகின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கின்றேன்.

பல்லாயிரக்கணக்கிலே இங்கே கூடியிருக்கின்றீர்கள், ஒவ்வொருவருக்கும் நிலம் தர நிலம் இல்லை. ஆனால், நிலம்தான் தரவில்லை என்றாலும், உட்கார இடமாவது தருவீர்களா என்றால் அதுவும் இல்லை நான் வருகிற வழியில் பந்தலுக்கு வெளியிலே பல்லாயிரக்கணக்கில் அங்கே இன்னொரு பந்தல் நிரம்பி வழிகின்ற அளவுக்கு நீங்கள் நிற்கின்ற காட்சியைப் பார்த்துவிட்டுத்தான் இங்கே வந்தேன். என்னுடைய அருமை நண்பர் சுதர்சனம் கூட வெளியே எவ்வளவு பேர் இருக்கிறார்கள் பார்த்தீர்களா என்று சொன்னார்கள் முந்திக்கொள்ளாத காரணத்தால், அவர்கள் அங்கே நிற்க நேரிட்டிருக்கிறது. நான் அவர்களிடத்திலெல்லாம் வருத்தத்தையும் மன்னிப்பையும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று உங்களுக்கு ஏற்பட்டுள்ள குறையைப் போக்க விரைவிலே இன்னொரு நாள், பந்தல் இல்லாத ஒரு கூட்டத்திலே பேசி உங்கள் அத்தனை பேரையும் சந்திக்கின்ற வாய்ப்பை நான் பெறுவேன் என்பதை முதற்கண் எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கின்றேன். திருக்குறளிலே ஒரு அருமையான குறள் உண்டு.

*"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்*
*நிலமென்னும் நல்லாள் நகும்"*

எதுவுமே இல்லையேன்று சோம்பி உட்கார்ந்திருப் பவரைப் பார்த்தால், நிலம் ஏளனப் புன்னகை புரியுமாம். நிலம் இல்லை என்றா சோம்பேறித்தனமாக உட்கார்ந்திருக்கிறாய், நான் இருக்கிறேன்; என்னைப் பண்படுத்தி, உழுது பயிரிட்டு, உன்னுடைய வாழ்க்கையை நகர்த்து என்று சொல்லாமல் சொல்லி, நிலமகள் – பூமி சிரிப்பாள் என்று வள்ளுவர் அழகாகச் சொன்னார்.

அந்தச் சிரிப்பு என் காதிலே விழுந்த காரணத்தால்தான் தமிழகத்திலேயே நிலமில்லாத ஏழை எளிய விவசாயக் குடும்பங்களுக்கெல்லாம் முடிந்த வரையில், இயன்றவரையில் நிலம் தருகின்ற பணியை ஆற்ற வேண்டும் என்று அந்தப் பணியை ஆற்றத் தொடங்கியிருக்கிறேன். தி.மு.கழகத் தினுடைய தேர்தல் அறிக்கையிலும், தொடர்ந்து நடைபெற்ற ஆளுநர் உரையிலும் அதைத்தொடர்ந்து வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கையிலும், குறிப்பிடப்பட்ட வாக்குறுதிகள் எப்படி நிறைவேற்றப் பட்டிருக்கிறது என்பதை எனக்கு முன்னால் இங்கே பேசிய நண்பர்களெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

## தமிழகம் முழுவதும் 24,949 குடும்பங்களுக்கு 26,321 ஏக்கர் நிலம்

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டத்தினுடைய தொடக்க விழா நாளாக அமைந்துள்ள இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் முதல்கட்டமாக அரசுக்குச் சொந்தமான ஆக்கிரமிப்பு இல்லாத நிலம் **6,881** ஏக்கர் தரிசு புறம்போக்கு நிலமும், பண்படுத்தப்பட்ட நிலமாக **5,076** நிலமற்ற விவசாயக் குடும்பங்களுக்கு இன்றைக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. அரசுக்குச் சொந்தமான ஆக்கிரமிப்பு உள்ள **10,564** ஏக்கர் தரிசு புறம்போக்கு நிலம், நிலமற்ற **14,083** சிறு, குறு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. **5,790** சிறு, குறு விவசாயிகளுக்குச் சொந்தமான **8,876** ஏக்கர் பட்டா தரிசு நிலங்களை அரசின் செலவில் மேம்படுத்தி விளைநிலங்களாக மாற்றி அவர்களுக்கே வழங்கப்படுகிறது. இந்தக் கணக்கு இந்த ஒரு நாள் தமிழ்நாடு முழுவதும் நடைபெறுகின்ற நிகழ்ச்சியாகும். ஆனால், இன்று மட்டும் தமிழகம் முழுவதும் நான் காட்டியிருக்கின்ற இந்தக் கணக்கின்படி மொத்தம் **24,949** ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு **26,321** ஏக்கர் நிலம் பண்படுத்தி வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

என் வாழ்நாளில் நான் ஆற்றியிருக்கின்ற பணிகளில் மிகச்சிறந்த பணி இன்றைய பணி.

எப்படி பண்படுத்தப்படுகிறது ? என்னென்ன சீர்திருத்தங்கள் செய்து அவைகள் ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சுருக்கமாக கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.

தரிசு நிலங்களில் இருந்த முட்புதர்களை அகற்றி உழுது, பண்படுத்தி, கற்களை அகற்றி, நிலத்தை சமன்படுத்தி, வரப்புகளை ஏற்படுத்தி, ஆழ்துளைக் குழாய் கிணறுகளை அமைத்து, பயன்தரும் பழ மரக்கன்றுகளையும், ஊடுபயிர்களையும் நடவு செய்து இன்றைய தினம் இந்த நிலங்களெல்லாம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்ச்சியை நான் நிறைவேற்றி வைப்பதற்காக வெங்கடாபுரத்திலே சென்று இறங்கியதும் அங்கே குழுமியிருந்த மக்களைப் பார்த்தேன், .சகோதரிகளைப் பார்த்தேன், தாய்மார்களைப் பார்த்தேன், பெரியவர்களைப்



இன்றைக்கு இங்கே 649 ஏக்கர் பட்டா தரிசு நிலங்களை பண்படுத்திக் கொடுத்தும், 588 ஏக்கர் அரசு நிலங்களை வழங்கியதும் உள்பட அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த நிலங்களைப் பண்படுத்த மட்டும் செலவு எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் குறிப்பிட்டதைப்போல் 42 இலட்சம் ரூபாய் ஆகும். இது, எந்த சுயலாபத்தையும் கருதி அல்ல. இது உங்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்காக வாழ்க்கைக்கு வழிகாட்டுவதற்காக, அமைக்கப்பட்ட ஒரு ஆதாரம் என்பதை மறந்துவிடக்கூடாது.

## தோழமைக் கட்சியினர் – கழகத்தினரின் ஒத்துழைப்பு

நான் ஆவலோடு கேட்டேன் இங்கே தரப்பட்டிருக்கிற நிலத்தில் புஞ்சை பயிரிட்டால், ஆண்டொன்றுக்கு உங்களுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்று கேட்டேன். 5 ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என்று சொன்னார்கள் மா பயிரிட்டால், அவைகள் வளர்ந்தால் இன்னும் ஐந்தாண்டு காலத்திற்குப் பிறகு, பத்தாண்டு காலத்திற்குப் பிறகு 10 ஆயிரம் 15 ஆயிரம் கூட கிடைக்கும் என்று பரவசமாக சொன்னார்கள். அந்த பரவசம், என்னுடைய உள்ளத்திலே எந்த அளவிற்கு தேன் பாய்ச்சியது, எந்த அளவுக்கு அருவியாகப் பாய்ந்தோடியது என்பதை நான்தான் உணர்வேன். மற்றவர்கள் அதை உணர முடியாது. காரணம், அவை சிந்தித்து செயல்படுத்தி இன்றைக்கு இது எப்படி நடைபெறுகிறது என்பதற்காக ஆட்சிப் பொறுப்பிலே இருந்தாலும்கூட என்னுடைய இயக்கத்தைச் சேர்ந்த நண்பர்களுடைய ஒத்துழைப்போடு தோழமைக்கட்சியில் இருக்கின்ற தோழர்களுடைய ஒத்துழைப்போடு இவைகளுக்கெல்லாம் மேலாக அரசு அலுவலாளர்கள், அரசு அதிகாரிகள் இவர்களுடைய ஒத்துழைப்போடு இந்தக் காரியம் இன்றைக்கு நடைபெற்றிருக்கின்றது.

பார்த்தேன், அவர்களுடைய முகமெல்லாம் எப்படி களைபொருந்திக் காணப்பட்டது. எவ்வளவு சிரித்த முகத்தோடு என்னை வரவேற்றார்கள் என்பதை எண்ணும்போது, மகனை வரவேற்கின்ற மாதாவைப்போல், பிள்ளையை வரவேற்கின்ற பெற்றோரைப்போல், தம்பியை வரவேற்கின்ற அண்ணனைப்போல், அண்ணனை வரவேற்கின்ற தம்பியைப்போல், உற்றார் உறவினர்களாக நின்று கொண்டு அங்கே என்னை வரவேற்ற அந்தக்காட்சி இருக்கிறதே, நான் சாகிற வரையில் மறக்கமுடியாத உணர்ச்சி மிக்க காட்சி அது.

## இந்தப் பணி தொடரும்

என்னுடைய வாழ்நாளில் பொதுவாழ்க்கையிலே பெரியாருடைய கட்டளைக்கேற்ப பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உத்தரவுக்கேற்ப எத்தனையோ காரியங்களிலே ஈடுபட்டிருக்கின்றேன். ஆனால், இன்று அவர்கள் இருவரும் உயிரோடு இல்லை உயிரோடு இல்லாவிட்டாலும், என்னுடைய உணர்வோடு கலந்திருக்கின்றார்கள். உணர்வோடு கலந்திருக்கின்ற அந்த உத்தமர்களுடைய ஆணைக்கு ஏற்ப நான் ஆற்றியிருக்கின்ற பணிகளிலெல்லாம் மிகச் சிறந்த பணிதான் இன்றைய தினம் ஆற்றி உள்ள பணி என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பணி தொடரும், இந்த ஒரு நாள் மாத்திரமல்ல;

நான் வெங்கடாபுரத்திலே போய் இறங்கியபோது சுற்றிப் பார்த்தேன், தலைமைச் செயலகமே – தலைமைச் செயலகம் என்றால் அண்ணா அறிவாலயம் அல்ல, நம்முடைய செயின்ட் ஜார்ஜ் கோட்டையே அங்கே

வந்திருக்கின்ற காட்சியைப் பார்த்தேன். எல்லா செயலாளர்களும் அங்கே வந்திருக்கிறார்கள் என்றால், ஏதோ திருமண வீட்டிற்கே வந்ததைப் போல வந்திருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு அதிசயம், அந்த அதிசயத்தை நடத்திக் காட்டியிருப்பது இந்த அரசாக இருப்பதால்தான் அத்தனைபேரும் வந்தார்கள், அவர்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு உணர்ச்சியோடு, எவ்வளவு உளமார்ந்த உணர்வோடு, இந்தப் பணியிலே ஈடுபட்டார்கள் என்பதை நான் மிக மிக நன்றாக அறிவேன்.

அதைப்போலவே தமிழகத்திலே ஒவ்வொரு மாவட்டத்திலும் நான் இங்கே இந்த நிகழ்ச்சியை நடத்தி வைப்பதைப்போல், ஒவ்வொரு மாவட்டத்திலும், நம்முடைய அமைச்சர் பெருமக்கள் – முன்னோடிகள் இவர்கள் முன்நின்று நிலமற்ற விவசாயிகளுக்கு இந்த நிலங்களை வழங்குகின்ற – பிரித்து வழங்குகின்ற இன்னாருக்கு இவ்வளவு நிலம் என்று பிரித்து வழங்குகின்ற நிகழ்ச்சி இன்று காலை முதல் மாலை வரையில் தமிழகத்திலே பல பகுதிகளிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. காரணம், இன்றைக்கு 25 ஆயிரம் ஏக்கரா, 26 ஆயிரம் பேருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், இந்த நிகழ்ச்சி இன்றோடு முடியாது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

நான் நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் பெரியசாமியையும் அதிகாரிகளையும், மேற்கு வங்கத்திற்கு அனுப்பி வைத்தேன்; கடந்த இரண்டு திங்களுக்கு முன்பு. அங்கே இப்படி நிலத்தை ஏழை – எளிய விவசாயிகளுக்குத் தருவதாக செய்தி வந்தது. அங்கே எப்படி எந்த முறையை கையாளுகிறார்கள் என்பதைச் சென்று பார்த்து விவரம் அளியுங்கள் அன்று அவர்களை அனுப்பி வைத்தேன். சென்றவர்கள் திரும்பி வந்து விளக்கினார்கள் எப்படி அங்கே வழங்கப்படுகிறது என்று கடந்த 10 ஆண்டு காலமாக, 15 ஆண்டு காலமாக ஒவ்வொரு ஆண்டும் இவ்வளவு நிலம் ஏழை – எளிய விவசாயிகளுக்கு பங்கிட்டுத் தருவதென்று அங்கே பங்கிட்டுத் தரப்படுகின்ற செய்தியை எனக்குச் சொன்னார்கள்.

நானும் சொல்லுகின்றேன் மேற்கு வங்கத்திலே 10 ஆண்டு காலத்திலே எவ்வளவு நிலம் கொடுக்கிறார்கள் என்ற விவரத்தை அறிந்து இந்த 5 ஆண்டு காலத்திற்குள்ளாக உங்கள் அனைவருக்கும் வழங்க ஏழை – எளிய விவசாயிகளுக்கு வழங்க தி.மு.கழக அரசு பாடுபடும் – பணியாற்றும் – இந்தப் பணி தொடர்ந்து நடக்கும் என்பதை உங்களுக்கெல்லாம் நான் உண்மையான உணர்வோடு, நெஞ்சார்ந்த உணர்வோடு எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே பேசிய நண்பர்கள் சுதர்சனம் உட்பட அருமை நண்பர் ஆர்க்காடு வீராசாமி உட்பட அத்தனைபேரும் இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் இந்தச் சாதனைகளையெல்லாம் எதிர்க்கட்சிகள் சில கிண்டல் செய்வதாகச் சொன்னார்கள். எதிர்ப்புக் காட்டுவதாகச் சொன்னார்கள். நான் அதற்காகக் கவலைப்படவில்லை. எதிர்க்கட்சி என்று இருந்தால், அந்தக் கட்சியினுடைய வேலை ஆளுங்கட்சியை எதிர்த்துப் பேசுகின்ற வேலைதான். அந்த வேலையை அவர்கள் செய்யும் பொழுது நாம் அதை உற்சாகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எதிர்ப்பு இல்லாவிட்டால் நாம் இந்த அளவிற்கு வளர முடியாது – உயர முடியாது.

எனவே, எதிர்நீச்சல் போட்டே வளர்ந்த இயக்கம் இந்த இயக்கம், எதிர்நீச்சல் போட்டே வளர்ந்தவர்; ஒரு இயக்கத்தை வளர்த்தவர் தந்தை பெரியார் எனவே அவருடைய பேரப் பிள்ளைகளாகிய நாம், பேரறிஞர் அண்ணாவின் தம்பிகளாகிய நாம் நடத்துகின்ற இந்த ஆட்சியில் எவ்வளவுதான் எதிர்நீச்சல் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் தயங்காமல் நீச்சல் போடுவோம்.

ஆனால் ஒன்று சொல்கின்றேன் கரையேறுவது நாங்களாகத்தான் இருக்கும் என்பதை நான் அவர்களுக்கு எடுத்துக்காட்டி; நாங்கள் கரையேறுவது மாத்திரமல்ல; தமிழ்நாட்டு மக்களையும் கரையேற வைப்போம். தமிழ்நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு வழங்குவோம். விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு பாட்டாளிகளுக்கு பக்கபலமாக இருப்போம். அதற்கு நீங்கள் எங்களுக்கு பக்கபலமாக எல்லா நேரங்களிலும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த நேரத்திலே உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கின்றேன்.

(திருவள்ளூரில்
தந்தை பெரியார் பிறந்த நாளான
17–9–2006 அன்று ஏழை விவசாயக்
குடும்பங்களைச்சேர்ந்த
1,036 பேருக்கு இலவச நிலம் வழங்கி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை)

# காவல்துறையை கணினிமயப்படுத்தி நவீனமயமாக்கும் திட்டம்



**கலைஞர் மு. கருணாநிதி**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

1. தமிழ்நாட்டிலுள்ள 243 காவல் துறை உட்கோட்டங்களுள் (Dy.S.P. Office) வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் 69 அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்ட முடிவு.

முதற்கட்டமாக இந்த ஆண்டு பத்து அலுவலகமும், குடியிருப்பும் சேர்ந்த கட்டடங்கள் குடியாத்தம், ஆம்பூர் திருப்பத்தூர், (வேலூர் மாவட்டம்) பென்னாகரம், அரூர், பொள்ளாச்சி, செய்யார், திருவாரூர், சமயநல்லூர், ஆலங்குளம் ஆகிய நகரங்களில் கட்ட முடிவெடுக்கப் பட்டுள்ளது.

2. காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் ரூபாய் இரண்டு கோடி மதிப்பில் ஆவடியில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் இரண்டாம் அணிக்கு கட்டடம், கிடங்கு, காவலர்கள் தங்கும் இடம் ஆகியவற்றை கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

3. திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை, தருமபுரி, கன்னியாகுமரி மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் காவலர்களுக்கான தங்கும் விடுதிகள் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

4. இந்த ஆண்டு பின்வரும் 25 காவல் நிலையங்களுக்கான கட்டடங்களின் தரத்தினை உயர்த்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | காவல் நிலையம் |
|---|---|
| 1. | வாலாஜாபாத் |
| 2. | வேப்பாக்கம் |
| 3. | ஆரணி தாலுகா |
| 4. | செய்யார் |
| 5. | ஒசூர் சிப்காட் |
| 6. | ஒசூர் நகரம் |

| | |
|---|---|
| 7. | மதிகோன்பாளையம் |
| 8. | பி1 பஜார் |
| 9. | பல்லடம் |
| 10. | பொள்ளாச்சி கிழக்கு |
| 11. | ஆண்டிமடம் |
| 12. | வெள்ளியணை |
| 13. | லாலாபேட்டை |
| 14. | சமயபுரம் |
| 15. | பி16 அண்ணாநகர் |
| 16. | திருவில்லிப்புத்தூர் நகரம் |
| 17. | திண்டுக்கல் வடக்கு நகரம் |
| 18. | இளையான்குடி |
| 19. | களக்காடு |
| 20. | புதுக்கடை |
| 21. | சின்னமனூர் |
| 22. | முரப்பநாடு |
| 23. | திருமங்கலம் நகரம் |
| 24. | இராமநாதபுரம் நகரம் |
| 25. | பாளையங்கோட்டை |

5. பின்வரும் 12 நகர காவல் நிலையங்களுக்கு ரூ.318 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | காவல் நிலையம் |
|---|---|
| 1. | வந்தவாசி அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 2. | போளூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 3. | செங்கம் அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 4. | பல்லடம் அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 5. | பீளமேடு |
| 6. | சரவணப்பட்டி |
| 7. | திருவரங்கம் அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 8. | லால்குடி அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 9. | திருவாரூர் நகரம் |
| 10. | சிலைமான் |
| 11. | விக்கிரமங்கலம் |
| 12. | எம்.பாடுபட்டி |

6. பின்வரும் 14 ஊரக காவல் நிலையங்களுக்கு ரூ.224 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்ட முடிவு.

| வ.எண். | காவல் நிலையம் |
|---|---|
| 1. | திருவண்ணாமலை தாலுகா |
| 2. | தூக்கனம்பாக்கம் |
| 3. | ஆலங்குடி அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 4. | ஜெகதாப்பட்டினம் |
| 5. | இலுப்பூர் |
| 6. | அரும்பாவூர் |
| 7. | குன்னம் |
| 8. | வடக்காடு |
| 9. | ஆத்தூர் |
| 10. | ராதாபுரம் |
| 11. | சாத்தான்குளம் |
| 12. | களியக்காவிளை |
| 13. | திருப்பூர் ஊரக |
| 14. | நெகமம் |

7. இராமநாதபுரம் மாவட்டம் கமுதி ஆயுதப்படைப் பிரிவில் உள்ள காவலர்களுக்கு தங்கும் விடுதி கட்டப்படும்.

8. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆயுதங்களை வைக்கும் பாதுகாப்பு அறையும், ஆயுதப்படை வளாகமும் ஒரு கோடி ரூபாய்ச் செலவில் அமைக்கப்படும்.

9. சென்னைப் பெருநகரில், வியாசர்பாடி, பழவந்தாங்கல், புழல் ஆகிய காவல் நிலையங்களுக்கு ரூ.190 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

10. மருதம் வளாகத்திலுள்ள அதிரடிப்படைப் பள்ளி, ஆண் மற்றும் பெண் காவல் பணியாளர்களுக்கும், அதிரடிப்படையினருக்கும் ரூ.144 இலட்சம் மதிப்பீட்டில் தனியான பயிற்சி மையம் ஒன்றும், தங்குமிடங்களும் கட்டப்படும்.

11. தமிழ்நாடு தடய அறிவியல் துறைக்கு ரூ. 228 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நவீன உபகரணங்கள் வாங்கப்படும்.

12. இந்த ஆண்டில் சென்னைப் பெருநகர் உள்ளிட்ட தமிழ்நாடு காவல்துறையை கணினிமயப்படுத்தி நவீன மயமாக்கும் திட்டத்திற்கு ரூ.378 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

13. ஊர்க்காவல் படை பற்றி இங்கே பேசப்பட்டது. ஊட்டியில் உள்ள ஊர்க்காவல் படைப் பயிற்சி மையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

14. சிவகங்கை, புதுக்கோட்டை, நாகர்கோவில், உதகமண்டலம் ஆகிய நான்கு நகரங்களில் உள்ள ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகங்களுக்கு கட்டடங்கள் கட்டப்படும்.

15. கடற்கரை காமராஜர் சாலையில் தற்போதுள்ள காவல் துறை இயக்குநர் அலுவலக வளாகத்திற்குள்ளேயே, புதிதாக கூடுதல் கட்டடம் ரூ.22 கோடி செலவில் கட்டப்பட முடிவெடுக்கப்பட்டுள்ளது. காவல்துறை இயக்குநர் அலுவலகம் தற்போது இயங்கி வரும் பாரம்பரியமிக்க கட்டடத்திற்கு எவ்வித சேதமும் ஏற்படாமல், இதே பாணியில் இந்தப் புதிய கூடுதல் கட்டடமும் கட்டப்படும்.

இரண்டாண்டு காலத்தில் முடிவடையக்கூடிய இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு முதற்கட்டமாக பத்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது.

16. சென்னை, எழும்பூர், பாந்தியன் சாலையில் உள்ள சென்னை மாநகர காவல் ஆணையாளர் அலுவலகம் அமைந்துள்ள கட்டடத்தில் இட வசதி போதுமானதாக இல்லை.

தற்போது போக்குவரத்துப் பிரிவு செயல்படும் பழைய கட்டடத்தை காவல்துறை வீட்டு வசதிக் கழக அதிகாரிகள் ஆய்வு செய்து பயன்படுத்துவதற்கு அது ஏற்றதல்ல என்று அறிவித்துள்ளனர். அந்த வளாகத்தில் 5.5 ஏக்கர் காலி இடம் உள்ளது. அங்கே அனைத்து மாநகர காவல் அலுவலகங்களும் ஒருங்கே செயல்படும் வகையில், அடுக்கு மாடி கட்டடம் ஒன்று ரூ. 15 கோடி திட்ட மதிப்பீட்டில் இரண்டு கட்டங்களாக கட்டப்படும். இந்நிதியாண்டிலேயே ரூ.10 கோடி செலவில் முதற்கட்ட வேலைகள் தொடங்கும்.

17. வண்டலூர் அருகிலுள்ள ஊனமாஞ்சேரியில் தமிழ்நாடு காவல்துறை வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் கட்டப்பட்டு வரும் தமிழ்நாடு காவல் பயிற்சிக் கழகக் கட்டடத்திற்கான முதல் கட்டப் பணி 2007ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் முடிவுறும்.

அதன் பின், அங்கு பயிற்சிக் கழகம் செயல்படும்.

முதற்கட்டமாக கணினி மற்றும் அதன் உபகரணங்கள், வாங்குவதற்காக ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது.

18. 31.12.1988 வரை குழல் ஊதும் காவலர்களாக பணியமர்த்தப்பட்ட 55 இரண்டாம் நிலைக் காவலர்கள், 1993 மற்றும் 1994 ஆம் ஆண்டில் முறையான இரண்டாம் நிலைக் காவலர்களாக மாற்றப்பட்டு, பத்து ஆண்டு காலம் பணி முடித்த நிலையில், 31.12.2004 முதல், முதல்நிலைக் காவலர்களாக பதவி தரம் உயர்த்தப்படுவார்கள்.

19. 1989 ஆம் ஆண்டில், தி.மு.கழக ஆட்சியில் இரண்டாம் நிலைக் காவலர்களாக பணி நியமனம் செய்யப்பட்ட 94 பேர், தரம் உயர்த்தலுக்கு முழுத் தகுதி பெற்றிருந்தும், முன்னர் அளிக்கப்பட்ட கருத்துருவில் இவர்களது பெயர் விடுபட்டதால், அவர்களை முதல்நிலைக் காவலர்களாக தரம் உயர்த்துவதோடு, தற்போது அவர்கள் 15 ஆண்டுகாலப் பணியை முடித்துள்ளதால், அவர்களது பணியை தலைமைக் காவலர்களாக தரம் உயர்த்தப்படுவார்கள்.

**“இந்த ஆண்டில் சென்னைப் பெருநகர் உள்ளிட்ட தமிழ்நாடு காவல்துறையை கணினிமயப்படுத்தி நவீனமயமாக்கும் திட்டத்திற்கு ரூ.378 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.”**

20. 1995 ஆம் ஆண்டு, அ.தி.மு.க. ஆட்சியில் பணியில் அமர்த்தப்பட்ட 2,207 இரண்டாம் நிலைக் காவலர்கள், 2005 ஆம் ஆண்டில் பத்து ஆண்டு காலப் பணியை முடித்துள்ள நிலையில், இவர்கள் அனைவரையும் முதல் நிலைக் காவலர்களாக தரம் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது 6,563 ரூபாய் மாத ஊதியம் பெற்று வரும் இரண்டாம் நிலை காவலர்கள் இனி முதல் நிலை காவலர்களாகப் பதவி உயர்வு பெற்று மாத ஊதியமாக ரூ. 6,842 பெறுவார்கள்.

21. (Band Men) 2000 ஆம் ஆண்டில் குழல் ஊதும் முதல்நிலைக் காவலர்களாக தரம் உயர்த்தப்பட்ட 47 பேர், ஐந்தாண்டு காலப் பணியை முடித்துள்ள நிலையில் அவர்களை குழல் ஊதும் தலைமைக் காவலர்களாக பதவி உயர்த்துவதோடு, எவ்வித பதவி உயர்வுமின்றி 20 ஆண்டுகாலம் குழல் ஊதும் காவலர்களாகப் பணிபுரிந்தவர்களின் தரத்தை, அவர்களோடு பணியில் சேர்ந்தவர்களுக்கு இணையாக, 07.07.2000 முதல் குழல் ஊதும் முதல் நிலைக் காவலர்களாக தரம் உயர்த்துவதோடு, குழல் ஊதும் தலைமைக் காவலர்களாகவும் தரம் உயர்த்தப்படுகிறார்கள்.

22. ஆயுதப் படையில் 01.06.2005 அன்று தலைமைக் காவலர்களாக 10 ஆண்டு காலம் பணி முடித்ததோடு, மொத்தம் 25 ஆண்டுகாலம் பணியாற்றியுள்ள 42 தலைமைக் காவலர்களுக்கு, அ.தி.மு.க. ஆட்சி கொடுக்கத் தவறிய பதவி உயர்வினை 01.06.2005 முதலே முன்தேதியிட்டு வழங்கி, அவர்களை சிறப்பு சார்பு ஆய்வாளர்களாகப் பதவி உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கருத்துருக்களின் மூலம், 2,447 காவல் பணியாளர்கள் பயனடைவார்கள் என்பதோடு இதற்காக ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஒரு லட்சம் ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக செலவாகும்.

23. தமிழகத்தின் தேசிய நெடுஞ்சாலைகளில் விபத்துக்களைக் குறைக்கவும், போக்குவரத்தைச் சீர்படுத்தி, விதிகளை செயல்படுத்துவதில் சிறப்பான கட்டுப்பாட்டைப் பராமரிக்கவும் பின்வரும் இடங்களில் ஒவ்வொன்றிலும் தலா ஓர் ஆய்வாளர், 2 உதவி ஆய்வாளர்கள், 4 தலைமைக் காவலர்கள், 4 முதுநிலைக் காவலர்கள், 12 இளநிலைக் காவலர்கள் மற்றும் ஓர் இரண்டாம் நிலை வாகன ஓட்டுநர் காவலர்களைக் கொண்ட 20 போக்குவரத்துக் காவல் நிலையங்களை 8.27 கோடி ரூபாய் செலவில் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. அவையாவன :–

| வரிசை எண். | போக்குவரத்து காவல் நிலையம் அமைக்கப்படும் இடங்கள் |
|---|---|
| 1. | 1. கூடுவாஞ்சேரி |
| | 2. செங்கல்பட்டு |
| | 3. திருப்பெரும்புதூர் |
| 2. | 4. உளுந்தூர்பேட்டை |
| | 5. விக்கிரவாண்டி |
| 3. | 6. பெருமாநல்லூர் |
| | 7. சமயபுரம் |
| 4. | 8. திருமங்கலம் |
| | 9. சமயநல்லூர் |
| 5. | 10. புதுச்சத்திரம் |
| 6. | 11. ஓமலூர் |
| | 12. சங்ககிரி |
| | 13. ஆத்தூர் |
| 7. | 14. காங்கேயம் |
| | 15. பவானி |
| 8. | 16. வேடசந்தூர் |
| | 17. ஒட்டன்சத்திரம் |
| 9. | 18. வள்ளியூர் |
| | 19. சாத்தூர் |
| | 20. பெரம்பலூர் |

24. தேசிய நெடுஞ்சாலைகள் அமைந்துள்ள காஞ்சிபுரம், விழுப்புரம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, நாமக்கல், சேலம், ஈரோடு, திண்டுக்கல், திருநெல்வேலி ஆகிய பத்து மாவட்டத் தலைநகரங்களிலும் சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நடமாடும் நீதிமன்றங்களைப் போல ஒரு கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் அமைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

25. கோவை மாவட்டத்தில் கே.ஜி. சாவடி புறக்காவல் நிலையம், திருச்சி மாவட்டத்தில் கொள்ளிடம், மணிகண்டம் புறக்காவல் நிலையங்கள், விழுப்புரம் மாவட்டத்தில் மூங்கில் துறைப் பட்டு புறக்காவல் நிலையம், கடலூர் மாவட்டத்தில் நடுவீரன் பட்டு புறக் காவல் நிலையம், வேலூர் மாவட்டத்தில் மேல்பட்டி புறக்காவல் நிலையம், மதுரை மாவட்டத்தில் அப்பன் திருப்பதி புறக் காவல் நிலையம், தேனி மாவட்டத்தில் ஹைவேவிஸ் புறக் காவல் நிலையம், கன்னியாகுமரி மாவட்டத்தில் கொட்டியோடு புறக்காவல் நிலையம், திருச்சி இரயில்வே மண்டலத்தில் திருப்பூர் புறக்காவல் நிலையம் ஆகியவற்றை காவல் நிலையங்களாக 2.96 கோடி ரூபாய்ச் செலவில் தரம் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

26. சென்னை நகரத்தில் எம்.எம். காலனியில் உள்ள எம்.2 காவல் நிலையத்தை 4ஆம் தரத்திலிருந்து இரண்டாம் தர காவல்

நிலையமாகவும், மாங்காட்டில் உள்ள டி.14 காவல் நிலையத்தை 4ஆம் தரத்திலிருந்து இரண்டாம் தர காவல் நிலையமாகவும், குன்றத்தூரில் உள்ள டி.13 காவல் நிலையத்தை 5ஆம் தரத்திலிருந்து இரண்டாம் தர காவல் நிலையமாகவும், முத்தா புதுப்பேட்டையில் உள்ள டி.8 காவல் நிலையத்தை நான்காம் தரத்திலிருந்து இரண்டாம் தர காவல் நிலையமாகவும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் கல்பாக்கத்தில் உள்ள நான்காம் தர காவல் நிலையத்தை இரண்டாம் தர காவல் நிலையமாகவும், கடலூர் மாவட்டத்தில் சிதம்பரத்தில் உள்ள நான்காம் தர காவல் நிலையத்தை மூன்றாம் தர காவல் நிலையமாகவும், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டையில் உள்ள நான்காம் தர காவல் நிலையத்தை மூன்றாம் தர காவல் நிலையமாகவும், தருமபுரி மாவட்டத்தில் மதிகோண் பாளையத்தில் உள்ள நான்காம் தர காவல் நிலையத்தை மூன்றாம் தர காவல் நிலையமாகவும், தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணாபுரத்தில் உள்ள ஐந்தாம் தர காவல் நிலையத்தை மூன்றாம் தர காவல் நிலையமாகவும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊத்தங்கரையில் உள்ள நான்காம் தர காவல் நிலையத்தை இரண்டாம் தர காவல் நிலையமாகவும், மதுரை மாவட்டத்தில் ஒத்தக்கடையில் உள்ள ஐந்தாம் தர காவல் நிலையத்தை மூன்றாந்தர காவல் நிலையமாகவும், திருப்பரங்குன்றத்தில் உள்ள நான்காம் தர காவல் நிலையத்தை மூன்றாந்தர காவல் நிலையமாகவும், திருநெல்வேலி மாவட்டத்தில் கூடங்குளத்தில் உள்ள ஐந்தாம் தர காவல் நிலையத்தை நான்காம் தர காவல் நிலையமாகவும், வேலூர் மாவட்டத்தில் (ஞானசேகரன் வேண்டுகோளையேற்று) சத்துவாச்சேரியில் உள்ள நான்காம் தர காவல் நிலையத்தை இரண்டாம் தர காவல் நிலையமாகவும் 4.18 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்த முடிவு செய்யப் பட்டுள்ளது.

**“31.12.1988 வரை குழல் ஊதும் காவலர்களாக பணியமர்த்தப்பட்ட 55 இரண்டாம் நிலைக் காவலர்கள், 1993 மற்றும் 1994 ஆம் ஆண்டில் முறையான இரண்டாம் நிலைக் காவலர்களாக மாற்றப்பட்டு, பத்து ஆண்டு காலம் பணி முடித்த நிலையில், 31.12.2004 முதல், முதல்நிலைக் காவலர்களாக பதவி தரம் உயர்த்தப்படுவார்கள்.”**

27. தமிழ்நாடு காவல்துறையில் மொத்தம் 98,897 காவல் பணியாளர்கள் உள்ளனர். தற்போது 42,016 குடியிருப்புகள் உள்ளன. இதன் மூலம், 42.48 சதவிகித காவல் பணியாளர்களுக்கு வீட்டு வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே, 56,881 குடியிருப்புகளைக் கட்டுவது அவசியமாகிறது. தற்போது 5,373 காவல் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. அரசு கொள்கையின்படி ஒவ்வொரு ஆண்டும் 3000 குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. அது போல இந்த ஆண்டும் 3,000 குடியிருப்புகள் புதிதாகக் கட்டப்படும். இதற்கு 135 கோடி ரூபாய் ஆகுமென தோராயமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

28. தலைமைக் காவலர் ஒருவர் காவல்நிலைய உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற வயது உச்ச வரம்பு 53 என்றும், தலைமைக் காவலர் ஒருவர் ஆயுதப் படையில் இருந்து உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற வயது உச்சவரம்பு 55 என்றும், உதவி ஆய்வாளர் பதவியிலிருந்து காவல் நிலைய ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற வயது உச்சவரம்பு 55 என்றும், ஆய்வாளர் பதவியிலிருந்து துணைக் கண்காணிப்பாளராகப் பதவி உயர்வு பெற வயது உச்ச வரம்பு 55 என்றும் தற்போது நிபந்தனைகள் உள்ளதால் பெரும்பாலானவர்கள் பதவி உயர்வு பெற முடியாமல் ஓய்வு பெற வேண்டிய நிலைமை உள்ளது.

அரசுப் பணிகள் பெரும்பாலானவற்றில் இவ்வாறு வயது உச்ச வரம்பு இல்லாத நிலை உள்ளதால், காவல் துறையினர் இந்த நிபந்தனை காரணமாகப் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே, பதவி உயர்வு பெற தற்போது இவர்களுக்குள்ள இந்த வயது உச்சவரம்பு அறவே நீக்கப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். வயது உச்ச வரம்பை நீக்குவதன் காரணமாக உடனடியாக 450 காவல் துறை அதிகாரிகள் மற்றும் சார்நிலை காவல் பணியாளர்கள் பயனடைவதோடு, வரும் ஆண்டுகளில் தொடர்ந்து பல்லாயிரவர் பயனடைவர்.

29. தமிழ்நாடு காவல்துறை சார்புப் பணி சிறப்பு விதியின்படி சரக பதவி உயர்வுக்கான வாரியம், எழுத்துத் தேர்வையும், எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு உடற்பயிற்சித் தேர்வுகள் உள்ளிட்ட நேரடித் தேர்வுகளையும் நடத்தி, அதில் தேர்ச்சி பெற்ற தலைமைக் காவலர்களை உதவி ஆய்வாளர்களாக (உள்ளூர் மற்றும் ஆயுதப்படை) பதவி உயர்வு அளிக்க தேர்ந்தெடுக்கும் முறை தற்போது உள்ளது.

காவல் துறையில், உதவி ஆய்வாளர் பணிக்குக் கீழே உள்ள பதவிகளுக்கோ, உதவி ஆய்வாளர் பணிக்கு மேல் உள்ள பதவிகளுக்கோ இத்தகைய பதவி உயர்வுக்கான தேர்வுகள் நடத்தப்படுவதில்லை. எனவே, தலைமைக் காவலர்கள் மட்டுமே பதவி உயர்வுக்கான தேர்வுகளைத் தற்போது எழுதி வருகின்றனர். இத்தகைய போக்கு தலைமைக் காவலர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பணிமூப்பு மற்றும் பணிப் பதிவேடுகளை ஆதாரமாகக் கொண்டு, இதர பதவிகளுக்கு பதவி உயர்வு அளிப்பதைப் போன்று, இவர்களுக்கும் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை தலைமைக் காவலர்களிடையே நீண்ட பல ஆண்டுகளாக இருந்து வருவதையேற்று, இந்த அரசு இனி தலைமைக் காவலர் பதவியிலிருந்து உதவி ஆய்வாளராக பதவி உயர்வுக்கு நடைபெறும் தேர்வு முறையை ரத்து செய்கிறது.

30. பத்தாயிரம் இரண்டாம் நிலைக் காவலர்களை தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டு, அதிலே முதற்கட்டமாக இந்த ஆண்டு 5,000 பேரை தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

31. தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றும் காவலர் குடும்பங்களைச் சார்ந்த பெண்களுக்குப் பொருளாதாரப் பயன்கள் கிடைக்கும் வகையில், ஏற்கெனவே தி.மு. கழக ஆட்சியில் நடைமுறையில் இருந்தது போல், தமிழ்நாடு சிறப்புக் காவலர் பெண்கள் பனியன் தயாரிப்போர் தொழில் கூட்டுறவு சங்கத்திலிருந்து நேரடியாக விலைப் புள்ளிகள் பெற்று பனியன்களை தயாரித்து வழங்கிட இந்தச் சங்கத்திற்கு ஆணைகள் வழங்கப்படும்.

32. இதுவரை தமிழ்நாடு ஆயுதப் படையில் பணியாற்றும் காவலர்களுக்கு விடுப்புப் பயணச் சலுகை (Leave Travel Concession) கிடையாது.

இனி அவர்களுக்கு காவல் துறையில் பணியாற்றும் காவலர்களுக்கு இருப்பதைப் போல விடுப்புப் பயணச் சலுகை வழங்கப்படும்.

33. காவல் துறையில் பணியாற்றுவோர் பல்வேறு இடையூறுகளைச் சந்திக்க வேண்டிய நிலையில் பணியாற்றி வருகிறார்கள். சமூக விரோத சக்திகளையும் தொடர்ந்து கொடும் குற்றங்களைப் புரிவதையே தொழிலாகக் கொண்டிருப்போரையும் அடக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது காவல் துறையில் இருப்போர் உயிரையே பணயம் வைத்து கடமைகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு இடர்ப்படி என்ற தலைப்பில் ஊக்க நிதி மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிதியின் அளவு நெடுங்காலமாக உயர்த்தப் படாமலே இருந்து வருகிறது. எனவே காவலர் முதல் ஆய்வாளர் வரை தற்போது மாதம் ஒன்றுக்கு தலா 60 ரூபாய் என்ற அளவில் வழங்கப்படும் இடர்ப்படியை இனி 120 ரூபாயாக உயர்த்துவது என்று இந்த அரசு முடிவெடுத்துள்ளது.

அதைப் போலவே துணைக் கண்காணிப் பாளர்களும், கூடுதல் கண்காணிப்பாளர்களும் தற்போது இடர்ப்படியாகப் பெற்று வரும் ரூபாய் 70 என்பதை இனி 140 ரூபாயாக உயர்த்துவது என்றும் முடிவெடுக்கப் பட்டுள்ளது.

இந்த உயர்வு 1–9–2006 முதல் காவல் துறையில் நடைமுறைக்கு வரும்.

34. காவல் துறையில் "இடர்ப்படி" உயர்த்துவது என்று முடிவெடுக்கப்பட்டதைப் போலவே, தீயணைப்புத் துறையிலும் தீயணைப்போருக்கு (Fireman) தற்போதுள்ள இடர்ப்படி மாதம் ஒன்றுக்கு நாற்பது ரூபாய் என்பதை இனி 120 ரூபாயாக உயர்த்துவதென்றும், மாவட்டத் தீயணைப்புத் துறை அலுவலருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 60 ரூபாய் என்பதை 140 ரூபாயாக உயர்த்துவது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்த உயர்வு 1–9–2006 முதல் அமலுக்கு வரும்.

35. முதல் தகவல் அறிக்கைக்கான படிவங்களை அச்சியற்றுவதிலும், வினியோகிப்பதிலும் சரியான நெறிமுறைகள் கையாளப்படாத காரணத்தால் பல்வேறு முறைகேடுகள் ஏற்பட்டு வருகின்றன. இதனைக் கருத்திற் கொண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கான படிவங்களை அரசு அச்சகங்களில் மட்டுமே அச்சியற்ற வேண்டுமென்றும், தனியார் அச்சகங்களில் அச்சியற்றும் நடைமுறையை அறவே ஒழித்திட வேண்டுமென்றும் அரசு அச்சகங்களில் படிவங்களை அச்சியற்றும்போது "பரிசு சீட்டு"க்களை அச்சியற்றிய போது மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு முறைகள் அனைத்தையும் கையாண்டு அச்சியற்றப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

36. காவல் நிலையங்களில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது பற்றி ஓர் அறிவிப்பு.

சம்பவம் எந்தக் காவல் நிலைய எல்லையில் நடைபெற்றது என்பதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், வழக்கு பதிவு செய்யத்தக்க குற்றம் நிகழ்ந்துள்ளதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் பெறப்படும்போது, நிலைய அதிகாரி, முதல் தகவல் அறிக்கையை அங்கேயே பதிவு செய்து, தக்க சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சம்பவம் தங்கள் எல்லைக்குள் நடைபெறவில்லை என்ற காரணத்தைக் கூறி, புகார் மனுவினை ஏற்றிட மறுக்கக் கூடாது.

பிற காவல் நிலைய எல்லைக்குள் குற்றம் நிகழ்ந்துள்ளதாக புகாரில் குறிப்பிடப் பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு, மேல் நடவடிக்கைக்காக அந்த முதல் தகவல் அறிக்கை மாற்றம் செய்யப்படும்.

வழக்குப் பதிவு செய்ய அவசியமில்லாத புகார்கள் அளிக்கப்படும்போது, அவை விசாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தால் தக்க தீர்வு காணப்பட வேண்டும்.

அனைத்துப் புகார்களும் பதிவு செய்யப் படுவதிலும், காலதாமதமின்றி சட்டரீதியான தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதிலும், இந்த அரசு முனைப்பாக செயல்படும்.

37. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டப் பேரவை குழுத் தலைவர் சிவபுண்ணியம் அவர்கள் நேரிலும், இங்கே பேசும்போது கூறிய கோரிக்கையினையேற்று அவரது தொகுதியில் உள்ள திருமக்கோட்டை என்ற ஊரை மையப்படுத்தி புதிய காவல் நிலையம் ஒன்றை ஏற்படுத்தித் தருவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

38. தேர்தல் அறிக்கையிலும், நிதி நிலை அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டுள்ள மூன்றாவது போலீஸ் கமிஷன் தலைவராக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. ஆர். பூர்ணலிங்கம் அவர்களையும்; துணைத் தலைவராக சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்களையும்; உறுப்பினர்களாக ஓய்வுபெற்ற டி.ஜி.பி. திரு.பி. காளிமுத்து, மற்றும் ஓய்வு பெற்ற சிறைத்துறை டி.ஜி.பி. திரு. ஜி. இராமச்சந்திரன் அவர்களையும், உறுப்பினர் செயலாளராக திரு. ராமானுஜம், ஐ.பி.எஸ். அவர்களையும் நியமிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

39. வளர்ந்து வரும் சென்னை மாநகரத்தின் தேவைக்கேற்ப போக்குவரத்துப் பிரச்சினைகளை கையாளவும் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும், வளர்ந்த நாடுகளில் உள்ளது போல சமீபத்திய உயர் தொழில்நுட்பச் சாதனங்களை (Latest High Tech Gadgets) கொண்ட நடமாடும் கண்காணிப்புப் பிரிவுகளை காவல் துறையில் ஏற்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதனையொட்டி, இருங்காட்டுக் கோட்டையில் உள்ள ஹூண்டாய் மோட்டார் நிறுவனம் நல்லெண்ண அடிப்படையில் (as a measure of goodwill) சென்னைப் பெருநகர காவல் துறையினரின் பயன்பாட்டுக்கென குளிர்சாதன வசதியுடன் கூடிய 100 ஆக்சண்ட் ரகக் கார்களை நன்கொடையாக வழங்கிட முன் வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வாகனங்களில் வளர்ந்த நாடுகளில் கையாளும் சமீபத்திய தொழில்நுட்ப சாதனங்களைப் பொருத்தி காவல் துறையினர் கண்காணிப்பு மற்றும் நெறிமுறைப்படுத்தும் பணிகளை மேற்கொள்வார்கள். இந்தக் கார்களை பயன்படுத்தும் அதிகாரிகள் கார்களுக்காக தனியே ஓட்டுநர்களை நியமனம் செய்து கொள்ளாமல் தாமே ஓட்டி சட்டம் ஒழுங்கு மற்றும் போக்குவரத்துகளை கண்காணித்து நெறிமுறைப்படுத்தும் பணிகளைக் கவனிப்பார்கள். இது ஒரு முன்னோடித் திட்டமாக சென்னை மாநகரில் அறிமுகப்படுத்தி செயல்படுத்தப்படும். இந்தியாவிலேயே முன் மாதிரியாக செயல்படுத்தவிருக்கும் இத்திட்டம் வெற்றி அடைந்த பிறகு தமிழகத்தின் மற்ற மாநகரப் பகுதிகளிலும் படிப்படியாக விரிவு படுத்தப்படும்.

❖ ❖ ❖



# 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் ரூ.750 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்

# 15-9-2006 அன்று இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை

இன்று ''பேரறிஞர் அண்ணா'' அவர்கள் பிறந்த நாள் அனைவரும் ''அண்ணா வாழ்க'' என்று முழக்கமிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் பெருமக்களும், ஆன்றோரும் சான்றோரும் இந்த வட்டாரத்திலே உள்ள சாதாரண சாமான்ய மக்களும், பாட்டாளி மக்களும், உழவர் பெருங்குடி மக்களும் திரண்டுள்ள இந்த மாபெரும் நிகழ்ச்சியில் – அண்ணா பிறந்த இந்த மாவட்டத்தில் தி.மு.கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய வெற்றியை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட பல வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுகின்ற தொடரில், அந்த வாக்குறுதிகளில் ஒன்றான வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குகின்ற விழா இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சட்டமன்ற உறுப்பினர் யசோதா அவர்கள், அந்த வாய்ப்பு 234 தொகுதிகள் இருந்தும் கூட யாருக்கும் கிடைக்காமல் தனக்குக் கிடைத்ததாக இங்கே பெருமிதம் கொண்டார். அவருடைய பெயரே யசோதா புராணக் கதையில் கண்ணன்; வாசுதேவனுக்கும் தேவகிக்கும் பிறந்தாலும்கூட, அவனை வளர்த்தது யசோதாதான். கண்ணன் நிலைதான் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கும் ஏற்பட்டிருக்கிறது. இந்த எண்ணத்தை வெளியிட்டு அதை செயலாக்கியவன் சேப்பாக்கம் தொகுதிக்குச் சொந்தக்காரனாக (கலைஞர்) இருந்தாலும்கூட தேவகியினுடைய பிள்ளை யசோதாவினால் வளர்க்கப்பட்டதைப் போல இப்பொழுது வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை வளர்க்கின்ற பொறுப்பு, அதை வாழ்த்துகின்ற பொறுப்பு, அதற்கான விழாவில் முக்கிய பங்கேற்கின்ற பொறுப்பு யசோதா அம்மையாருக்கு ஏற்பட்டிருக்கின்றது. மற்ற வளர்ப்பு மகனைப்போல வளர்த்துவிடாமல், இதை வளமான வளர்ப்பு மகனாக, வலிமையுள்ள வளர்ப்பு மகனாக, நாணயமான வளர்ப்பு மகனாக அவர் வளர்ப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்ற காரணத்தால்தான் இந்தத் தொகுதியைத் தேர்ந்தெடுத்து, அதிலும் அண்ணா பிறந்த மாவட்டத்தில் அமைந்துள்ள இந்தத் தொகுதியிலே இந்த விழாவை ஏற்பாடு செய்து நம்முடைய தோழமைக் கட்சிகளின் தலைவர்களை, பிரதிநிதிகளை எல்லாம் அழைத்து உங்களிடையே இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை வழங்குகின்ற பேற்றினை நான் பெற்றிருக்கிறேன்.

## ரூ. 750 கோடி ஒதுக்கீடு

இன்றைய தினமும், நாளைய தினம் சேர்ந்து, தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குகின்ற தொடக்க விழா நிகழ்ச்சியிலே வழங்குகின்ற பெட்டிகளின் எண்ணிக்கை 25 ஆயிரத்து 245. முதலில் 30 ஆயிரம் பெட்டிகள் என்று அறிவிக்கப்பட்டு, சரியான கணக்கெடுப்பில் கொஞ்சம் குறைந்து 25 ஆயிரத்து 245 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை தொடக்க விழாவிலே இன்றும், நாளைய தினம் அமைச்சர்கள் வழங்குகின்ற விழாவிலும் அளிப்பது என்றும், இதோடு நிறுத்தி விடாமல் தொடர்ந்து இந்த நிதியாண்டில் – அதாவது அடுத்த பட்ஜெட் படிக்கப்படுவதற்கு முன்பு தொடர்ந்து வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வண்ணத் தொலைக்காட்சி வசதி இல்லாத வீடுகளுக்கு வழங்க 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

சில பேர் ''இதற்கு நிதி எங்கே ? நிதி எங்கே ?'' என்று கேட்டார்கள். அந்த நிதியை எவ்வளவு ஒதுக்கியிருக்கிறோம் என்று நிதிநிலை அறிக்கையிலே தொடக்கத்திலேயே எடுத்துக்காட்டியிருக்கிறோம். இப்படி இன்றைக்கு தொடங்கி நாளைய தினம் வழங்க இருக்கின்ற தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி 9 கோடி ரூபாய்தான். 9கோடி ரூபாய்க்கு ஏறத்தாழ 30 ஆயிரம் பெட்டிகளை வழங்க முடிகிறது. என்றால், 750 கோடி ரூபாய்க்கு 25 இலட்சம் பெட்டிகள் வழங்க முடியும். வழங்கத்தான் போகிறோம். அதை இந்த ஆண்டுக்குள்ளாக செய்து முடிக்க போகிறோம். ஆட்சிப் பொறுப்புக்கு நமக்கென்று மக்கள் அளித்த தீர்ப்பின்படி ஆண்டுதோறும் தொடர்ந்து ''ஐந்தாண்டுகளில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீடே கிடையாது தமிழகத்தில்'' என்கின்ற அளவுக்கு இந்தப் பெட்டிகள் வழங்கப்படும். வேறிடத்திலே சில பெட்டிகள் பழைய காலத்திலே வழங்கப்பட்டதுண்டு. அந்தப்பெட்டி அல்ல நாம் வழங்கின்ற பெட்டி. இது உலகச் செய்திகளையெல்லாம் அறிவிக்கின்ற பெட்டி. கலையை விளக்குகின்ற பெட்டி. இலக்கியத்தை விளக்குகின்ற



பெட்டி. கருத்துக்களை எடுத்துச் சொல்லுகின்ற பெட்டி. இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி. இது எண்ணச் சோலையாக அமைகின்ற பெட்டி. இந்தப் பெட்டியை வழங்கப் போகிறோம் என்று அறிவித்தவுடன், யார் யாரோ என்னென்னவோ பேசினார்கள். அதையெல்லாம் எனக்கு முன்னால் இங்கே பேசிய அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த இந்தக் குழுவினுடைய உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். நான் அதற்கெல்லாம் விரிவான, விளக்கமான விடைகளைத் தேடிக் கொண்டிருக்கப் போவதில்லை.

"முப்பதாயிரம் பெட்டிகள்தானாம்'' என்று முணு முணுக்கிறார்கள் எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள். எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் அப்படி முணுமுணுத்தால் அது நியாயம். ஏனென்றால், எதிர்க்கட்சி என்று ஒன்று இருந்தால் எதையாவது சொல்ல வேண்டும். எதுவுமே சொல்லக்கூடாது என்று தடுப்பது ஜனநாயகம் ஆகாது. ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ன சொல்கிறது என்று உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தால்தான், ஆளுங்கட்சியே உருப்படும். எனக்கு நன்றாகத் தெரியும்.

**வள்ளுவரின் வாக்கு**

"நட்பு என்பது ஒருவரை ஒருவர் நேசிப்பது மாத்திரமல்ல; சிரித்து மகிழ்வது மாத்திரமல்ல; தவறு காணுகிற நேரத்தில் இடித்துரைக்க வேண்டும்.

**இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பார் இலானுங் கெடும்**

இடித்துச் சொல்பவர்கள் இல்லாத மன்னன், யாரும் கெடுக்கத் தேவையில்லாமலே தானே கெட்டு விடுவான்.''

என்று ஒரு எதிர்க்கட்சியினுடைய அவசியத்தை திருவள்ளுவர் – ஒரு நண்பர் எப்படி இருக்க வேண்டும் என்ற அந்தக் கருத்தினை திருக்குறளிலே அழகாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார். அப்படிப்பட்ட நண்பர்கள் எங்களுக்கு வாய்க்கவில்லை. அப்படி வாய்த்தவர்கள் எல்லாம் தோழமைக் கட்சி நண்பர்களாகத்தான் இருக்கிறார்களே அல்லாமல், எதிர்க்கட்சியிலே அவர்கள் இல்லை. தோழமைக்கட்சியிலே உள்ளவர்கள், இப்பொழுது இதற்காக மாறிக்கொள்ள வேண்டியிருக்கிறது. வள்ளுவருடைய வாக்கை நிறைவேற்ற வேண்டுமே என்று தி.மு.கழக ஆட்சியின் தோழமைக்கட்சித் தலைவர்களாக இருந்தாலும், "இடித்துச் சொல்வதற்காகவாவது ஒரு நாள் நாம் இப்படி மாறிக் கொள்வோம்'' என்று மாறிக்கொண்டு எங்களுக்கு அறிவுரை கூறவேண்டிய அவசியத்திலே நிற்கிறார்கள். அது எங்களுக்கு தேவைப்படுகிறது. அந்தத் தேவையை நாங்கள் உணர்ந்து, அதை வரவேற்கிற காரணத்தால்தான், நாங்கள் ஒழுங்கான பாதையில், நீங்களெல்லாம் பாராட்டக்கூடிய அளவிற்கு நடைபோட முடிகிறது என்பதை நான் உணராதவன் இல்லை. அந்த வகையிலேதான் – முப்பதாயிரம் பெட்டிகள்தான் கொடுக்கப் போகிறார்கள் என்று முணுமுணுத்தபோது நான் அவர்களைப் பற்றி கவலைப்படவில்லை. எதிர்க்கட்சிகளை அலட்சியப்படுத்தி – கவலைப் படவில்லை என்று சொல்லவில்லை. அவர்கள்

> “ஐந்தாண்டுகளில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீடே கிடையாது தமிழகத்தில்” என்கின்ற அளவுக்கு இந்த தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும்.

சொல்லித்தான் ஆக வேண்டும். ஆகவே சொல்கிறார்கள் என்ற நிலையிலே எதிர்க்கட்சிக்கு ஜனநாயக ரீதியிலே தரவேண்டிய மதிப்பை அளித்து நான் சொன்னேன். இப்பொழுதும் சொல்கிறேன். ஆனால், அதையே சாக்காக வைத்துக்கொண்டு பத்திரிகைகள் சில – முப்பதாயிரம்தான் கொடுக்கப் போகிறார், ஏமாற்றுகிறார் என்ற ரீதியிலும், பிரபல பத்திரிகைகள், சில வாரப் பத்திரிகைகள், நல்ல பத்திரிகைகள், நாணயமான பத்திரிகைகள், நடுநிலைப் பத்திரிகைகள் என்று நான் எண்ணுகின்ற ஏடுகள் கூட, “முப்பதாயிரம் தொலைக் காட்சிப் பெட்டிகள்தான், 6 கோடி தமிழ் மக்கள் வாழுகிற தமிழகத்தில் பாக்கி பேருக்கு அவர் என்ன கொடுக்கப் போகிறார்'' என்றெல்லாம் இன்றளவும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். படிப்படியாகத்தான் எதையும் செய்ய முடியும்.

## வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி

இந்த மேடைக்கு வரவேண்டும் என்றால் அங்கே இருக்கின்ற ஒவ்வொரு படியிலும் கால்வைத்து நடந்துதான் இங்கே மேடைக்கு வர முடியும். அங்கிருந்து தாவ முடியாது. தாவினால் அவன் மனிதன் அல்ல. தாவமுடியாது. தாவக்கூடாது. நாம் மனிதர்கள் என்பதால், காலை வைத்து நடந்துஒவ்வொரு படியாக பாதம் பதித்துத்தான் மேடைக்கு வரவேண்டும்.

கிராமங்களில் கல்யாண வீடுகளுக்குப் போகிறோம், கல்யாணம் முடிந்து விருந்து வைக்கிறார்கள். சாப்பிடுகிறோம். சாப்பிட்டு வீட்டுக்கு வந்த பிறகு, பக்கத்து வீட்டுக்காரர், “இன்றைக்கு எத்தனை பந்தி'' என்று கேட்கிறார். “நான்கு பந்தி போட்டார்கள் நான் மூன்றாவது பந்தியில் சாப்பிட்டேன்'' என்று சொல்கிறோம்.

நான்கு பந்தியையும் சேர்த்து ஏன் ஒரே நேரத்தில் போடவில்லை. இடம் குறைவு. மக்கள் அதிகம். தயாரிக்கப்பட்ட பதார்த்தத்தின் அளவு நமக்குத் தெரியும். வந்திருக்கின்ற விருந்தினரின் எண்ணிக்கையும் நமக்குத் தெரியும். எனவேதான், நான்கு பந்தி, ஐந்து பந்தி என்று போட்டு திருமண விருந்தை நடத்தி முடிக்கிறோம். “எல்லோரும் வந்துவிட்டீர்கள், பாவம் உங்களையெல்லாம் தனித்தனியாக உட்கார வைக்க நான் பிரியப்படவில்லை. எல்லோரும் சாப்பிடுங்கள்'' என்று சோறு, குழம்பு எல்லாவற்றையும் கொண்டு வந்து ஒரே இடத்தில் குவித்து ஆளுக்குக் கொஞ்சம் அள்ளிக் கொள்ளுங்கள் என்று சொன்னால், அது விருந்தாக இருக்காது. வேடிக்கையாக ஆகிவிடும். விஷமத்தனமாக ஆகிவிடும். எப்படி ஒரு திருமணத்திற்கு வருகிற விருந்தினர்களை பந்தி பந்தியாக உட்கார வைத்து இரண்டு பந்தி முடிந்தது, மூன்று பந்தி முடிந்தது, நான்காவது பந்தி நடக்கிறது வாருங்கள் என்று அழைத்து, அவர்களை திருப்தியாகச் சாப்பிட்டுப் போங்கள் என்று சொல்லி வழியனுப்பி வைக்கிறோமோ அதைப்போலத்தான், முப்பதாயிரம் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொடுக்கிறோம். அடுத்து ஒரு இலட்சம் பெட்டிகள் கொடுப்போம். அதற்கு அடுத்து இரண்டு இலட்சம் பெட்டிகள் கொடுப்போம். கடைசியாக கொடுக்க வேண்டியது முப்பது இலட்சம் பெட்டிகள் என்றால், அல்லது ஒரு கோடி பெட்டிகளே கொடுக்க வேண்டும் என்றாலும் அத்தனையையும் கொடுப்போம், திருமணத்தை நடத்துவோம். “திருப்தியாக சாப்பிட்டு விட்டுப்போங்கள். பந்தி பந்தியாக உட்காருங்கள்'' என்றுதான் சொல்கின்றோம். ஆனால், “பந்தி என்று சொல்கின்றான். பந்தி என்று சொன்னால், எவ்வளவு நேரம் காத்திருக்க முடியும்?” என்று திருமணத்திற்கு வந்தவர்கள் யாரும் கோபிப்பதில்லை. அவர்களெல்லாம் நாகரிகம் தெரிந்தவர்கள், பண்பாடு புரிந்தவர்கள் அப்படிப்பட்டவர்கள்தான் இன்றைக்கு இந்த அரசில் இதுபோன்ற உதவிகளைப் பெறுகின்றவர்கள் என்ற எண்ணத்திலேதான் எதையும் படிப்படியாகச் செய்கிறோம்.

நாளை மறுநாள் தந்தை பெரியாருடைய பிறந்த நாளில் திருவள்ளூர் மாவட்டத்தில் – நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு தரிசு நிலங்களையும் தருகிறோம். அரசு நிலங்களையும் தருகிறோம். ஏற்கெனவே ஆக்கிரமித்து வைத்துள்ள நிலங்களை பண்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டால் அதையும் தருகிறோம். இப்படி தமிழகம் முழுவதும் பல மாவட்டங்களில் ஏறத்தாழ 25,000 ஏக்கருக்கு மேல் ஏழை விவசாயிகளுக்கு நிலத்தை பங்கிட்டு பகிர்ந்தும் பண்படுத்தியும் வழங்குகின்ற நிகழ்ச்சி நாளை மறுநாள் தந்தை பெரியார் பிறந்தநாளில் நடத்தப்படவிருக்கின்றது.

அண்ணா, பெரியாரோடு நாங்கள் நிறுத்திக் கொள்ளவில்லை. நம்முடைய சுதர்சனம் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல், பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாளில், கல்விக் கண் திறந்தவராயிற்றே அவர்—அவரை மறக்கலாமா என்ற நன்றி உணர்வோடுதான் அவர் பிறந்த ஜூலை 15—ஆம் தேதி ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் விழா எடுக்கவேண்டும். கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட வேண்டும் என்று ஜூலை 15—ஆம் நாளை பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாளை கொண்டாடினோம். இதை ஏதோ அரசாணையாக மட்டும் பிறப்பித்தால் அடுத்து வருகின்ற ஆட்சி, எப்படி இருக்குமோ? கடந்த ஆட்சியைப் போலிருந்தால் என்னாகுமோ? என்ற அச்சத்தின் காரணமாகத்தான், அதை சட்டமாகவே ஆக்கினோம். சட்டமாக ஆக்கிவிட்டால், சட்டமன்றத்தில்தான் அதை மாற்ற வேண்டும். அது சாமான்யமாக நடக்காது. எனவே சட்டமாகவே ஆக்கியிருக்கிறோம். ஜி.ஓ. போட்டால் மாற்றி விடுவார்கள். ஜி.ஓ.வுக்கே ஆங்கிலத்தில் "G O" - GO தான். அது போய்விடும். அதனால், அதை சட்டமாகவே போட்டிருக்கிறோம்.

## செய்நேர்த்தி செய்து பண்படுத்தி நிலம் வழங்கப்படும்

அதைப்போல இன்றைக்கு அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளில் வண்ணத் தொலைக்காட்சியை தொலைக்காட்சி இல்லாத வீடுகளுக்கு ஏழை எளியவர்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, சாதாரண சாமான்ய மக்களுக்கு வழங்குகின்றோம். நாளை மறுநாள் தந்தை பெரியார் பிறந்த நாளில் நிலம் வழங்குகின்றோம். நாங்கள் குறிப்பிட்டது 2 ஏக்கர் நிலம் என்றால்கூட, இங்கே பேசியவர்களும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். கறாராக 2 ஏக்கர். அதிலே ஒரு அங்குலம், இரண்டு அங்குலம் குறைந்தால், நாங்கள் விமர்சிப்போம் என்று யாரும் சொல்லக்கூடாது. அந்த 2 ஏக்கர் நிலம் என்பதில் பண்படுத்தப்பட்ட நிலமாக, நீங்கள் பயன்படுத்துகிற நிலமாக, அது 1 ஏக்கராகக் கூட இருக்கலாம். நான் சாட்சி வைத்துக்கொண்டே சொல்லுகின்றேன். கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தோழர்கள் இங்கே வந்திருக்கின்றார்கள். திருவாரூரிலேகூட நான் பேசினேன். தோழர் தா. பாண்டியனை மேடையிலே வைத்துக் கொண்டே பேசினேன். அவரே சொன்னார் "நிலம் என்று கொடுத்தால் போதும். நிலத்தை ஏழை எளியவர்களுக்கு மிட்டா மிராசுதாரர்களிடமிருந்து பிடுங்கியல்ல — அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப — அவர்களுக்கு சட்டப்படி சேர வேண்டிய உரிமையை — ஏழை எளியோர்களுக்குத் தருகின்ற அந்தக் காரியத்தை ஒரு அரசு செய்ய வேண்டும். அதுதான் எங்கள் செங்கொடி இயக்கத்தினுடைய கொள்கை'' என்று சொன்னார்கள் அல்லவா? அந்தக் கொள்கையை நிறைவேற்றுகின்ற வகையில் நான் சொன்னேன். சட்டசபையிலேயே எதிர்க்கட்சித் தலைவர்கூட கேட்டார் — எவ்வளவு கொடுக்கப் போகிறாய்? எங்கே இருக்கின்றது அவ்வளவு நிலம்? என்றெல்லாம்கூட கேட்டார்.

எனக்கொரு அச்சம், அவ்வளவு நிலம் வைத்துவிட்டு வந்தோமே — எங்கே இருக்கிறது நிலம் என்கிறார்களே?





③

அந்த நிலத்தை எல்லாம் என்ன செய்தார்கள்? அப்படி ஒரு சந்தேகம் எனக்கு ஏற்பட்டு விட்டது.

நான் சொன்னேன் அப்பொழுது கையளவு நிலம் இருந்தாலும், அதை ஜமீன்தாருக்குக் கொடுக்கமாட்டேன். ஏழை எளிய விவசாயிகளுக்குத்தான் அதைக் கொடுப்பேன் என்று அன்றைக்கு உறுதி அளித்தேன். அந்த உறுதியை உயிர் இருக்கிற வரையிலே காப்பாற்றுவேன் என்பதை உங்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

அதனால் 2 ஏக்கரா? 1 ஏக்கரா? என்ற அளவல்ல. எத்தனை பேர் இதிலே பயன் பெற்றார்கள்? எப்படி பயன் பெற்றார்கள்? மூன்றாகப் பிரித்திருக்கிறோம். அண்மையிலேகூட நமது அமைச்சர் பெருமக்களை வருவாய்த்துறை அமைச்சரை மேற்கு வங்கத்திற்கு அனுப்பி, அங்கு எப்படி நிலம் பங்கிட்டுத் தருகிறார்கள் என்பதைப் பார்த்து வருமாறு கேட்டிருந்தேன். அங்கே பல இலட்சக்கணக்கான மக்களுக்கு நிலத்தை பகிர்ந்தளித்திருக்கிறார்கள் என்றாலும்கூட இன்னமும் அது முழுமையாக அங்கு முடியவில்லை என்று சொன்னார்கள். ஓரளவுதான் அங்கேகூட நடைபெற்றிருக்கிறது. நாம் அங்கு எந்த அளவுக்கு நடைபெறுகிறதோ அதைவிட, அதற்கு நேராக இன்னும் சொல்லப் போனால், அதற்கு மேலாக இந்த நிலங்களை, தரிசு நிலங்களை பாத்தியப்பட்ட நிலம் எங்களுக்கு என்று யாராவது சொன்னால், அவர்களுடைய விருப்பத்தை ஏற்று அதை வாங்கி, அதை செய்நேர்த்தி பண்ணி, கிராமத்தில் சொல்வார்களே செய்நேர்த்தி என்று அப்படி செய்நேர்த்தி செய்து, அவைகளையெல்லாம் பண்படுத்தி, மேன்மைப்படுத்தி, அதை நீங்களே உழுது நீங்களே பயிரிட்டு, நீங்கள் அனுபவித்துக் கொள்ளுங்கள் என்று அவர்களுக்குக் கொடுக்கின்ற அந்தவகை ஒன்று அரசு நிலமாக இருந்தால் அரசு நிலத்தை எடுத்து அவர்களுக்கு "இந்தாருங்கள்" என்று தானமாகக் கொடுக்கின்ற வகை ஒன்று.

## பல கட்டங்களாக தரிசு நிலம் வழங்கப்படும்

இந்த வகையில் எல்லாம் நிலம் வழங்குகின்ற இத்திட்டத்தைத் தான் 17ஆம் தேதி பெரியார் பிறந்தநாளிலே இந்த அரசு தொடங்க இருக்கின்றது. அப்படி கொடுக்கப்படும் நிலம் தமிழகம் முழுவதும் கொடுக்கப்படும். ஒரு கட்டத்தோடு முடிவடைவதில்லை. பல கட்டமாக தொடர்ந்து அந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டே இருக்கும். ஆங்காங்கு இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அரசு அதிகாரிகள் எங்கெங்கே நிலம் இப்படி வழங்கப்படுவதற்கு இந்த மூன்று வகையிலே எந்த வகையில் வழங்குபடுவதாக இருந்தாலும், அவைகளை வழங்குவதற்கு அரசு அதிகாரிகள் அந்த வட்டாரத்திலே உள்ள பொதுமக்களை அணுகி, விவசாயப் பெருங்குடி மக்களை அணுகி, அவர்களுக்கு நிலங்களை ஒப்டைக்கின்ற அந்த காரியத்தில் ஈடுபடுவார்கள். எனவே, நிலமில்லாமல் இவ்வளவு நிலம் இருக்கின்ற நாட்டில் நிலம் இல்லாத நிலைமை – வாழ முடியாத நிலைமை – கிஞ்சிற்றும் இருக்கக் கூடாது என்ற அந்த உறுதியை நிறைவேற்றத்தான் இந்த அரசு பாடுபட விரும்புகிறது. பணியாற்ற விரும்புகின்றது– அப்படி விரும்புவதை நிறைவேற்றுகின்ற வகையிலே நீங்கள் உங்களுடைய ஆதரவைத் தர வேண்டும் என்றுதான் எனக்கு முன்னால் இங்கே பேசியவர்கள் கேட்டுக் கொண்ட வேண்டுகோள். தம்பி தயாநிதிமாறன், நீங்கள் எப்படி எங்களுக்கு நன்றி கூறப் போகிறீர்கள் என்று மக்களைப் பார்த்துக் கேட்டார். நன்றியை எதிர்பார்த்து இந்தக் காரியங்கள் எல்லாம் நடைபெறவில்லை என்று நான் சொல்லித் கொள்ள விரும்புகின்றேன். நீங்களாக நன்றி கூறினால், அதற்கு நான் பொறுப்பாளி அல்ல. எப்படி நன்றி கூற வேண்டும் என்பதை நம்முடைய தம்பி ஸ்டாலின் சாடையாக உணர்த்தினார். அவர் உணர்த்துவது சுலபம். காரணம், அவரே உள்ளாட்சித்துறை அமைச்சராக இருப்பதால், உள்ளாட்சியைப் பற்றி பொருத்தமாக அவர் பேசிவிட்டார். நான் எல்லோருக்கும் பொதுவான முதல் அமைச்சராக இருப்பதால், உங்களுக்கும் பொதுவானவன் என்ற முறையில் பொதுவான ஒரு வேண்டுகோளை உங்கள் முன்னால் வைக்கின்றேன்.

## சாதி – பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்

இது தமிழ்நாடு – நாம் வாழ்கிற நிலம் தமிழ் நிலம் – நம்முடைய உணர்வுகள் மானத்தின் அடிப்படையிலே உருவான உணர்வுகள். நம்மை மானமுள்ள மனிதர்களாக ஆக்குவதற்கு பாடுபட்டவர்கள் இன்றைக்கு இந்த மண்ணுக்குள்ளே இருக்கிறார்கள். தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், பெருந்தலைவர் காமராஜரும் அவர்கள் எல்லாம் இந்த மண்ணுக்குள்ளே இருக்கிறார்கள். அவர்கள் மண்ணுக்குள்ளே இருந்தாலும், எங்கே இருந்தாலும், நம்முடைய மனதுக்குள்ளேயும் இருக்கிறார்கள் என்கின்ற அந்த உணர்வோடு அவர்கள் வழி நடப்போம் – அவர்கள் கொள்கைகளைப் பின்பற்றுவோம் – சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவோம் – பகுத்தறிவுள்ள சமுதாயத்தைப் படைப்போம் என்ற உறுதிமொழியை இந்த நல்ல விழாவிலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அனைவருக்கும் நன்றி கூறி இந்த விழாக் குழுவினர் – இவ்வளவு சிறப்பாக இந்த ஏற்பாடுகளைச் செய்தமைக்காக அவர்களுக்கும் அரசு அதிகாரிகளுக்கும், என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்து, இந்தக் குழுவிலே இடம் பெற்றுள்ள நம்முடைய சுதர்சனம் அவர்களும், கோ.க.மணி அவர்களும், கோவிந்தசாமி அவர்களும், சிவபுண்ணியம் அவர்களும், அப்துல் பாசித் அவர்களும், ஜெகன்மூர்த்தி அவர்களும் வருகை தந்து விழாவினை சிறப்பித்தமைக்காகவும் நான் அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்து வராதவர்களுக்கும் மானசீகமாக என்னுடைய நன்றியை அவர்களுக்கு அனுப்பி வைத்து விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖

# கோவை, மதுரை, திருச்சி, சேலம் மற்றும் நெல்லையில் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள்



**கலைஞர் மு. கருணாநிதி**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

1. சிப்காட் நிறுவனத்தின் திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் தொழில் பூங்காக்கள் தொழில் மையங்களாக உருவெடுத்துள்ளன. தினந்தோறும் தமிழகத்தில் தற்போது புதிய தொழில் முதலீட்டுக்கான திட்டங்கள் வந்த வண்ணம் உள்ளன. புதிய முதலீடுகளையேற்று புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு தேவைப்படும் நிலங்களுக்கான கோரிக்கைகள் அதிகரித்து வருவதால் திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் தொழில் பூங்காக்களை விரிவாக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 2,000 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவுள்ளது.

2. ஹுண்டாய், போர்டு, மிட்சுபிஷி, பி.எம்.டபிள்யூ, அசோக் லேலண்ட் போன்ற பெரும் மோட்டார் உற்பத்தி நிறுவனங்கள் தமிழகத்தில் தொழிற்சாலைகள் அமைத்ததன் காரணமாக சென்னை ஆசியாவின் டெட்ராய்ட் (Detroit) என்று வர்ணிக்கப்படுகிறது. இந்தியாவின் மோட்டார் உதிரிபாகங்கள் உற்பத்தியில், 35 சதவிகிதம் சென்னையில் உற்பத்தி யாகின்றன. இந்த உதிரி பாகங்கள் உற்பத்தியாளர்களில் பலர் பெரும் ஏற்றுமதியாளர்களாகவும் உள்ளனர். இத்துறையில் புதிய முதலீடுகளின் மூலமாக ஏற்படக்கூடிய தேவையை நிறைவு செய்ய ஒரகடம் சிப்காட் தொழில் பூங்காவில் மோட்டார் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Automotive Special Economic Zone) ஏற்படுத்தப்படும்.

3. மிகப்பெரிய சுற்றுலாத் தலமாகவும், கோயில் நகரமாகவும் விளங்கி வரும் மதுரையில் நீண்ட காலமாக பல தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்குப் புத்துயிர் ஊட்டும்வகையில்மதுரை அருகில்சிப்காட் நிறுவனம் மூலமாக ஒரு புதிய தொழில் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

4. தோல் பதப்படுத்துதல் மற்றும் தோல்பொருள் உற்பத்தி தமிழகத்தின் தொழில் துறையில் நீண்ட காலமாக ஒரு முக்கியப் பங்கு வகித்து வருகிறது. இத்துறையால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசினை சரிசெய்யும் வகையில் ரூ.115 கோடி மதிப்பில் 11 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் ரிவெர்ஸ் ஆஸ்மாசிஸ் (Reverse Osmosis) சாதனங்களை அமைப்பதற்கு நிதியுதவி கோரி மாண்புமிகு இந்தியப் பிரதமரிடம் நான் நேரடியாக வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

தோல் பதப்படுத்தும் மற்றும் தோல் பொருள் உற்பத்தி வளாகம் ஒன்று அமைப்பதற்கு சென்னை அருகில் சிப்காட் நிறுவனம் மூலமாக 250 ஏக்கர் பரப்பில் ஒரு புதிய தோல் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படும்.

5. கரூர் மாவட்டம், புகளூரில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் தற்போது ஆண்டு ஒன்றுக்கு 2,30,000 மெட்ரிக் டன் காகிதம் உற்பத்தி ஆகி வருகிறது. இந்த உற்பத்தியை அதிகரிப்பதற்காக தற்போது காகிதம் தயாரிக்கும் இயந்திரத்தை நவீனப்படுத்தி விரிவாக்கம் செய்வதற்கான திட்டத்தை **மொத்தம் ரூ. 650 கோடியில் செயல்படுத்திட** முடிவெடுக்கப் பட்டுள்ளது. இந்த திட்டத்தினால் ஆண்டொன்றிற்கு கூடுதலாக 1,20,000 மெட்ரிக் டன் உற்பத்தித்திறன் கொண்ட ஒரு புதிய அதிநவீன தொழில் நுட்பத்துடனான காகித இயந்திரம் அமைக்கப் படவுள்ளது. மேலும், இந்த நிறுவனத்தின் சார்பில் ரூ.30 கோடி முதலீட்டில், ஐந்து புதிய காற்றாலைகளை நிறுவி 6.25 மெகாவாட் கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

6. சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி (Cogeneration) செய்வதன் மூலம் அந்த ஆலைகளின் செயல்திறன் அதிகரிப்பதுடன் கூடுதல் வருவாய் ஈட்டுவதற்கும் உதவுகிறது. கள்ளக்குறிச்சி இரண்டாவது கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ.13.50 கோடி செலவில் 6 மெகாவாட் திறன்கொண்ட ஒரு இணை மின்நிலையம் அமைக்கப்படும்.

7. தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றை நிறைவேற்றும் வகையில் சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 6 கோடி ரூபாய் செலவில் எத்தனால் எனும் எரிபொருள் உற்பத்தி நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவு மற்றும் பொதுத் துறைகளில் அமையும் முதல் எத்தனால் உற்பத்தி நிலையம் இதுவாகவே இருக்கும்.

8. பெரம்பலூர் மாவட்டம் தொழில் துறையில் பின் தங்கிய மாவட்டம் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் (டிட்கோ) இம்மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தொழிற் பூங்காவுடன் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றினையும் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தப் பகுதிக்கு படிப்படியாக ரூபாய் 5,000 கோடி அளவிலான முதலீடும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

9. தமிழகத்தில் உள்ள இயற்கை எரிவாயு பெரும்பகுதி காவேரிப்படுகை பகுதியில் காணப்படுகிறது. புதிய ஆய்வு தொழில்நுட்பத்தின் மூலமாக, இந்த இருப்பை பயன்பாட்டிற்குக் கொண்டுவர இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆந்திர மாநிலத்தில் உள்ள கிருஷ்ணா கோதாவரிப் படுகையிலும் இயற்கை எரிவாயு இருப்பு கண்டறியப்பட்டுள்ளது. தமிழகத்தின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்த இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது.

இக்குறிக்கோளை அடையும் வகையில் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஆய்வு, உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கான ஒரு புதிய இணைத்துறை நிறுவனத்தை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) அமைக்கும். இப்புதிய நிறுவனம் தமிழகம் முழுவதும் தேவையான குழாய் கட்டமைப்பை அமைத்து இயற்கை எரிவாயு விநியோகத் தொகுப்பினை (Natural gas distribution network) உருவாக்கும். அரசின் இப்புதிய முயற்சி இம்மாநிலத்தின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதோடு தமிழகத்தின் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சிக்கும் மாநில அரசின் வருவாய் பெருக்கத்திற்கும் வழிவகுக்கும்.

10. தற்போது பத்து கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு எடுத்துச் செல்லும் லாரி வாடகையை கரும்பு விவசாயிகளே செலுத்துகின்றனர். பத்து கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக உள்ள

பகுதிகளுக்கான லாரி வாடகையை இந்த ஆலைகளே ஏற்றுக்கொள்கின்றன. தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள மற்றொரு வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற வண்ணம், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு பத்து கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளிருந்து கொண்டு வரப்படும் கரும்புக்கான லாரி வாடகையை வரும் அரைவைப் பருவத்திலிருந்து சர்க்கரை ஆலைகளே ஏற்றுக் கொள்ளும். இதனால் கரும்பு விவசாயிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக 40 கோடி ரூபாய் பயன் கிடைக்கும்.

11. காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் பகுதிகள் முக்கியமான தொழில் மையமாக உருவாக்கி வருகிறது. இதனால், தொழிற் சாலைகளின் வசதிக்காக சாலைக் கட்டமைப்பினை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. எனவே, 24 கிலோ மீட்டர் நீள சிங்கபெருமாள் கோவில் திருப்பெரும்புதூர் சாலை மற்றும் 20 கிலோ மீட்டர் நீள வண்டலூர் வாலாஜாபாத் சாலை ஆகிய சாலைகளின் முக்கியப் பகுதிகளை ஆறு வழித்தடச் சாலையாகவும், பிற பகுதிகளை நான்கு வழித்தடச் சாலையாகவும் சுமார் 300 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தும் திட்டத்தையும் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

## தகவல் தொழில்நுட்பவியல் துறை

1. தகவல் தொழில்நுட்பத்துறையில் இதுவரை ஏற்பட்டுள்ள பலன்களை ஒன்று திரட்டி – அத்துறை மேலும் வேகமாகவும் பயனுள்ள வகையிலும் வளர்ச்சி அடைவதற்கு புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்று வகுத்து அறிவிக்கப்படும்.

2. 4.7.2000 அன்று டைடல் தகவல் தொழில் நுட்பப் பூங்கா தொடங்கி வைக்கப்பட்ட போது அறிவிக்கப்பட்டபடியும், தொடர்ந்து தேர்தல் அறிக்கையிலும், நிதி நிலை அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளபடியும் – இரண்டாவது டைடல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று சென்னை தரமணியில் நிறுவப்படும்.

3. தமிழக அரசும், மத்திய அரசின் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காக்கள் நிறுவனமும், தனியார் துறையும் இணைந்து கோவையில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை நிறுவும்.

4. சென்னையில் மட்டும் பெரிதும் மையம் கொண்டுள்ள தகவல் தொழில்நுட்பப் புரட்சி, தமிழ்நாட்டில் உள்ள மற்ற நகரங்களிலும் பரவி பலனளித்திடும் வகையில் மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் உருவாக்கப்படும்.

5. மத்திய அரசு அறிவித்துள்ள – உலகத் தரத்திலான தகவல் தொழில்நுட்பம், வடிவமைப்பு, உற்பத்தி ஆகியவற்றுக்கான இந்தியக் கல்வி நிறுவனம் சென்னைக்கு அருகே நிறுவப்படும்.

6. தகவல் தொழில்நுட்பத் துறையில் வெகுவான முதலீடுகளை ஈர்ப்பதற்கான வழிகளை வகுத்துச் செயல்படுத்திட முன்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைக்கப்பட்டு, இடைக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்த தகவல் தொழில்நுட்பப் பணிமுனைப்புக் குழு (I.T. Task Force) ஒன்று மீண்டும் உருவாக்கப்படும்.

7. மின்னணு ஆளுமை (e-governance) நகரங்களில் உள்ள மக்களைப் போலவே கிராமங்களில் உள்ள மக்களுக்கும் பயன் அளித்திடும் வகையில் வடிவமைக்கப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டு தமிழகம் ஒரு முன்னோடி மின்னணு ஆளுமை மாநிலமாகத் திகழ்ந்திடும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

8. தற்பொழுது சென்னையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் தமிழ் இணையப் பல்கலைக் கழகத்திற்கென தனியே சொந்தமாக கட்டடம் அமைவதற்கேற்ற நிலமும், ஒரு கோடி ரூபாயும் வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

9. முன்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு, நான்கு வழித் தடங்கள் கொண்ட சாலையாக அமைக்கப்பட்டு, இடையில் தொய்வு ஏற்பட்ட, தகவல் தொழில்நுட்ப விரைவுச்சாலை (I.T. Expressway) திட்டத்தின் முதற்கட்டமாக பழைய மாமல்லபுரம் சாலையில் தரமணி முதல் சிறுசேரி வரை உள்ள சாலையை உலகத் தரம் வாய்ந்த ஆறு வழித்தடங்கள் கொண்ட சாலையாக மேம்படுத்தும் பணிகள் 205 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இச்சாலையினை மேம்படுத்தும் வகையில் இரண்டாம் கட்டமாக சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரையுள்ள சுமார் 25 கிலோ மீட்டர் நீள சாலையை ஆறு வழித் தடங்கள் கொண்ட சாலையாக மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும். *




# கிராமப்புற மக்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைத்திட அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது

**18.9.2006 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய தலைமை உரை**

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! தலைமைச் செயலாளர் அவர்களே! காவல் துறைத் தலைவர் அவர்களே! அரசு உயர் அதிகாரிகளே! மாவட்ட ஆட்சித் தலைவர்களே! காவல்துறை அதிகாரிகளே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கம்.

ஆழிப் பேரலையால் அவதிக்குள்ளாகி அதன் தொடர்ச்சியாக நிவாரணப் பணிகள் நடைபெற்று வரும் மாவட்டங்களின் ஆட்சியர்களை அழைத்து 24.6.2006 அன்று கலந்துரையாடியதற்குப் பிறகு, தமிழகத்திலே உள்ள எல்லா மாவட்டங்களின் ஆட்சியர்களையும், காவல்துறை அதிகாரிகளையும் ஒன்று கூட்டி இன்றைக்குச் சந்தித்து உரையாடுவதில் நான் மிகுந்த உவகை அடைகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்களின் வழியில் அயராது உழைத்து வரும் இந்த அரசு 13.5.2006 அன்று பதவியேற்றுக் கொண்ட உடனேயே – பதவியேற்ற அரங்கத்திலேயே கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான

மக்களுக்கிடையே – திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் அடையாளமாக – ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்; விவசாயிகளின் பயிர்க்கடன் 7 ஆயிரம் கோடி ரூபாய் அறவே இரத்து; பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்துணவுடன் வாரம் இரண்டு முட்டை – என்ற வாக்குறுதிகளுக்கான மூன்று கோப்புகளில் நான் கையெழுத்திட்டேன்.

**"செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க செய்யாமை யானுங் கெடும்"**

அதாவது, செய்யக்கூடாததைச் செய்வதால் கேடு ஏற்படும்; செய்ய வேண்டியதைச் செய்யாமல் விட்டாலும் கேடு ஏற்படும் – என்று அய்யன் திருவள்ளுவர் அறிவுறுத்தியதற்கு ஏற்ப, செய்யக்கூடாததைத் தவிர்த்து, செந்தமிழ் நாட்டு மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களையெல்லாம் வகுத்தும் தொகுத்தும் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை உங்கள் அனைவரது உதவியோடும், மக்களின் மகத்தான ஒத்துழைப்போடும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறோம்.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு சட்டப் பேரவை மாண்பமைந்த மன்றம் என்பதால் – பொறுப்பேற்ற இந்த 128 நாட்களுக்குள்ளாகவே – ஆளுநர் உரைக்கும், விவாதத்திற்கும் 2006, மே மாதம் 24ஆம் நாள் முதல் மே மாதம் 31ஆம் நாள் வரையிலும், நிதிநிலை அறிக்கைக்கும், விவாதத்திற்கும், துறை வாரியான மானியக் கோரிக்கைகளுக்கும் 2006, ஜூலை 22ஆம் நாள் முதல் செப்டம்பர் 2ஆம் நாள் வரையிலும், சட்டப் பேரவையைக் கூட்டி பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு வழி கண்டிருக்கிறோம் என்பதையும், இதுவரை 9 முறை அமைச்சரவையைக் கூட்டி நாட்டு மக்களுக்கான நல்ல முடிவுகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதையும் நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

தேர்தல் அறிக்கையில் மொத்தம் 177 வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறோம். 62 வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். நிதி ஒதுக்கீடு தேவையில்லாத 74 வாக்குறுதிகளில், 45 வாக்குறுதிகளில் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் முதலாவது ஆண்டிலேயே 107 வாக்குறுதிகளை, அதாவது சுமார் மூன்றில் இரண்டு பங்கு வாக்குறுதிகளை நிறைவேற்றி விடுவோம்.

அப்படி மூன்றில் இரண்டு பங்கு வாக்குறுதிகளை நிறைவேற்றி விடுவோம் என்று நான் உறுதியாகச் சொல்கிறேன் என்றால்; உங்கள் அனைவரது உழைப்பையும், அறிவையும், அனுபவத்தையும் நம்பித்தான் அப்படிச் சொல்கின்றேன். வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான திட்டத்தைத் தீட்டுவதாலேயே – நிதியை ஒதுக்கீடு செய்வதாலேயே அல்லது சட்டத்தை இயற்றுவதாலேயே வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேறி விடும் என்று நான் நம்பிடத் தயாராக இல்லை. தலைமைச் செயலகத்திலே தீட்டப்படுகிற திட்டங்களை, திட்டங்களின் வேர்களாக உள்ள நோக்கங்களை நீங்கள் அனைவரும் செம்மையாகப் புரிந்து கொண்டு, ஒதுக்கப்படுகிற நிதியை முழுமையாகப் பயன்படுத்தி, சமுதாயத்தின் எந்தப் பிரிவு மக்களுக்காக நிதி ஒதுக்கப்படுகிறதோ அவர்களுக்கு அந்த நிதியின் பலன்கள் அனைத்தும் சென்றிடும் வகையில் செயல்படுத்தினால்தான் வாக்குறுதிகள் நல்ல முறையிலே நிறைவேறியதாக நாடு ஏற்றுக் கொள்ளும். எனவே, அந்தத் திசையிலே நீங்கள் அனைவரும் உங்களுடைய நேரத்தையும், நினைப்பையும் செலவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

## சட்டம்–ஒழுங்கு

நமது மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கு நிலைமை – இதற்கு முன்பிருந்ததைக் காட்டிலும் நிறைவளிக்கத்தக்க வகையிலே அமைந்துள்ளது. இதற்குக் காரணமான காவல்துறை அதிகாரிகளையும், மாவட்ட ஆட்சியர்களையும் பாராட்டி எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தீவிரவாத நடவடிக்கைகளை நமது தமிழகத்தில் தலை தூக்கவிடாமல் தடுப்பதும், களைவதும் நமது நுண்ணறிவிலும், முன்னெச்சரிக்கை உணர்விலும், நடவடிக்கையிலும்தான் அமைந்திருக்கிறது. உங்களது மாவட்டங்களில் பிரச்சினைக்குரிய இடங்கள், புதிய புதிய பிரச்சினைகளுக்கு உட்படுத்தப்படும் இடங்கள் பற்றிய விவரங்களைச் சேகரித்து, எவ்வித அசம்பாவிதமும், எந்த நேரத்திலும் ஏற்பட்டுவிடாதபடி தொடர்ந்து கண்காணித்திட வேண்டியது அவசியம்.

## காவல் கைதி மரணங்கள்

காவலில் உள்ள கைதி மரணமடைவது கடுமையானதும் கொடுமையானதும் ஆகும். அத்தகைய நிகழ்ச்சிகள் ஏற்படாவண்ணம் காவல் துறை அதிகாரிகள் கவனத்துடனும், கனிவுடனும் செயல்பட்டு மனித உரிமைகளைப் பேணிக் காத்திட உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

## அகதிகள் வருகை

தற்போது இலங்கையில் பதற்ற நிலை காரணமாக 12–01–2006 முதல் மீண்டும் இலங்கைத் தமிழர்கள் தமக்கு வாழ்க்கையையும், வாழ்வாதாரத்தையும் தேடும் அகதிகளாக வரத் தொடங்கியுள்ளனர். இதுவரை 13 ஆயிரத்து 844 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வந்துள்ளனர். அகதிகளாக வரும் தமிழர்களுக்கு "உடுக்கை இழந்தவன் கை போல" உதவிடுவது நமது உணர்வோடு கலந்த கடமையாகும். அதே நேரத்தில், அகதிகள் என்ற போர்வையில் சமூக விரோதிகளை நாம் நமது மண்ணில் அனுமதிக்கக் கூடாது. எனவே, உண்மையான அகதிகள் யார், சமூக விரோதிகள் யார் என்பதனை ஆழ்ந்து பகுத்தறியக் காவல் துறையினரும், வருவாய்த் துறையினரும் இணைந்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## போக்குவரத்து நெரிசல்

தற்போது பெருகிவரும் மக்கள் தொகை, வளர்ந்து வரும் நகரங்கள், பல்கிப் பெருகி வரும் வாகனங்கள், புதிய புதிய தொழிற் சாலைகள் போன்றவற்றால் போக்குவரத்து நெரிசல் அதிகமாகி வருகிறது. இதனைக் காவலர்கள் ஒழுங்குபடுத்துவது மிகவும் அவசியம். மேலும், நாளிதழ்களைத் தினமும் காலையில் படிக்கும்போது, சாலை விபத்து இல்லாத நாளே இல்லை என்ற செய்திதான் நமது நெஞ்சத்தை உலுக்குகிறது. சாலை விபத்தினால் குறைந்தது நாள் ஒன்றிற்கு 10 மனித உயிர்கள் பலியாகின்றன என்பது நம்மை பதைபதைக்க வைக்கும் சோகமாகும். காவல் துறையினரும், போக்குவரத்துத் துறையினரும் இணைந்து சோதனைச் சாவடிகள் அமைத்து வாகனத் தணிக்கை மேற்கொள்ள வேண்டும். மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டுபவர்களின் ஓட்டுநர் உரிமம் ரத்து செய்யப்பட வேண்டும். காவல் துறையும் போக்குவரத்துத் துறையும் இணைந்து கடுமையான நடவடிக்கை எடுத்தால்தான் சாலை விபத்துகள் குறையும். மாவட்ட ஆட்சியர்கள் சட்டம்–ஒழுங்கு ஆய்வுக் கூட்டத்தில் இதனை ஒரு முக்கியப் பொருளாக விவாதிக்க வேண்டும்.

**தேர்தல் அறிக்கையில் மொத்தம் 177 வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறோம். 62 வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். நிதி ஒதுக்கீடு தேவையில்லாத 74 வாக்குறுதிகளில், 45 வாக்குறுதிகளில் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் முதலாவது ஆண்டிலேயே 107 வாக்குறுதிகளை, அதாவது சுமார் மூன்றில் இரண்டு பங்கு வாக்குறுதிகளை நிறைவேற்றி விடுவோம்.**

## ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டம்

இந்தியத் துணைக் கண்டத்திலேயே 1 கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டம் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. இத்திட்டம் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு, ஏழை மக்கள் அனைவரும் எவ்வித இடர்ப்பாடும் இன்றி, தரமான அரிசியைப் பெற்றிடச் செய்வது மாவட்ட ஆட்சியர்களின் முதன்மைப் பணியாகும். இத்திட்ட செயலாக்கத்தில் தரமான அரிசியைத் தொடர்ச்சியாக வழங்குதல், பொது விநியோகத் திட்டத்திற்கான அரிசி கடத்தப்படுவதைக் கட்டுப்படுத்துதல், போலி குடும்ப அட்டைகளைக் கண்டறிதல், நியாயவிலைக் கடைகளை மேற்பார்வை யிடுதல், எல்லையோர

மாவட்டங்களில் அரிசிக் கடத்தலைத் தடுத்து நிறுத்துதல் போன்ற ஆக்க பூர்வமான காரியங்களை மாவட்ட ஆட்சியர்கள் கண்காணிப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

## விவசாய கூட்டுறவுக் கடன் தள்ளுபடி மற்றும் புதிய பயிர்க்கடன் வழங்குதல்

விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய கடன் சுமையைத் தாங்க முடியாமல் தள்ளாடி அல்லல்படுவதைக் கருத்தில் கொண்டு இந்த அரசு பொறுப்பேற்றவுடன், இதுவரை எந்த மாநில அரசும் மேற்கொள்ளாத நடவடிக்கையாக 31-3-2006 வரை கூட்டுறவு வங்கிகளுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய நிலுவையிலிருந்த அனைத்து விவசாயக் கடன்களையும், அவற்றின் மீதான வட்டிகளையும் தள்ளுபடி செய்ததால், 6-9-2006 வரை 5 ஆயிரத்து 813 கோடி ரூபாய் கடன்கள் இரத்து செய்யப்பட்டு; 24 இலட்சத்து 26 ஆயிரத்து 566 கடன்தள்ளுபடிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் கூட்டுறவு வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்கு ஆயிரத்து 235 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 6-9-2006 வரை கூட்டுறவு வங்கிகள் 311 கோடியே 50 இலட்சம் ரூபாயை பயிர்க்கடனாக வழங்கியுள்ளன. தள்ளுபடி செய்யப்பட்டுள்ள தொகையை கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு வழங்கி வருவதால் 1,200 நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்கள் மீண்டும் உயிர் பெற்று எழ வாய்ப்புகள் தோன்றியிருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் சிறப்பாக இயங்குவதற்கான ஆலோசனைகளை மாவட்ட ஆட்சியர்கள் தெரிவித்திட வேண்டும் என விரும்புகிறேன்.

## இலவச எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டம்

10 இலட்சம் ஏழை எளிய குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டம் வரும் தமிழர் திருநாளாம் பொங்கல் தினத்தன்று, தொடங்கி தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று விடுதலை நாள் விழா உரையில் அறிவித்துள்ளேன். இத்திட்டத்திற்காக தற்போது 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் பெற இருப்போரைத் தேர்வு செய்ய அமைக்கப்பட்டுள்ள குழுக்களையே – இலவச எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டத்தில் பயன்பெறுவோரைத் தேர்வு செய்யவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்

இந்த அரசு பதவியேற்றபின் அறிவித்த மற்றுமொரு மகத்தான திட்டம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம். அறிஞர் அண்ணா பிறந்த செப்டம்பர் 15ஆம் நாளன்று வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தை காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கரசங்கால்–துண்டல்கழனி பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் நான் தொடங்கி வைத்துள்ளேன். முதல்கட்டமாக 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்து மாவட்டங் களிலுமுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கும், நீலகிரி மாவட்டத்தில் வாழும் மலைவாழ் பழங்குடியினர் குடும்பங்களுக்கும், சென்னை மாநகரில் வட சென்னையில் ஒன்றும் தென் சென்னையில் ஒன்றுமாக இரு குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகளில் வாழ்ந்து வருவோர்க்கும், மறு வாழ்வு இல்லங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் அடுத்தகட்டமாக, 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கத் திட்டமிடப்பட்டு, அதற்காக இவ்வாண்டில் மட்டும் 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படும். இந்தத் திட்டத்தைச் சிறப்புற நடைமுறைப்படுத்திட மாவட்ட ஆட்சியர்கள் தொடர்ச்சியாகக் கவனம் செலுத்தி வரவேண்டும்.

## மின் ஆளுமை

தமிழ்நாடு இந்தியத் துணைக் கண்டத்திலேயே முன் மாதிரி மின் ஆளுமை மாநிலம் என்று எல்லோரும் பெருமைப்படும் வகையில் – மக்களுக்குத் தேவையான அனைத்துச் சேவைகளும் எளிமையாகவும் விரைவாகவும்

கிடைக்கக் கூடிய வழிகளில் – எணினி ஆளுமையினை(Digital Governance) அறிமுகம் செய்து – மின் ஆளுமை முகமை என்ற நிறுவனத்தைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது. கணினிப் புரட்சியினால் நகர்ப்புறம் மற்றும் ஊரகப்பகுதிகளில் வாழும் மக்களிடையே ஏற்பட்ட எணினி இடைவெளியை (Digital Divide) நிரப்பிச் சரி செய்திடவும் – கிராமப்புற மக்களுக்கு வலிமை சேர்த்திடவும் – தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஊராட்சியிலும் கிராமப்புற தகவல் மற்றும் சேவை மையங்களை (Village Resources and Service Centre) ஏற்படுத்த முடிவு செய்துள்ளது. மாவட்ட ஆட்சியர்கள் இத்திட்டத்தின் செயலாக்கத்தை ஆய்வு செய்து, நல்ல முறையில் நடைமுறைப்படுத்த உதவிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**மக்களுக்குத் தேவையான அனைத்துச் சேவைகளும் எளிமையாகவும் விரைவாகவும் கிடைக்கக் கூடிய வழிகளில் – எணினி ஆளுமையினை(Digital Governance) அறிமுகம் செய்து – மின் ஆளுமை முகமை என்ற நிறுவனத்தைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது**

### உள்ளாட்சித் தேர்தல்கள்

தற்போதுள்ள உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கான பதவிக்காலம் 24.10.2006 அன்று முடிவடைகிறது. வரும் உள்ளாட்சித் தேர்தலில் மூன்றடுக்கு ஊராட்சிகளில் வார்டுகளின் எண்ணிக்கை மற்றும் வார்டுகளின் எல்லைகளில் மாற்றமின்றி அதே நிலையில் தொடர்வது என அரசு முடிவெடுத்துள்ளது. உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்துவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் செய்து தயார் நிலையில் இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். உள்ளாட்சித் தேர்தல்களைச் சட்ட நெறிமுறைகளுக்கு உட்பட்டும், அமைதியாகவும், ஒழுங்காகவும், அனைத்துத் தரப்பினரும் அச்சம் தவிர்த்து வாக்களித்திடும் வகையிலும் நடத்தி – மக்களாட்சியின் வேர்கள் ஆழமாகப் பரவி அனைவர்க்கும் பலனளித்திடத் தேவையான ஒத்துழைப்பை மாவட்ட நிர்வாகத்தின் எல்லா நிலைகளிலும் உருவாக்கிட வேண்டுகிறேன்.

### மகளிர் சுய உதவிக் குழுக்கள்

தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்கள் முதன் முதலாக 1989ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) நிறுவனத்தின் உதவியுடன் தொடங்கப்பட்டது. இதன் வெற்றியைத் தொடர்ந்து, இத்திட்டம் மகளிர் திட்டம் என்ற பெயரில் 1997–ஆம் ஆண்டு முதல் மாநில அரசின் நிதி உதவியுடன் அனைத்து மாவட்டங்களிலும் படிப்படியாக விரிவாக்கப்பட்டது. தற்போதைய நிலவரப்படி தமிழ்நாட்டில் 3 இலட்சத்து 20 ஆயிரத்து 42 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. ஊராட்சி அளவிலுள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களும் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பில் பதிவு செய்ய வேண்டுமென்பதை மாவட்ட ஆட்சியர்கள் உத்தரவாதப்படுத்த வேண்டும். மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளில் மாவட்ட ஆட்சியர்கள் தேவையான ஈடுபாடு காட்ட வேண்டும்.

### அனைத்து கிராம அண்ணா மறு மலர்ச்சித் திட்டம்

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் அடுத்த ஐந்தாண்டுகளில் போதுமான அளவில் நிதி ஆதாரங்களை ஒருமுகப்படுத்தும் நோக்கில் ஒரு திருப்புமுனைத் திட்டமாக "அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்னும் புதிய திட்டத்தை இந்த அரசு அறிவித்துள்ளது. தற்போது செயலாக்கத்திலுள்ள அனைத்து மைய–மாநில திட்டங்களில் நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தமட்டில் இதுதான் மிகப் பெரிய திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் 2,500 கிராம ஊராட்சிகளுக்கு, ஒரு கிராம ஊராட்சிக்கு, 20 இலட்சம் ரூபாய் வீதம், ஒவ்வோர் ஆண்டும், 500

கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு செய்யும். ஒவ்வொரு ஊராட்சியின் மறுமலர்ச்சிக்கும் தன்னிறைவுக்கும் உருப்படியான வழி அமைத்துக் கொடுக்கும் இத்திட்டத்தை முறையாகவும் முழுமையாகவும் செயல்படுத்துவதில் மாவட்ட ஆட்சியர்கள் தனிக்கவனம் செலுத்திட வேண்டுமென்று விரும்புகின்றேன்.

## ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நிலம் வழங்கும் திட்டம்

தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையிலும், அதனைத் தொடர்ந்து ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் அறிவிக்கப் பட்டதற்கிணங்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் தங்களது மாவட்டங் களிலுள்ள தரிசு புறம்போக்கு நிலங்களை ஆய்வு செய்து அரசுக்குத் தெரிவிக்கும்படி கூறப்பட்டிருந்தது. 3.8.2006 அன்றைய நிலவரப்படி, (1) எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லாத தரிசு புறம்போக்கு நிலம் 1 இலட்சத்து 91 ஆயிரத்து 320 ஏக்கர் என்றும்; (2) 69 ஆயிரத்து 217 ஏக்கர் தரிசு புறம்போக்கு நிலம் 98 ஆயிரம் சிறு குறு விவசாயிகளின் ஆக்கிரமிப்பில் உள்ளதென்றும்; (3) 6 இலட்சத்து 84 ஆயிரத்து 411 ஏக்கர் நிலம் 4 இலட்சத்து 25 ஆயிரம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா தரிசு நிலம் என்றும் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

தரிசு நிலங்களை விவசாயத்திற்கு ஏற்ற நிலங்களாகப் பண்படுத்திட வேளாண்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் மைய–மாநில அரசுத் திட்டங்கள் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தப்படும். தரிசாக உள்ள நிலங்களுக்கு நீர்ப்பாசன ஆதாரத்தை உருவாக்குவது மிகமுக்கியமான காரியமாகும். எனவே மாவட்ட ஆட்சியர்கள் வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல், கசிவு நீர்க் குட்டை அமைத்தல் போன்ற பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கலாம். இத்திட்டத்தின் கீழ் தரிசு நிலங்களில் புதியதாக அமைக்கப்படும் பம்பு செட்டுகளுக்கு மின்சார வாரியம் தாமதமின்றி மின் வசதி செய்து தரவேண்டும்.

ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தரிசு நிலங்களைப் பண்படுத்தி, வேளாண்மை செய்திட ஏற்றவையாக அவற்றை மாற்றி மேம்படுத்தி, இலவசமாக அவர்களுக்குத் தருவதென்பது மிக உயர்ந்த இலட்சியத்தை நிறைவு செய்கிற நெஞ்சில் நீங்காமல் இடம்பெறும் சாதனை ஆகும். இதன் மூலம் ஏழை விவசாயக் குடும்பம் நில உரிமை யாளராக உயர்கிறது. தரிசாகக் கிடக்கும் நிலம் உற்பத்திக்கேற்ற விளைநிலமாவதால் உற்பத்தி பெருகுகிறது. இந்த உயர்ந்த நோக்கத்தை கருத்திலே கொண்டு மாவட்ட ஆட்சியர்கள் எவ்விதக் குறையும் ஏற்பட்டு விடாமல், எல்லோரும் பாராட்டும்வண்ணம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்திட வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இது தொடர்ந்து நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம் என்பதால், மாவட்ட ஆட்சியர்களின் நீடித்த நிலையான கவனம் இதிலே வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

**படித்து விட்டு வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் இருக்கும் இளைஞர்களின் துயர்துடைக்கும் வகையில் வேலை வாய்ப்பற்றோருக்கு உதவிடும் திட்டம் ஒன்றை நமது அரசு உருவாக்கியுள்ளது.**

## தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம்

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்– விவசாயிகள் (சமூகபாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் என்ற புதிய திட்டத்தைச் செயல்முறைப்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பதிவு பெற்ற குத்தகைதாரர்கள் ஆகியோரின்

சமூகப் பாதுகாப்புக்கும், நலனுக்குமான கூறுகள் அனைத்தும் சரிவரச் செயல்படுகின்றனவா என்பதை மாவட்ட ஆட்சியர்கள் மாதந்தோறும் நடைபெறும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாளில் அவர்களுடன் கலந்தாலோசித்து ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கருவுற்ற தாய்மார்களுக்கு மகப்பேறுக்கு முன் மூன்று மாதமும், பின் மூன்று மாதமுமாக, ஆறு மாத காலத்திற்கு மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் ஆறாயிரம் ரூபாய் வழங்கும் "டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு திட்டம்", பெருந்தலைவர் காமராஜர் பிறந்த ஜூலை 15–ஐ "கல்வி வளர்ச்சி நாள்" என அனைத்துப் பள்ளிகளிலும் கொண்டாடும் வகையில் அறிவித்து, அன்று முதல் சத்துணவுடன் வாரத்திற்கு இரண்டு முட்டைகள் வழங்கும் திட்டம், ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு 3.6.2006 முதல் 15 ஆயிரம் ரூபாய் வழங்கும் "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதிஉதவித் திட்டம்", மாதம் 200 ரூபாயில் இருந்து 400 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ள "முதியோர் ஓய்வூதியத் திட்டம்", ஆகிய திட்டங்கள் சமூகப் பாதுகாப்புக்கான சாலச்சிறந்த திட்டங்கள். எனவே, அத்திட்டங்கள் எவ்விதப் புகாரும் இன்றி நடைபெறுவதற்கு ஏற்ற கவனத்தை எப்போதும் செலுத்தி வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## வேலையில்லா இளைஞர்களுக்கு நிதி உதவித் திட்டம்

படித்து விட்டு வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் இருக்கும் இளைஞர்களின் துயர்துடைக்கும் வகையில் வேலை வாய்ப்பற்றோருக்கு உதவிடும் திட்டம் ஒன்றை நமது அரசு உருவாக்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் 150 ரூபாயும்; பள்ளி மேல் நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் 200 ரூபாயும்; பட்டதாரிகள் மற்றும் முதுநிலை பட்டதாரிகளுக்கு மாதம் 300 ரூபாயும்; நிதி உதவியாக 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டம் உத்தமர் காந்தி அடிகளின் பிறந்த நாளான அக்டோபர் 2 முதல் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் செயல்பாட்டினை மாவட்ட ஆட்சியர்கள் முறைப்படுத்தி, உரியவர்களுக்கு பலன் கிடைத்திடும் வகையில் கண்காணித்திட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

## நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம்

கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு ஒரு முறை இலவச மின்சாரம் 100 யூனிட் வரையிலும், மின்விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு ஒரு முறை 500 யூனிட் வரையிலும் வழங்கப்படுமென நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் கீழ் 4 இலட்சம் கைத்தறி நெசவாளர்களும், 78 ஆயிரத்து 200 மின்விசைத்தறி நெசவாளர்களும் பயன் பெறுவர். இதன் செயலாக்கத்தை மாவட்ட ஆட்சியர்கள் தொடர்ந்து மேற்பார்வையிட வேண்டுமென்று விரும்புகிறேன்.

## வருமுன் காப்போம் திட்டம்

கடந்த முறை இந்த அரசு பொறுப்பில் இருந்தபோது "வருமுன் காப்போம் திட்டம்" தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டதை நீங்கள் அறிவீர்கள். தற்போது இத்திட்டம் புதுப்பொலிவுடன் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இந்தப் பன்முனை இலவச மருத்துவ பரிசோதனை திட்டத்தின்கீழ் 2006–2007; 2007–2008 ஆகிய இரண்டாண்டுகளில் 9 ஆயிரம் முகாம்கள் நடத்தப்படும்.

ஏழை எளிய மக்களுக்குச் சிறந்த நவீன சாதனங்கள் வாயிலாக முறையான சிகிச்சைகள், அலோபதி மருத்துவம் மட்டுமல்லாது, சித்த மருத்துவர்கள், சிறப்பு மருத்துவர்கள் மூலமும் உரிய சிகிச்சைகள் அளிக்கப்படும் இத்திட்டத்தை ஆக்கபூர்வமாக நடைமுறைப்படுத்தி; ஏழை எளியோர்க்கு உயர்ந்த மருத்துவ உதவி வழங்கினோம் என்ற – என்றும் மாறாத மனநிறைவை நீங்கள் அனைவரும் துய்த்திட வேண்டும் என்று விரும்புகிறேன்.

சிக்குன் குனியா வைரஸைப் பொருத்தவரை ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பள்ளி–கல்லூரி மாணவ மாணவியர், தொண்டு நிறுவனங்கள், சுகாதாரப் பணியாளர்கள் போன்ற அனைவரையும் ஒன்று திரட்டி – தடுப்பு நடவடிக்கையாக, மக்கள் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திட மாவட்ட

ஆட்சியர்கள் தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்

கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் கடந்த 2000ஆம் ஆண்டில் நமது அரசால் தொடங்கப்பட்டு, அனைவராலும் வரவேற்கப்பட்ட திட்டமாகும். விவசாயிகளுக்கு உதவிடும் கால்நடைகளுக்கும் மருத்துவ வசதிகளை அளிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் சிறப்பு முகாம்கள் குக்கிராமங்களில் நடத்தப்படுகின்றன. முகாம் நடத்தப்படுவதற்கு முன்பு, சுற்றுப்புறக் கிராமங்களில் விரிவான பிரச்சாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பிரச்சாரத்திற்கு உள்ளாட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகளையும், ஆர்வமுள்ள கால்நடை பராமரிப்புப் பணியாளர்கள் ஆகியோரின் உதவியையும் மாவட்ட ஆட்சியர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

## 2007ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு இலவச வேட்டி சேலைகள் வழங்குதல்

கிராம மற்றும் நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்குப் பொங்கல் திருநாளின் போது இலவசமாக வேட்டி சேலை வழங்கும் திட்டம் 1990ல் இந்த அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டம் 2007 பொங்கல் திருநாளின்போது செயல்படுத்தப்படத் தேவையான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 164 இலட்சம் சேலைகள் மற்றும் வேட்டிகளுக்கு உற்பத்திக் குறியீடும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரும் பொங்கலுக்கு முன்னதாகவே இலவச வேட்டி சேலைகள் கிடைக்கப் பெறுவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் மாதாந்தோறும் நடைபெறும் ஆய்வுக் கூட்டங்களில் இவைகளின் உற்பத்தி முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யும்படியும், பொங்கல் திருநாளுக்கு முன்னதாகவே இலவச வேட்டி சேலைகள் அனைவருக்கும் கிடைத்திட ஆவன செய்திடுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

## புதிய திட்டங்கள்

கிராமப்புறங்களில் தேவையான அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால், கிராமங்களில் வாழ்ந்து வருவோர் நகர்ப்புறங்களுக்குக் குடிபெயரும் நிலை இன்றும் பல இடங்களில் ஏற்படுகிறது. எனவே, நமது நாட்டின் இரத்தநாளங்களாக விளங்கும் கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு, அடிப்படை வசதிகள் முழுமையாகக் கிடைத்திடத் தேவையான அனைத்து முயற்சிகளையும் நமது அரசு மேற்கொண்டுள்ளது. அதன் விளைவாக, அடுத்த ஐந்தாண்டுகளில்: (1) ஓடி விளையாடிட குழந்தைகளுக்கு ஒரு விளையாட்டு மைதானம், (2) அமர்ந்து படிப்பதற்கு அய்யன் திருவள்ளுவர் நூலகம், (3) மேம்படுத்தப்பட்ட குளம், (4) குடியிருப்புகளுக்கெல்லாம் தெரு விளக்குகள், (5) முக்கியப் பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகள், (6) முக்கியத் தெருக்களுக்கு சிமெண்ட் சாலைகள், (7) சுற்றுச்சுவர், தண்ணீர் வசதி, காத்திருக்கக் கூடம், விளக்கு போன்ற வசதிகளுடன் கூடிய மயானம்; என இந்த அடிப்படை வசதிகள் அனைத்தும் இல்லாத கிராம ஊராட்சியே தமிழ்நாட்டில் இல்லை என்ற தகுதிமிக்க நிலையினை உருவாக்கிட நாம் உறுதி பூண்டுள்ளோம்!

வளர்ந்து வரும் நகர்ப்புறங்களில் சரியான கழிப்பிட வசதியின்றி ஏழை எளியோர் அவதியுறும் நிலை இன்றைக்கும் இருக்கிறது. இந்த நிலையைக் களைந்திடும் வகையில், நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை எளிய குடும்பங்கள், தமது இல்லங்களில் கழிப்பறை வசதியை ஏற்படுத்திக் கொள்ள – ஒரு இலட்சம் குடும்பங்களுக்குத் தலா 1,000 ரூபாய் வீதம் நிதியுதவி அளித்திடும் திட்டம் ஒன்றை – 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டிலிருந்தே செயல்படுத்துவோம்!

நகர்ப்புற ஏழை எளியோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வண்ணம், வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு, கடன் வசதியுடன் கூடிய சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். நகர்ப்புறங்களில் உள்ள இளைஞர்கள் மற்றும் பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்திலிருந்தும், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான சுய உதவிக் குழுக்களுக்குரிய நிதி ஒதுக்கீட்டிலிருந்தும், மொத்தமாக 10 கோடி ரூபாய் சுழல் நிதி மற்றும் மானிய நிதியுதவி அளிக்கப்படும். இது தவிர, மத்திய அரசின் "பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்" கீழ் தமிழ்நாட்டில் 27 ஆயிரம் படித்த வேலைவாய்ப்பற்ற

**நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை எளிய குடும்பங்கள், தமது இல்லங்களில் கழிப்பறை வசதியை ஏற்படுத்திக் கொள்ள – ஒரு இலட்சம் குடும்பங்களுக்குத் தலா 1,000 ரூபாய் வீதம் நிதியுதவி அளித்திடும் திட்டம் ஒன்றை – 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டிலிருந்தே செயல்படுத்துவோம்!**

இளைஞர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் வரையிலான கடனுதவி மூலமாக சுய வேலைவாய்ப்பு வசதிகள் உருவாக்கப்படும். இத்திட்டங்கள் வாயிலாக நகர்ப்புறங்களில் காணப்படும் வேலை வாய்ப்பின்மையைப் பெருமளவுக்குக் குறைப்போம்.

அடுத்த இரண்டாண்டுகளில் கழிப்பறை வசதி இல்லாத பள்ளியோ, அங்கன்வாடி மையமோ தமிழ்நாட்டில் எங்கும் இல்லை என்ற நிலையை ஏற்படுத்துவோம்.

அடுத்து வரும் இரண்டாண்டுகளில் தமிழ்நாட்டின் 12 கடலோர மாவட்டங்களில் வசிக்கும் மீனவர்களுக்கு – மீனவர் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் வாயிலாக – மீன் இறங்கு தளங்கள், ஏல மையங்கள், ஐஸ் பெட்டிகள், மீன் விற்கும் வாகனங்கள் போன்ற தேவையான கட்டமைப்பு வசதிகள் அனைத்தையும் செய்து தருவோம்.

இந்த 12 மாவட்டங்களிலும் 50 ஆயிரம் ரூபாய்க்கும் குறைவாக ஆண்டு வருமானமுடைய ஊனமுற்ற இளைஞர்களுக்கும்; 75 சதவீதத்திற்கும் அதிகமான கடும் ஊனமுள்ள இளைஞர்களின் பெற்றோருக்கும்; வாழ்வாதார நிதி உதவியாக தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்குவோம்.

"சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்" என்ற இலட்சிய முழக்கத்தை எழுத்துக்கெழுத்து பின்பற்றி வரும் நாம்; தேர்தல் நேரத்தில் சொன்னதையெல்லாம் நிறைவேற்றிட முனைப்போடு ஈடுபட்டு வருகிறோம். இந்த முயற்சியில் உங்களது பங்களிப்பு மகத்தானது.

ஏழை எளியோர்பால் இரக்கம் காட்டுவீர்!

குறைகளைச் சொல்லவரும் மக்களுக்குச் செவி சாய்ப்பீர்!

நியாயமான குறைகளை நீக்கிட உடனே காரியம் செய்வீர்!

கிராம வளர்ச்சியில் ஈடுபாடு கொள்வீர்!

மக்கள் பிரதிநிதிகளை மரியாதைப் பண்புடன் நடத்துவீர்!

மாவட்டத்தில் சட்டம்–ஒழுங்கை உறுதியுடன் நிலைநாட்டுவீர்!

அரசின் கொள்கை அறிந்து அயராது பணிபுரிவீர்!

திட்டங்கள் அனைத்தையும் செம்மையாக நிறைவேற்றுவீர்!

அனைத்து அலுவலர்க்கும் முன்மாதிரியாக நடப்பீர்!

அரசின் கண்களாகவும், செவிகளாகவும் மட்டுமின்றி;

தலையும் நெஞ்சுமாகத் திகழ்வீர்!

"கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை உடைத்திவ் வுலகு"

– என்ற அய்யன் திருவள்ளுவரின் வாக்குக்கேற்ப, கடமை தவறாமையிலும், கருணை பொழிவதிலும் முதன்மையாக இருந்திடுவீர்! என்று உங்கள் அனைவரையும் மனமார வாழ்த்தி – இந்த அளவில் எனது தலைமை உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்!

# உரிய நேரத்தில் கடமைகளை நிறைவேற்றுங்கள்



**18.9.2006 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய நிறைவு உரை**

**கா**லையிலிருந்து பல்வேறு விஷயங்களைப் பற்றி தீர விவாதத்தை நடத்தி நிறைவு செய்திருக்கின்றோம். ஆனால் இந்த விவாதத்தினுடைய விளைவுகள் நிறைவாக, மன நிறைவாக அமைய வேண்டுமென்பதற்காக நான் உங்களுக்கு விடுக்கின்ற வேண்டுகோள், காலையிலே என்னுடைய துவக்க உரையிலே குறிப்பிட்டதைப் போல, எத்தனை பிரச்சினைகள், எத்தகைய பிரச்சினைகள் இருந்தாலுங்கூட, அவற்றையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, அரசின் கடமைகளை ஆற்றுகின்ற தூதுவர்கள் நாம் என்ற அந்த உணர்வோடு அயராது பணியாற்ற வேண்டுமென்று உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம் முன்னால் இருக்கின்ற பல்வேறு திட்டங்கள், அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய வழிமுறைகள் – இவைகளையெல்லாம் விவாதித்திருக்கிறோம். விவாதித்தோம், கலைந்தோம் என்ற அளவோடு நின்று விடாமல் எடுத்த முடிவுகளை விவாதிக்கும்போது சொல்லிய யோசனைகளை நாமும் பின்பற்றி வெற்றிகரமாக இவற்றை ஆக்க வேண்டுமென்ற அந்த உணர்வோடு பணியாற்ற வேண்டுமென்று உங்களை யெல்லாம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டு, என்னோடு சேர்ந்து மக்களுக்குப் பணியாற்றுகின்ற வாய்ப்பு உங்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற இந்தக் காலக் கட்டத்தில் இந்த வாய்ப்பை முழுமையாக, வாய்மையோடு எந்த மக்கள் நம்மை நம்பி இந்தப் பொறுப்பிலே உட்கார வைத்திருக்கிறார்களோ, அவர்களுக்கு அணுவளவும் ஐயப்பாடோ, அல்லது அதிருப்தியோ ஏற்படாத வண்ணம் நாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதை கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஓர் அரசு, அரசின் தலைமை எவ்வாறு இருக்கிறதோ அப்படித் தான் அரசு அதிகாரிகளும், அரசு அலுவலர்களும், அவர்களின் கீழே இருக்கின்ற மற்ற மற்றவர்களும் இருக்க முடியும் என்பது தெளிவான உண்மை. நான் இந்த நேரத்தில் உங்களையெல்லாம் வைத்துக் கொண்டு அரசியல் பேசுவதாகக் கருதக் கூடாது. அரசியல் என்பது நம்முடைய வாழ்விலே ஒரு அங்கம். அது ஏதோ தனிப்பட்ட, விவாதிக்கத் தகாத ஒன்றல்ல. வாழ்வுக்கு இலக்கணம் வகுத்த வள்ளுவர், எழுதிய திருக்குறளில்

"அரசியல்'' என்ற ஒரு பகுதியே இருப்பதை நீங்கள் யாரும் மறந்து விட முடியாது. அந்த அரசியல் எப்படியிருக்க வேண்டும், அதிலே ஈடுபடுகிறவர்கள் எவ்வளவு கண்ணியத்தோடு உலாவ வேண்டும், இயங்க வேண்டும், அரசு நடத்துகின்றவர்கள் எப்படிப்பட்ட உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும், இன்னும் கூட வள்ளுவர் சொல்கிறார், "கடிதோச்சி மெல்ல எறிக'' என்று, கடிதோச்சவே கூடாது என்று சொல்லவில்லை, கடிதோச்சுவது அடுத்து மெல்ல எறிவதற்காகத் தான் என்கின்ற அளவிற்கு அவர் சொல்வதற்குக் காரணமே, கடிதோச்சுதல் இருந்தால் தான், ஓர் அரசை அமைதியாக நடத்த முடியும் என்பதை அவர் கருதிய காரணத்தால் தான் அவ்வாறு சொன்னார். அப்படி நீங்கள் நடந்து கொள்ள வேண்டுமென்று உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த கால அரசிலே பொறுப்பு வகித்தவர்கள் பலர் இங்கே இருக்கிறீர்கள். உங்களுக்குத் தெரியும், அப்படிப்பட்டவர்கள் யார் என்பதை நான் அறிவேன் என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆனால் அவர்களை யெல்லாம் அறவே வீட்டிற்கு அனுப்பி விட வேண்டுமென்ற அளவிற்கு பழி வாங்குகின்ற மனப்பான்மை எனக்கும் இல்லை, என்னுடைய அமைச்சரவையிலே இருக்கின்றவர்களுக்கும் இல்லை, அப்படியெல்லாம் எங்களை ஆளாக்கிய அறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்குக் கற்பிக்கவும் இல்லை.

ஆனால் ஒன்றிரண்டு மாற்றங்களை, ஒன்றிரண்டு காரியங்களை நாங்கள் செய்தே தீர வேண்டிய அவசியம் எங்களுக்காக அல்ல, மக்களுக்காக, நாட்டிற்காக, இந்த அரசு ஒழுங்காக நடைபெறவேண்டும் என்பதற்காக நடத்தவேண்டியிருக்கின்றது. நாங்கள் 1967ஆம் ஆண்டு அண்ணா தலைமையிலே அமைச்சர்களாகப் பொறுப்பேற்ற போது, எங்களையெல்லாம் உட்கார வைத்துக் கொண்டு அவர் சொன்னார். கோப்புகளைப் பார்க்கத் தவறாதீர்கள், நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று காலந்தாழ்த்தி விடுவீர்களேயானால், நீங்கள் ஒரு மணி நேரமோ அல்லது ஒரு நாளோ அந்தக் கோப்புகளைப் பார்க்க மறந்து அல்லது அலட்சியப்படுத்தி வேறு வேலை பார்ப்பீர்களேயானால், அதனால் நூறு குடும்பங்களின் வாழ்வு பாதிக்கப்படும் என்பதை மறந்து விடாதீர்கள் என்று எங்களுக்கு அண்ணா அவர்கள் சொன்ன முதல் அறிவுரை ஆகும் அது. அதற்குப் பிறகு தனியாகவும் எங்களிடம் அவர் சொல்லியிருக்கிறார். கோப்புகளைப் பார்க்கும்போது, "Back File" பார்ப்பது முக்கியம். உங்களுடைய செயலாளர் அதனைக் காட்டாமல் கையெழுத்து போட வேண்டிய இடத்தை மாத்திரம் காட்டினால், அந்த இடத்திலே கையெழுத்தைப் போட்டுவிட்டு, முடிந்தது இந்தக் கோப்பு என்று உற்சாகமாக வேறு கோப்பைத் தேட ஆரம்பித்து விடாதீர்கள். ஒவ்வொரு கோப்பிலும் "Back File" என்று ஒன்றிருக்கிறது. அந்தக் கோப்பின் ஆரம்பம் எப்படி என்பது அதிலே தான் இருக்கும். அதை நீங்கள் படித்தால் தான், நல்ல முடிவினை அந்தக் கோப்பிலே நீங்கள் எடுக்க முடியும் என்றும் அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பையேற்ற அந்தக் காலக் கட்டத்திலேயே சொன்னார்கள்.

அதே செய்தியை நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து பொதுப்பணித்துறை அமைச்சராக அண்ணா அவர்களால் நியமிக்கப்பட்ட அந்தக் காலக் கட்டத்தில் மறைந்த சி.சுப்பிரமணியம் அவர்களைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது அவரும் அதையே சொன்னார். "பைல்'' பார்க்கும்போது "Back File" முக்கியம், அதை நீங்களும் செய்யுங்கள், உங்கள் நண்பர்களுக்கும் சொல்லுங்கள் என்றார்.

ஆகவே சில நேரங்களிலே நம்முடைய செயலாளர்கள், நம்பிக்கைக்கு உரியவர்களாக, சொன்ன இடத்திலே கையெழுத்து போடலாம் என்ற அளவிற்கு இருப்பார்களேயானால், அப்போது "Back File"ஐத் தேட வேண்டிய அவசியம் கூட இல்லை. இருந்தாலுங்கூட "Back File" முக்கியம் என்பதை மறந்து விடக் கூடாது. கோப்புகளையே பார்க்காதவர்களைப் பற்றிக் கவலையில்லை. பார்க்கின்றவர்களுக்குச் சொல்கிறேன். எனவே அதுவும் மிகவும் முக்கியம்.

நான் வேறு இடத்திலே சொல்ல முடியாது, இந்த இடத்திலே தான் சொல்ல முடியும். உங்களைப் போன்ற பெரிய பொறுப்புகளிலே உள்ள செயலாளர்கள், அதிகாரிகள், மாவட்டங்களைப் பரிபாலிக்கின்ற பொறுப்பிலே உள்ள மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோர் மத்தியிலே தான் சொல்ல வேண்டும். தயவுசெய்து அரசியல் என்று நீங்கள் கருதிக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் நான் பொறுப்பேற்ற இந்தக் காலக் கட்டத்தில் முதல் வாரமே 1,112 கோப்புகள்,முன்னாள் முதலமைச்சருடைய கையெழுத்து இல்லாத கோப்புகளை நான் காண நேர்ந்தது. பொய் அல்ல, ஜோடனை அல்ல. உண்மைக்கு மாறான செய்தி அல்ல. அப்படிப்பட்ட ஒரு துர்ப்பாக்கியம் எனக்கு ஏற்பட்டது. 1,112 கோப்புகளின் எண்ணிக்கை அத்துடன் நிற்கவில்லை. நான் இந்தச் செய்தியை வெளியிட்ட பிறகு மிச்சம் உள்ள நாட்களில் ஒவ்வொரு நாளும் நான் கோப்பு பார்க்கும்போதெல்லாம் இரண்டு அல்லது மூன்று கோப்புகள் முன்பிருந்த ஆட்சியாளர்களால், நிதியமைச்சரால் அல்லது பொதுப்பணித்துறை அமைச்சரால் பார்க்கப்பட்டு முதலமைச்சரால் பார்க்கப்படாத கோப்புகள் தான் வந்துகொண்டே இருக்கின்றன. நிதியமைச்சர் வரையிலே கோப்பு வந்திருக்கும், தலைமைச் செயலாளர் வரையிலே கோப்பு வந்திருக்கும், அவர்களின் கையெழுத்தோடு கோப்பு முடிந்திருக்கும். தலைமைச் செயலாளராக இருந்த நாராயணனாக இருந்தாலும் சரி, அல்லது லட்சுமி பிரனேஷ் ஆனாலும் சரி, அவர்களின் கையெழுத்தோடு முடிந்த கோப்புகள் பல. இவற்றை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அப்படி பொறுப்பற்ற முறையிலே ஒரு காரியம் நடை பெற்றிருக்கின்றது, தமிழ்நாட்டிலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்களால் நடைபெற்றிருக்கின்றது.

பல கோப்புகளில், இன்னும் சொல்லப் போனால் இங்கே விவாதித்தோமே, காலையிலிருந்து, சுனாமிக்காக வந்த நிதி எவ்வளவு என்று ஏறத்தாழ 2,000 கோடி ரூபாய் அளவிற்கு செலவழிக்க தலைமைச் செயலாளர் நாராயணன் அவர்களின் கையெழுத்து மாத்திரம் தான் தேவைப்பட்டிருக்கின்றது. முதல் அமைச்சரின் கையெழுத்து இல்லாமலேயே 2,000 கோடி ரூபாய் வரவு செலவு நடைபெற்றிருக்கின்றது. இப்படி பல கோப்புகள் நம்மிடையே உலா வந்தன. இன்றைக்கும் அவைகளில் பல தேங்கிக் கிடக்கின்றன. அவைகளையெல்லாம் ஒவ்வொரு நாளும் பார்த்துப் பார்த்து மனம் புழுங்கி, இப்படி நடை பெற்றதா நாட்டின் நிர்வாகம் என்ற கவலையோடு நான் அவைகளில் கையெழுத்திட்டு முடித்திருக்கிறேன். பல விஷயங்கள் அப்படி.

ஒரு அதிகாரி குற்றஞ்சாட்டப்படுகிறார், அந்தக் குற்றச்சாட்டை விசாரிக்கிறார்கள். விசாரணையின் முடிவில் அவர் குற்றவாளி அல்ல, எந்தவிதமான புகாரும் நிரூபிக்கப்படவில்லை என்று கோப்பினை அனுப்புகிறார்கள். அந்தக் கோப்பு தலைமைச் செயலாளருக்கு வருகிறது. அவர் அதை ஏற்றுக் கொண்டு, அடுத்த நிலையிலே உள்ள சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அனுப்புகிறார். அமைச்சர் அதை ஏற்றுக் கொண்டு, முதல் அமைச்சருக்கு அனுப்புகிறார். அவர் கையெழுத்திடாத காரணத்தால், ஐந்தாண்டு காலமாக புகார் கூறப்பட்ட அதிகாரி, எந்தவிதமான மேல் பொறுப்புக்கும் வர முடியாமல் தவியாய் தவித்து, தற்போது நான் வந்து கையெழுத்திட்ட பிறகு அவருக்கு கதி மோட்சம் கிடைக்கிறது என்றால் இது போன்றதொரு நிலைமை ஒரு குடும்பத்திற்கு அல்ல, பல குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ளதே; நியாயமா ?

ஒரு தாசில்தார் மணல் லாரியைத் தடுத்தார் என்ற காரணத்திற்காக லாரியையே அவர் மீது ஏற்றிக் கொன்று விடுகிறார்கள். அந்த லாரி ஏறிய காரணத்தால் அவர் அந்த இடத்திலேயே மாண்டதால், அதைப் பார்த்து வருந்திய திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர், இறந்த அதிகாரி மீது பரிதாபம் கொண்டு, அவருடைய விதவை மனைவி எப்படி வாழ்வார் என்று, அவருடைய பெண்ணுக்கு ஒரு அரசு வேலை கொடுக்க வேண்டுமென்று அரசுக்குப் பரிந்துரை செய்கிறார். இப்படி ஒருவர் கடமையைச் செய்யும்போது கொல்லப்பட்டிருக்கிறார். அந்த அதிகாரியின் வாரிசுக்கு அரசு வேலை கொடுக்க வேண்டுமென்று கலெக்டர் எழுதுகிறார். ஆனால் அந்தக் கோப்பு கிட்டத்தட்ட நான்காண்டு காலமாக கிடப்பிலேயே கிடந்து அதைப் பற்றி யாரும் கவலைப்படாமல், நான் தற்போது முதல் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு கையெழுத்திட்டு, அந்தக் குடும்பத்திற்கு வாழ்வளித்திருக் கிறேன், அந்தக் குடும்பத்தின் விளக்கையேற்றி வைக்க இப்போது தான் சந்தர்ப்பம் வாய்த்தது. இப்படி ஒன்றல்ல, இரண்டல்ல, பல அரசியல் சார்பான விஷயங்கள், கொள்கை ரீதியாக எடுக்கப்பட வேண்டிய முடிவுகள். மனிதாபிமானத்தோடு செய்யப்பட வேண்டிய காரியங்கள்.

21 பேர் பத்திரிகை எழுத்தாளர்கள், செய்தியாளர்கள் இறந்திருக்கிறார்கள். அப்படி இறந்த பத்திரிகையாளர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் என்றும், அதற்குப் பிறகு இரண்டு இலட்சம் ரூபாய் என்றும் நிதி வழங்க வேண்டுமென்று உத்தரவுகள் போடப்பட்டுள்ளன. நாங்கள் ஆட்சியிலே இருந்த வரை அந்த உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டு, நடைமுறையிலே இருந்தன. அதற்குப் பிறகு கடந்த ஐந்தாண்டு காலத்தில் அந்த உத்தரவுகள் நாதியற்றுப் போயின. அந்த உத்தரவுகளை நிறைவேற்ற ஆள் இல்லை, நிறைவேற்றுங்கள் என்று சொல்லவும் ஆள் இல்லை. அதற்கு கையெழுத்து போட யாரும் முன்வரவில்லை. அதனால் அந்த 20 பேருக்கு இப்போது தான் நாங்கள் பொறுப்பேற்ற பிறகு தான் கையெழுத்திட்டு அந்தக் கோப்புகளை நகர விட்டு, அவர்களுடைய குடும்பங்களை வாழ வைக்க முடிந்தது என்பதை நான் சொல்வதற்குக் காரணம், இதெல்லாம் உங்களிடத்திலே ஏதோவொரு விஷயத்தைச் சொல்ல வேண்டும், குறை கூற வேண்டும் என்பதற்காக அல்ல. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு துறையிலும் கூட கோப்புகள் வந்து கொண்டு தான் இருக்கின்றன. அரசு எவ்வழியோ, அதிகாரிகளும் அவ்வழி என்று இல்லாமல், நாமாவது அந்தக் கோப்புகளை உடனுக்குடன் பார்க்கின்ற அந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டும், அந்தப் பொறுப்பை உணர வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

கோப்புகளைப் பார்த்து, கடமைகளை நிறைவேற்றி, உரிய நேரத்தில் கடமைகளை நிறைவேற்றி, நான் காலையிலே எடுத்துக்காட்டியதைப் போல மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பினை அடிக்கடி அதிகார வர்க்கத்தினர் ஏற்படுத்திக்கொண்டு, கோட்டையிலே இருக்கின்ற அதிகாரிகள், மாவட்டங்களில் இருக்கின்ற அதிகாரிகளோடு அடிக்கடி தொடர்பு கொண்டு, மாவட்டங்களில் இருக்கின்ற அதிகாரிகள், அவர்கள் கலெக்டர்களாக இருந்தாலும், அவர்களுக்கு அடுத்து இருக்கின்ற டி.ஆர்.ஓ. போன்ற அதிகாரிகளாக இருந்தாலும், அவர்கள் எல்லாம் தாங்கள் ஈடுபட்டிருக்கின்ற பொது வாழ்க்கையிலே அரசின் கடமைகளிலே தக்கக் கவனத்தைச் செலுத்தி, தொடர்பு கொள்ள வேண்டியவர்களைத் தொடர்புகொண்டு, யாரையும் அலட்சியப்படுத்தாமல், யாரையும் பொருட்படுத்தமாட்டோம் என்ற அளவிற்கு நடந்து கொள்ளாமல், அனைவரையும் சந்திக்கின்ற பொறுப்பினையும் ஏற்று, சந்திக்க வருகின்றவர்களையும் மரியாதையோடு நடத்தி எல்லாவிதமான நற்காரியங்களையும் நீங்கள் செய்திட வேண்டும். காலை முதல் இது வரையிலே நாம் ஆய்ந்திருக்கின்ற, நாம் பரிசீலித்திருக்கின்ற, நாம் சிந்தித்திருக்கின்ற செயல்பாடுகளையெல்லாம் சிறப்புற நடத்துவதற்கு உங்களை நீங்கள் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். அது ஒன்று தான் நீங்கள் எனக்கு நன்றி காட்ட வேண்டுமென்று எண்ணினால் காட்டுகின்ற நன்றியாகும், நாட்டிற்குக் காட்ட வேண்டிய நன்றியாகும் என்று கூறி இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். ❖



# எழுத்தாளர்கள் நலம் காக்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

பேராசிரியர்
**க. அன்பழகன்**
மாண்புமிகு நிதித்துறை அமைச்சர்

## தமிழ் வளர்ச்சி இயக்ககம்

1. ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைவதை யொட்டி இவ்வாண்டு ஆட்சிமொழித் திட்டப் பொன்விழா கொண்டாடப்படும்.

2. அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் தற்போது ரூ.500/– நிதியுதவி பெற்று வருகின்றனர். திங்கள்தோறும் வழங்கப்பட்டு வரும் இந்நிதியுதவி ரூ.500/– லிருந்து ரூ.1000/– ஆக உயர்த்தி இந்நிதியாண்டிலிருந்து வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றிற்கு கூடுதல் தொடர் செலவினம் ரூ.13.38 இலட்சம் ஏற்படும்.

3. கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், மொழிபெயர்ப்புகள் முதலிய படைப்புகளைப் படைத்துத் தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கம் நல்கும் எழுத்தாளர்கள் பலர் நலிவுற்ற நிலையில் உள்ளனர். தமிழ் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு இத்தகைய படைப்பாளர்களைப் பேணிக் காக்க வேண்டியது இன்றியமையாதது என்ற நோக்கத்தில் 'எழுத்தாளர்கள் நலம் காக்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்' என்ற ஒரு புதிய திட்டம் தொடங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் 100 படைப்பாளர்கள் தெரிந்தெடுக்கப்படுவர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் வரை மருத்துவ உதவி பெறும் வகையில் காப்பீடு (Insurance) செய்து அதற்கு ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய காப்பீட்டுத் தவணைத் தொகையை (Premium) அரசே செலுத்தும். இதனால் அரசுக்கு இவ்வாண்டு ரூ.5 இலட்சம் செலவினம் ஏற்படும்.

4. பிற மாநிலங்களில் தமிழ்மொழி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டும் தமிழை ஒரு பாடமொழியாகப் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்விலும், பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்விலும் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படும். முதல் பரிசு ரூ.10,000/–, இரண்டாம் பரிசு ரூ.5,000/–, மூன்றாம் பரிசு ரூ.3,000/– எனப் பரிசுகள் வழங்கப்படும். புது தில்லி, மகாராட்டிரம், மேற்கு வங்காளம், கர்நாடகா, ஆந்திரா மற்றும் கேரளா ஆகிய 6 மாநிலங்களில் ரூ.2,16,000 செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

5. நட்சத்திரத் தகுதி பெற்றுள்ள தனியார் உணவக விடுதி அறைகளில் பைபிள் மற்றும் பகவத் கீதை (ஆங்கிலத்தில்) போன்ற நூல்கள் வைக்கப்பட்டுள்ளதைப் போன்று ஆங்கில மொழியாக்கத்துடன் கூடிய திருக்குறள் பிரதியை உணவக விடுதிகளின் ஒவ்வொரு அறையிலும் வைக்க அரசு நடவடிக்கை எடுக்கும். மேலும் புதுதில்லி தமிழ்நாடு இல்லம் மற்றும் சென்னை அரசினர் விருந்தினர் இல்ல அறைகளிலும் வைக்கப்படும். இந்த நூல்கள் அரசால் இலவசமாக வழங்கப்படும். இதனால் இந்த உணவக விடுதிகளில் தங்கும் வெளி மாநிலம் மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் திருக்குறள் பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

இத்திட்டத்தைச் செயற்படுத்த ஆண்டுதோறும் ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும்.

6. தமிழ் மொழியின் மேம்பாட்டிற்கும் வளமைக்கும் தொண்டாற்றிய – தொண்டாற்றி வருகின்ற தமிழ் எழுத்தாளர்கள், தமிழறிஞர்களைப் பற்றி விளக்கப்படச் சுருள் (Documentary film) தயாரிக்கும் திட்டம் ரூ.10 இலட்சம் செலவில் செயற்படுத்தப்படும்.

7. தமிழ்ப் படைப்பாளிகள் யார்? எவர்? எனும் தொகுப்பு நூல், தமிழ் இலக்கியக் கலைக் களஞ்சியம் மற்றும் தமிழ் இலக்கணக் கலைக் களஞ்சியம் ஆகிய நூல்களைத் தயாரித்து வெளியிட ஒரு குழுவை அமைத்துப் பணிகள் ரூ.6 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

8. வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத தமிழ் முனைவர் பட்ட ஆய்வு மாணவர் ஒருவருக்கும், முனைவர் பட்டத்திற்கு மேற்பட்ட முதுநிலை ஆய்வு மாணவர் ஒருவருக்கும் நிதியுதவி வழங்கும் திட்டம் ரூ.2 இலட்சம் செலவில் செயற்படுத்தப்படும்.

**செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்**
**அகர முதலித் திட்ட இயக்ககம்**

9. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின்கீழ், திட்டமிடப்பட்ட 31 பகுதிகளில் இதுவரை 18 பகுதிகள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ள நிலையில், நடப்பு நிதியாண்டில் மேலும் 7 பகுதிகள் அச்சிட்டு வெளியிடப்படும்.

**கலை – பண்பாட்டு இயக்ககம்**

10. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் தொடங்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி இவ்வாண்டு இயல் இசை நாடக மன்றத்தின் பொன்விழா கொண்டாடப்படும்.

11. இசை, நடனம், நாடகம் என்று வாழ்க்கையை கலையே மூச்சாக வாழ்ந்த கிராமியக் கலைஞர்கள் உட்பட அனைத்துக் கலைஞர்களில் எவரும் வறுமையில் வாடக்கூடாது என்பதற்காக திங்கள்தோறும் நிதி உதவி வழங்கும் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. இதுவரை 8,063 நலிவுற்ற கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்க ஆணையிடப் பட்டுள்ளது. மாதம் ரூ.500/– ஆக வழங்கப்பட்டு வந்த உதவித் தொகையை தற்போது இந்த அரசு பொறுப்பேற்றதும் ரூ.1,000/– ஆக உயர்த்தி ஆணையிட்டது. நடப்பு ஆண்டில் மேலும் 500 பேருக்கு மாதம் ரூ.1,000/– நிதி நல்கையாக வழங்கப்படும். இதற்கு ஆண்டொன்றிற்கு ரூ.60 இலட்சம் அரசுக்கு கூடுதல் செலவினம் ஏற்படும்.

12. 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் தற்போது குரலிசை, பரதநாட்டியம், தேவாரம், நாதஸ்வரம் மற்றும் தவில் ஆகிய பிரிவுகளில் இசை பயிற்றுவிக்கப்படுகின்றது. இவ்விசைப் பள்ளிகளில் கூடுதலாக

**“ நட்சத்திரத் தகுதி பெற்றுள்ள தனியார் உணவக விடுதி அறைகளில் பைபிள் மற்றும் பகவத் கீதை (ஆங்கிலத்தில்) போன்ற நூல்கள் வைக்கப்பட்டுள்ளதைப் போன்று ஆங்கில மொழியாக்கத்துடன் கூடிய திருக்குறள் பிரதியை உணவக விடுதிகளின் ஒவ்வொரு அறையிலும் வைக்க அரசு நடவடிக்கை எடுக்கும். ”**

வயலின் மற்றும் மிருதங்கப் பிரிவுகள் ரூ.52.70 இலட்சம் செலவினத்தில் தொடங்கப்படும்.

13. நான்கு அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் பதினேழு மாவட்ட அரசு இசைப்பள்ளி மாணவ மாணவிகளின் பயன்பாட்டிற்காகப் பரதநாட்டிய அணிகலன்கள் ரூ.8.10 இலட்சம் செலவில் வாங்கப்பெறும்.

14. சென்னை அரசு கவின்கலைக் கல்லூரியில் சிற்பக்கலைப் பிரிவில் முதுகலைப் பட்ட மேற்படிப்பு தொடங்கப்பெறும்.

15. மாமல்லபுரம் அரசு கட்டட மற்றும் சிற்பக்கலைக் கல்லூரிக்கு நூலகம் மற்றும் கணினி மையம் ரூ.20 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

"தோற்பாவைக்கூத்து, பொம்மலாட்டம், மரப் பொம்மலாட்டம் ஆகிய கலைகளை ஊக்குவிக்கவும், பழங்குடியினர் கலை விழா நடத்தவும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்."

16. தோற்பாவைக்கூத்து, பொம்மலாட்டம், மரப் பொம்மலாட்டம் ஆகிய கலைகளை ஊக்குவிக்கவும், பழங்குடியினர் கலை விழா நடத்தவும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

17. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு மூலம் கன்னியாகுமரியில் நிரந்தர ஓவியக் கலைக்கூடம் ரூ.4.50 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

18. கலை பண்பாட்டு இயக்ககத்திற்கு அலுவலகக் கட்டடம் ரூ.20 இலட்சம் செலவில் கட்டப்பெறும்.

**தொல்லியல் துறை**

19. தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 87 வரலாற்றுச் சின்னங்களுள் 6 வரலாற்றுச் சின்னங்களுக்குப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகள் ரூ.11 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

20. மதுரை மாவட்டத்தில் உள்ள மாங்குளம் மற்றும் கரூர் மாவட்டத்திலுள்ள நெடுங்கூர் ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழ்வாராய்ச்சிப் பணி ரூ.5 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

21. நாகப்பட்டினம், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களின் கல்வெட்டு நூல் அச்சிட்டு வெளியிடப்படும்.

22. கரூர் மற்றும் குற்றாலத்தில் உள்ள தொல்லியல் அருங்காட்சியகங்கள் மேம்படுத்தப்படும்.

23. மதுரையில் உள்ள பாதுகாக்கப்பட்ட சின்னமாக (Protected Monument) அறிவிக்கப்பட்ட திருமலை நாயக்கர் மகாலை செவ்வனே பாதுகாத்துப் பராமரிக்க மூன்று கோடி ரூபாய் செலவில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

❖ ❖ ❖



**திரு. மு.க.ஸ்டாலின்**
**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**

# மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் புதிய சாலைகள்

1. பெருகி வரும் மக்கள் தொகை, பொருளாதார வளர்ச்சி மற்றும் நகராட்சியின் வருமானத்தை கருத்திற் கொண்டு, அரசு திருப்பூர் நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்தி உள்ளது. நாடாளுமன்ற, சட்டமன்ற இட எல்லைகளை திருத்தியமைக்கும் ஆணையம், தற்போதுள்ள நிருவாக அமைப்புகளின் எல்லைகளை மாற்றி அமைக்க தடை விதித்துள்ளது. ஆகவே, ஆணையத்தின் அனுமதியைப் பெற்று விரைவில் திருப்பூர் நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்துவோம்.

2. நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் அமைந்துள்ள அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருமளவில் மேம்படுத்த இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இதன்படி பகுதி–2 திட்டங்களின் கீழ் இந்த ஆண்டு செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

3. சென்ற ஆண்டு பெய்த பெருமழையால் நகரங்களில் பாதிப்பிற்குள்ளான சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் இம்மழைக்காலம் தொடங்குவதற்கு முன்னர் சீர் செய்யப்படும். இதற்கு அரசு 13 கோடியே 32 இலட்சம் ரூபாயை முழு மானியமாக வழங்கும்.

4. நிதிப்பற்றாக்குறை உள்ள 37 நகராட்சிகளில் நிதியின்மை காரணமாக சரியான பராமரிப்பின்றி இருந்து வரும் குடிநீர்த் திட்டங்கள் 4 கோடி ரூபாய் மானியத்தில் உடனடியாக சீர் செய்யப்படும்.

5. தமிழகத்திலுள்ள 29 மாவட்டத் தலைநகரங்களிலும் 7 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து வசதிகளுடன் கூடிய இறைச்சிக் கூடங்கள் மாநகராட்சி மற்றும் நகராட்சிகள் மூலம் 50 விழுக்காடு அரசு நிதியுதவியுடன் கட்டப்படும்.

6. இதுபோலவே, தமிழகத்திலுள்ள 29 மாவட்டத் தலைநகரங்களிலும் பன்னிரெண்டு கோடி ரூபாய் செலவில் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் மூலம் 50 விழுக்காடு அரசு நிதியுதவியுடன் நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்படும்.

7. நிதிப்பற்றாக்குறையால் நிலம் வாங்குவதற்கு இயலாத நிலையில் உள்ள 12 மூன்றாம் நிலை நகராட்சிகள் திடக்கழிவுகளைக் கையாள நிலங்களை வாங்கி உரக்கிடங்குகளை அமைப்பதற்கு 1 கோடியே 72 இலட்சம் ரூபாய் மானியமாக அரசு வழங்கும்.

8. வாணியம்பாடி நகராட்சியில் ஜின்னா ரோட்டில் பாலாற்றின் குறுக்கே பாலாற்றைக் கடந்து செல்வதற்கென பயன்பட்டு வந்த இரும்புப் பாலம் 1996ஆம் ஆண்டு ஏற்பட்ட மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதால், 85 இலட்சம் ரூபாய் மானியத்தில் வாணியம்பாடி நகராட்சி மூலம் புதிதாக ஒரு பாலம் கட்டப்படும்.

9. இதுவரை அறிவித்த பகுதி 2 (Part II) திட்டங்களைத் தவிர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டும், மாநில அரசு, மைய அரசு, மற்றும் அரசு நிறுவனங்கள் அளிக்கும் கடன் மற்றும் மானிய உதவிகளைக் கொண்டும் இந்த ஆண்டு செயல்படுத்தப்படவுள்ள சில முக்கியத் திட்டங்களைப் பற்றி தற்போது குறிப்பிட விரும்புகிறேன்.

10. மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் தற்போது சுமார் 2,000 கி.மீ. நீளத்திற்கு அமைந்துள்ள சரளைக்கல் சாலைகளையும், மண்சாலைகளையும் இன்னும் 4 ஆண்டுகளில், 200 கோடி ரூபாய் செலவில் குறுகிய சாலைகள் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாகவும், பெரிய சாலைகள் தார்ச் சாலைகளாகவும் மாற்றப்படும்.

11. தமிழகத்தின் அனைத்து நகரங்களிலும், புறநகர் பகுதிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்துவோம் என்று திராவிட முன்னேற்ற கழக தேர்தல் அறிக்கையில் அளித்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணம் முதற்கட்டமாக, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

12. திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், கரூர் மற்றும் காஞ்சிபுரம் நகரங்களில் நடைபெற்றுவரும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் துரிதப்படுத்தப்பட்டு, இந்த ஆண்டே இத்திட்டங்கள் யாவும் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

13. எஞ்சியுள்ள 23 மாவட்டத் தலைநகரங்களில் வேலூர், கடலூர், நாமக்கல், உதகமண்டலம், ஈரோடு, கோயம்புத்தூர், சேலம், புதுக்கோட்டை, விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடி, திண்டுக்கல், சிவகங்கை, திருவாரூர், திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 18 மாவட்டத் தலைநகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் 801 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

14. திருவள்ளூர், பெரம்பலூர், நாகப்பட்டினம், தேனி மற்றும் நாகர்கோவில் ஆகிய 5 மாவட்டத் தலைநகரங்களுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் அமைக்க ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு வரும் நிதி ஆண்டில் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

15. திருவொற்றியூர் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் 28 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

16. மேட்டூர் நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நிதி ஆதாரங்கள் இறுதி செய்யப்பட்டு இந்த நிதி ஆண்டே செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

17. மீதமுள்ள நகரங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் படிப்படியாக வரும் ஆண்டுகளில் நிறைவேற்ற ஏதுவாக ஆய்வுப்பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

18. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்படும் அனைத்து கட்டடங்களும், அதாவது அலுவலகம், பேருந்து நிலையங்கள், பொதுக்கழிப்பிடங்கள், பள்ளிகள், மருத்துவ மனைகள், பூங்காக்கள், வணிகவளாகங்கள் போன்ற கட்டடங்களை உடல் ஊனமுற்றோரும் பயன்படுத்த ஏதுவாக தக்க மாற்றங்கள் இந்தாண்டிலேயே செய்து முடிக்கப்படும்.

19. மாநகராட்சி, மற்றும் நகராட்சிகளில் தெருநாய் தொல்லைகளைக் கட்டுப்படுத்தவும், ரேபிஸ் என்ற கொடிய நோயிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றவும், இந்திய விலங்குகள் பாதுகாப்பு வாரியத்துடன் (Animal Welfare Board of India) இணைந்து ஒரு முன்னோடித் திட்டம் 50 நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் இந்தாண்டில் செயல்படுத்தப்படும்.

20. நெல்லிக்குப்பம் மற்றும் கொடைக்கானல் நகராட்சிகளிலும் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சியிலும் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கப்படும்.

21. திருவண்ணாமலை, மணலி, அனகாபுத்தூர், புழுதிவாக்கம், பொள்ளாச்சி மற்றும் பூவிருந்தவல்லி ஆகிய 6 நகராட்சிகளில் தற்போதுள்ள பேருந்து நிலையங்கள் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

22. மத்திய அரசால் கடந்த ஆண்டுமுதல் செயல்படுத்தப்படும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மதுரை மாநகராட்சிக்கு 1,477 கோடியே 40 இலட்சம் ரூபாயிலும், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 1,311 கோடியே 81 இலட்சம் ரூபாயிலும், தொலைநோக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு மத்திய அரசால் ஏற்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், மதுரை மாநகராட்சிக்கு கூடுதலாக குடிநீர் வழங்க இரண்டாம் வைகை குடிநீர்த் திட்டம் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டே செயல்படுத்தப்படும்.

23. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் வராத ஏனைய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மத்திய அரசின் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் முதற்கட்டமாக நடப்பு நிதியாண்டில் 10 நகரங்களில் 82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகளும் 13 நகரங்களில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலைப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

**சிறுவர், சிறுமிகள் நலம் பேணிட 100 பேரூராட்சிகளில் சிறுவர் பூங்கா, சிறுவர் விளையாட்டு மைதானங்கள், சிறுவர் கிரிக்கெட் தளம் மற்றும் சிறுவர் படிப்பகங்கள் இந்த ஆண்டு அமைக்கப்படும்.**

## பேரூராட்சிகள்

24. பேரூராட்சிப் பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த எந்த ஆண்டும் இல்லாத வண்ணம் இந்த ஆண்டு அரசு 17 கோடியே 20 இலட்சம் ரூபாயை பேரூராட்சிகளுக்கு முழு மானியமாக வழங்கும். இந்த நிதிஉதவியைக் கொண்டு 100 பேரூராட்சிப் பகுதிகளில், சாலை, குடிநீர் வசதி, தெரு விளக்குகள், மழைநீர் வடிகால் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். புகழ்பெற்ற திருக்கோயில்கள் மற்றும் சுற்றுலாத் தலங்கள் அமைந்துள்ள 40 பேரூராட்சிகளில் 6 கோடி ரூபாய் செலவில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும். 20 பேரூராட்சிகளில் 1 கோடி ரூபாய் செலவில் சிறிய மற்றும் மிகச்சிறிய பாலங்கள் அமைக்கப்படும்.

25. மாமல்லபுரம், திருச்செந்தூர், போரூர் ஆகிய பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் இந்த ஆண்டு 29 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

26. பேரூராட்சிகளில் உள்ள சுமார் 663 கிலோ மீட்டர் நீளமுள்ள இணைப்புச் சாலைகளை பேருந்து செல்லும் சாலையின் தரத்திற்கு உயர்த்த 51 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு சிறப்புத் திட்டம் 393 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும்.

27. மேற்படி திட்டங்களைத் தவிர பேரூராட்சிகள் தங்களுடைய நிதி ஆதாரங்களைக் கொண்டு செயல்படுத்தவுள்ள சில சிறப்புத் திட்டங்களையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

28. நடப்பு ஆண்டில் புதிய சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அனைத்து பேரூராட்சிகளிலும் மொத்தம் 500 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்படும்.

29. சிறுவர், சிறுமிகள் நலம் பேணிட 100 பேரூராட்சிகளில் சிறுவர் பூங்கா, சிறுவர் விளையாட்டு மைதானங்கள், சிறுவர் கிரிக்கெட் தளம் மற்றும் சிறுவர் படிப்பகங்கள் இந்த ஆண்டு அமைக்கப்படும்.

30. இதுவரையில் அலுவலகக் கட்டடம் இல்லாத 4 பேரூராட்சிகளுக்கும், சொந்தக் கட்டடங்கள் இருந்தும், மிக மோசமான நிலையில் பழுதடைந்து, வேறு கட்டடங்களில் இயங்கி வரும் 25 பேரூராட்சிகளுக்கும் இந்த ஆண்டு 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் புதிய அலுவலகக் கட்டடங்கள் அமைக்கப்படும்.

## சென்னை மாநகராட்சி

31. குறைந்த வருமானம் உள்ள மக்கள் அதிகமாக வாழும் வட சென்னைப் பகுதியில் போக்குவரத்து, சாலை, சுகாதாரம், கல்வி மற்றும் பொழுதுபோக்கு போன்ற கட்டமைப்பு வசதிகள் தேவையான அளவிற்கு இல்லை என்று நீண்டகாலமாக இருந்து வரும் குறையைப் போக்கும் வகையில் வட சென்னைப் பகுதி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்க 217 கோடி ரூபாய் செலவில் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

32. வில்லிவாக்கம் (L.C.2) மற்றும் மணியக்காரச் சத்திரச் சாலை ஆகிய ரயில்வே சந்திப்புகளில் வாகனச் சுரங்கப்பாதைகள் அமைக்கப்படும்.

33. கத்திவாக்கம் காக்ரேன்பேசின் சாலை சந்திப்பில் மேம்பாலம், கொருக்குப்பேட்டை ரயில்வே சந்திப்பில் சுரங்கப்பாதை, ரங்கராஜபுரம் சந்திப்பில் மேம்பாலம் ஆகிய ஐந்து பணிகள் நடப்பாண்டில் 40 கோடியே 6 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

34. டர்ன்புல்ஸ் சாலை – பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் சாலை சந்திப்பு, வடக்கு உஸ்மான் சாலை கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சந்திப்பு, உஸ்மான் சாலை–துரைசாமி சாலை சந்திப்பு ஜி.என். சாலை – திருமலை சாலை சந்திப்பு ஆகிய நான்கு இடங்களில் 40 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மேம்பாலங்கள் கட்டப்படும்.

35. அடையாறு ஆற்றின் குறுக்கே சைதாப்பேட்டை– ஆலந்தூர் சாலையில் அமைந்துள்ள தரைமட்டப்பாலத்திற்கு மாற்றாக 5 கோடியே 41 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஓர் உயர்மட்ட பாலம் அமைக்கப்படும்.

36. பெரம்பூர் மேம்பாலப் பணி மீண்டும் தொடங்கப்படும். வடசென்னை மக்களை தென் சென்னையுடன் இணைத்திட முக்கியமான இணைப்பான, பெரம்பூர் மேம்பாலப் பணிகள், தி.மு.க. ஆட்சி காலத்தில் 1998ஆம் ஆண்டு 21 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டது. 2001 ஆகஸ்ட் மாதம் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக முந்தைய அரசு விசாரணைக் கமிஷன் நியமித்து நடைபெற்றுவந்த பணிகள் முழுவதையும் முடக்கியது. 5 ஆண்டுகள் எந்தவிதமான பணியும் நடைபெறாமல் மேம்பால வசதி இல்லாமல் பொதுமக்கள் மிகவும் அவதியுற்றனர். தி.மு.க. அரசு மீண்டும் பொறுப்பேற்றவுடன் இப்பணியை ஆய்வு செய்து மீண்டும் துவக்கி ஒரு வருடத்திற்குள் பாலத்தை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியில் ஏற்பட்ட 5 ஆண்டுகால தாமதத்தால் கூடுதல் செலவு 5 முதல் 6 கோடி ரூபாய் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

37. குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் பணி 15 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

38. அடையாறு பகுதியில் அடையாறு கிரீக் எனும் சிற்றோடையில் 58 ஏக்கர் நிலபரப்பில் ஒரு பூங்கா அமைப்பது குறித்து 1997ஆம் ஆண்டிலிருந்து தி.மு.க. அரசு பரிசீலித்து வந்தது. முந்தைய அரசு இப்பகுதியை 50 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்த 2005 நவம்பர் மாதம் ஆணையிட்டது. இதற்கு ஒரு அறக்கட்டளை நிறுவவும் ஆணையிடப்பட்டது. ஆனால் மேற்கொண்டு முன்னேற்றம் இல்லாமல் இருந்து வந்த நிலையில் இத்திட்டத்தைப் பரிசீலனை செய்த இவ்வரசு அடையாறு கிரீக் பகுதியை மட்டும் மேம்படுத்துவதற்கு பதிலாக திரு.வி.க. பாலத்திற்கும் கிழக்கே அமைந்துள்ள அடையாறு கடல் முகம், அதில் அமைந்துள்ள தீவுகள் மற்றும் அடையாறு சிற்றோடைப் பகுதி உள்ளிட்ட ஒட்டுமொத்தமான பகுதியையும் சுமார் 100 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தி "அடையாறு பூங்கா" என்ற பெயரில் உலகத்தரம் வாய்ந்த ஒரு இயற்கை வளம்மிக்க பகுதியாகவும், சுற்றுலா மையமாகவும், இயற்கைச் சூழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் மையமாகவும் பெரிய அளவில் மாற்றி

அமைக்க திட்டமிட்டுள்ளது. இதற்கான பணிகள் விரைவில் தொடங்கும்.

## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

39. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்த கடந்த ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரரிடம் பேச்சு வார்த்தை நடத்தி, வாரியத்திற்கும் ஒப்பந்ததாரருக்குமிடையே போடப்பட்டுள்ள நிபந்தனைகளில் அரசுக்கும் வாரியத்திற்கும் சாதகமான திருத்தங்களைச் செய்து, இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

40. அதேபோல் மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்த நிதியுதவியைப் பெற்று கடல் நீரைக் குடிநீராக்கும் மற்றொரு பெரிய திட்டமும் செயல்படுத்தப்படும்.

41. தெலுங்கு கங்கைத் திட்ட ஒப்பந்தத்தின்படி அளிக்கப்பட வேண்டிய 12 டி.எம்.சி. தண்ணீரை ஒவ்வொரு ஆண்டும் தடையின்றிப் பெற இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி 5.8.2006 அன்று நானும், மாண்புமிகு பொதுப்பணித்துறை பொறுப்பு வகிக்கும் அமைச்சர் அவர்களும் ஐதராபாத் சென்று ஆந்திர முதலமைச்சர் அவர்களைச் சந்தித்ததின் பலனாக வருகிற 20ஆம் தேதி அளவில் கண்டலேறு அணையில் இருந்து வரும் தண்ணீர் தமிழக எல்லையை அடையும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

42. சென்னை மாநகரில் குடிநீர் விநியோகக் குழாய்கள் மற்றும் கழிவுநீர்க் குழாய்கள் இல்லாத அனைத்து தெருக்களுக்கும் குழாய்கள் பதிக்கும் பணி நடப்பாண்டில் முடிக்கப்படும். இப்பணிகள் அனைத்தும் முடிவடையும்போது, சென்னை மாநகரப் பகுதி முழுவதும் குடிநீர் மற்றும் கழிவுநீரமைப்புகள் முழுமைபெற்றதாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

43. பொதுமக்கள் தங்கள் வசதிக்கேற்ப எந்த மையத்தில் வேண்டுமானாலும் குடிநீர்க் கட்டணத்தைச் செலுத்தவும் புகார்களைப் பதிவு செய்யவும் 9 கோடி ரூபாய் செலவில் வழி வகை செய்யப்படும்.

44. சென்னை நகரின் அனைத்து குடியிருப்புகளுக்கும் போதுமான அழுத்தத்தில் சமமான அளவில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்ய ஜவஹர்லால் நேரு தேசிய நகர மறுபுனரமைப்புத் திட்டத்தின் கீழ் (JNNURM) மத்திய அரசின் நிதி உதவியுடன் 246 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் பகிர்மான அமைப்புகள் மேம்படுத்தப்படும். முதற்கட்டமாக, கீழ்ப்பாக்கம் மற்றும் கலைஞர் கருணாநிதி நகர் மண்டலங்களில் இப்பணிகள் 131 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் நடப்பு ஆண்டிலேயே மேற்கொள்ளப்படும்.

45. பழைய மாமல்லபுரம் சாலையில் மென்பொருள் நிறுவனங்கள், தகவல் தொழில் நுட்பப் பூங்காக்கள் மற்றும் அதைச்சார்ந்த குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்கள்

**திரு.வி.க. பாலத்திற்கும் கிழக்கே அமைந்துள்ள அடையாறு கடல் முகம், அதில் அமைந்துள்ள தீவுகள் மற்றும் அடையாறு சிற்றோடைப் பகுதி உள்ளிட்ட ஒட்டுமொத்தமான பகுதியையும் சுமார் 100 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தி "அடையாறு பூங்கா" என்ற பெயரில் உலகத்தரம் வாய்ந்த ஒரு இயற்கை வளம்மிக்க பகுதியாகவும், சுற்றுலா மையமாகவும், இயற்கைச் சூழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் மையமாகவும் பெரிய அளவில் மாற்றி அமைக்க திட்டமிட்டுள்ளது.**

போன்றவைகளின் வளர்ச்சி மிக வேகமாக ஏற்பட்டு வருவதைக் கருதி, இப்பகுதிகளுக்கு குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் 72 கோடி ரூபாய் செலவில் சென்னைக் குடிநீர் வாரியம் மூலமாக செயல்படுத்தப்படும்.

46. சென்னை நகரைச் சுற்றியுள்ள உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளில் கழிவுநீரகற்று வசதி செய்து கொடுப்பதற்காக ஒரு ஒருங்கிணைந்த விரிவான திட்டத்தினை சென்னைக் குடிநீர் வாரியம் தயாரித்து வருகிறது. மணலி, அனகாபுத்தூர், பம்மல், திருவேற்காடு, பூந்தமல்லி ஆகிய ஐந்து நகராட்சிகளும், சின்னசேக்காடு, புழல், நாரவாரிக்குப்பம், மீஞ்சூர், நந்தம்பாக்கம், மாங்காடு, குன்றத்தூர், பெருங்குடி, பள்ளிக்கரணை, சோழிங்க நல்லூர், செம்பாக்கம், சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம், பீர்க்கங்கரணை, பெருங்களத்தூர், திருநீர்மலை, மீனம்பாக்கம், திருநின்றவூர், திருமழிசை ஆகிய 19 பேரூராட்சிகளும், கொட்டிவாக்கம், நெற்குன்றம், முகலிவாக்கம், கீழ்க்கட்டளை, மடிப்பாக்கம், பொழிச்சலூர், கௌல்பஜார், அயனம்பாக்கம் ஆகிய 8 கிராமப் பஞ்சாயத்துகளும் புனித தோமையார் மலை என்ற ஒரு கன்டோன்மெண்ட் பகுதியும் இத்திட்டத்தின் மூலம் பயனடையும். ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு அடுத்த ஆண்டில் திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## சென்னை குடிநீர் வடிகால் வாரியம்

47. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் பல ஆண்டுகளாக தொடர்ந்து நிலவி வரும் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண, காவிரி நீரை ஆதாரமாகக் கொண்ட 671 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டம் இந்த ஆண்டே செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும். இதன் மூலம் இராமநாதபுரம், பரமக்குடி, இராமேஸ்வரம், கீழக்கரை மற்றும் சிவகங்கை ஆகிய 5 நகராட்சிகள், முதுகுளத்தூர், மண்டபம், சாயல்குடி, கமுதி, தொண்டி, ஆர்.எஸ்.மங்கலம், திருப்புத்தூர், அபிராமம், இளையான்குடி, நெற்குப்பை, பொன்னமராவதி ஆகிய 11 பேரூராட்சிகள் மற்றும் சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களைச் சார்ந்த வழியோர குடியிருப்புகளையும் சேர்த்து மொத்தம் 3,163 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும். இதன் மூலம் சுமார் 16 இலட்சம் மக்கள் நிரந்தரமாக குடிநீர் வசதிகளைப் பெறுவார்கள்.

48. அதே போன்று தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் புளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் 1,005 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதியுதவியுடன் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த இந்த அரசு நடவடிக்கைகளை விரைவுபடுத்தியுள்ளது. இத்திட்டத்தின் தேவைபற்றி மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். இதை அடுத்து, ஜப்பானிலிருந்து குழு ஒன்று சென்னைக்கு வந்து திட்டத்தினை ஆய்வு செய்து ஜப்பானிய அரசிற்கு அறிக்கை அளித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் முதுநிலை செயல் இயக்குநரும், குழும உறுப்பினரும் மற்றும் புதுடெல்லியில் உள்ள இந்த நிறுவனத்தின் தலைமைப் பிரதிநிதியும் 17.07.2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் என்னையும் சந்தித்தபோதும் இத்திட்டத்தின் தேவை குறித்து அவர்களிடம் எடுத்துரைக்கப் பட்டது. மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இத்திட்டத்தை ஜப்பான் நாட்டின் அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

49. இந்தத் திட்டம் செயலுக்கு வரும்போது தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஒசூர் ஆகிய 3 நகராட்சிகள், காரிமங்கலம், அரூர், கடத்தூர், பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு, பர்கூர், ஊத்தங்கரை, தேன்கனிக்கோட்டை உள்ளிட்ட 17 பேரூராட்சிகள் மற்றும் 6,755 குடியிருப்புகள் பயன்பெறும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 30 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

50. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தற்போது நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் சில முக்கிய குடிநீர்த் திட்டங்களை மாவட்ட வாரியாக தெரிவிக்க விரும்புகிறேன்.

51. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சுமார் 10 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்ட குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

52. 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்லடம் நகராட்சி, 29 பேரூராட்சிகள் மற்றும் 965 குடியிருப்பு

களுக்கு சுமார் 9 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

53. 49 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குறிச்சி, குனியமுத்தூர் நகராட்சிகள் மற்றும் கிணத்துக்கடவு பேரூராட்சிக்கு சுமார் 2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

54. 30 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கவுண்டம்பாளையம் நகராட்சி மற்றும் வடவள்ளி பேரூராட்சிக்கு சுமார் 1 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

55. பெரம்பலூர் மாவட்டத்தில் 44 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரியலூர், செந்துறை, வேப்பூர், திருமானூர், ஆலத்தூர் ஒன்றியங்களைச் சார்ந்த 636 குடியிருப்புகளுக்கு சுமார் 4 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

56. திருநெல்வேலி மாவட்டத்தில் 43 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ராயகிரி, சிவகிரி, வாசுதேவநல்லூர், ஆலங்குளம் ஆகிய பேரூராட்சிகள், வாசுதேவநல்லூர், பாப்பாகுடி ஒன்றியங்களைச் சார்ந்த 78 குடியிருப்புகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் திருவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சுமார் 3 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

57. புதுக்கோட்டை மாவட்டத்தில் 42 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரிமளம், அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி ஒன்றியங்களைச் சார்ந்த 706 குடியிருப்புகள், அறந்தாங்கி நகராட்சி மற்றும் தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் 120 குடியிருப்புகளுக்கு சுமார் 3 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

58. கன்னியாகுமரி மாவட்டத்தில் 28 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 79 கடலோர குடியிருப்புகள் மற்றும் 17 பேரூராட்சிகள், 19 வழியோரக் குடியிருப்புகளுக்கான சுமார் 2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

59. 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குழித்துறையாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம், பைங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், புதுக்கடை கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் மூஞ்சிறை குடிநீர்த் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு நீர் சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கப்படும்.

60. நீலகிரி மாவட்டத்தில் 6 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சேரன்கோடு ஊராட்சிக்கு 38 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

61. திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் 13 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருத்தணி மற்றும் அரக்கோணம் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

62. திண்டுக்கல் மாவட்டத்தில் 9 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேடசந்தூர் கூட்டுக் குடிநீர் விரிவாக்கத் திட்டம்.

63. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் சில முக்கிய குடிநீர்த் திட்டங்களைப் பற்றி தற்போது குறிப்பிட விரும்புகிறேன்.

64. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாம்பரம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

65. திருவள்ளூர் மாவட்டத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நெற்குன்றம் மற்றும் 48 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

66. வேலூர் மாவட்டத்தில் 900 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகர்ப்புற மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

67. திருவண்ணாமலை மாவட்டத்தில் 4 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கீழ் பெண்ணாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

68. 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விழுப்புரம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

69. 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தஞ்சாவூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

70. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் விடுபட்ட மற்றும் விரிவாக்கப் பகுதிகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

71. 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கரூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

72. 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரம்பலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

73. ஈரோடு மாவட்டத்தில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விடுபட்ட பகுதிகளுக்கு முத்தூர் காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

74. சேலம் மாவட்டத்தில் 178 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேலம் மாநகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

75. மேலும், 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நரசிங்கபுரம் நகராட்சி, 12 பேரூராட்சிகள் மற்றும் ஏழு ஒன்றியங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

76. நாமக்கல் மாவட்டத்தில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிப்பாளையம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

77. மதுரை மாவட்டத்தில் 148 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேலூர் நகராட்சி, எ.வெள்ளாளப்பட்டி பேரூராட்சி மற்றும் ஏழு ஒன்றியங்களைச் சார்ந்த 1,332 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்

78. மேலும், 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பரங் குன்றம் நகராட்சி மற்றும் ஆர்விபட்டி பேரூராட்சிக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

79. விருதுநகர் மாவட்டத்தில் 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாத்தூர், விருதுநகர், அருப்புக் கோட்டை ஊராட்சி ஒன்றியங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

80. தூத்துக்குடி மாவட்டத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாயர்புரம் மற்றும் பெருங்குளம் பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

81. திருநெல்வேலி மாவட்டத்தில் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாநகராட்சியில் தச்சநல்லூர் மற்றும் திருநெல்வேலி பகுதிகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

82. மேலும் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாநகராட்சியில் பாளையங் கோட்டை மற்றும் மேலப்பாளையம் பகுதிகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

83. கன்னியாகுமரி மாவட்டத்தில் 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாகர்கோவில் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

84. இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் சரியானபடி பராமரிக்கப்பட்டால்தான் முழுப் பயனும் மக்களைச் சென்றடையும். நான் பல்வேறு மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்யச் சென்ற போது கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பராமரிப்பு பற்றிய பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் ஏனைய மக்கள் பிரதிநிதிகளும் என்னிடம் தெரிவித்தார்கள்.

85. பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர் திட்டங்கள் இயங்குவதற்குத் தடை இல்லாத மின்சாரம் பெறுவது அவசியமாகும். தற்போது இது போன்ற பல பெரிய திட்டங்களில் தனி மின் பாதை இல்லாததும் இதனால் குடிநீர் வழங்கலில் அடிக்கடி தடை ஏற்படுகிறது என்பதும் எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

86. திருநெல்வேலி மாவட்ட ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூட இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு இது போன்ற திட்டங்களில் தனி மின்பாதை அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தினைத் தெரிவித்தார்.

87. இக்கருத்துக்களின் அடிப்படையில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் 12 மணி நேரத்திற்கும் அதிகமாக இயங்க வேண்டிய திட்டங்களுக்கும், அதுபோல் ஒன்றுக்கு மேற்பட்ட துணை மின் நிலையங்களில் இருந்து மின்சாரம் பெறும் திட்டங்களுக்கும் தங்கு தடையின்றி மின்சாரம் பெற ஏதுவாக தனி மின்பாதை புதிதாக அமைக்கப்படும்.

88. மேலும் மாவட்டங்களில் உள்ள குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்புக் கோட்டங்கள் மற்றும் உப கோட்டங்களை மாவட்ட ஆட்சியரின் நேரடி நிருவாக கண்காணிப்பின்கீழ் கொண்டு வரவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் குடிநீர்வழங்கல் வாரியங்கள் ஆகியவற்றின் பணியாளர்களுக்கான நலத்திட்ட அறிவிப்புகள்

89. அரசின் திட்டங்களை மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதில் அரசுப் பணியாளர்கள் பெரும்பங்காற்றி வருவது நாம் அனைவரும் அறிந்ததே. முந்தைய அரசு அரசுப் பணியாளர்களை கடுமையாக நடத்தி அவர்களது உரிமைகளையும், சலுகைகளையும் பறித்ததையும் நாம் அறிவோம். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன் அரசுப் பணியாளர் களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளையும் சலுகைகளையும் மீண்டும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, இத்துறை சார்ந்த அரசுப் பணியாளர்கள் நலன் குறித்த சில அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்.

90. மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு 1 கோடி ரூபாய்

செலவில் பாதுகாப்பு கையுறைகள், காலணிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படும்.

91. சென்னை மாநகராட்சியில் மலேரியா துறையில் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வரும் 60 பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள்.

92. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தொகுப்பூதியத்தில் ஒப்பந்த அடிப்படையில் தற்போது பணிபுரிந்து வரும் 170 சமுதாய அமைப்பாளர்களின் பணியை வரன்முறைப்படுத்தி அவர்கள் காலமுறை ஊதியத்திற்குக் கொண்டுவரப்படுவார்கள்.

93. சென்னை மாநகரில் கழிவுநீர் அமைப்பைப் பராமரிக்கும் பணியாளர்களின் பாதுகாப்புக்காக 3 கோடி ரூபாய் செலவில் பாதுகாக்கும் பெல்ட், தலைக் கவசம், துர்நாற்றக் காற்று உட்புகாமல் தடுக்கும் கவசம், துர்நாற்றக் காற்றை கண்டறியும் உபகரணம், கையுறைகள், காலணிகள் வழங்கப்படும்.

94. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் C&D பிரிவு பணியாளர்களுக்கு கடந்த ஆட்சியால் வழங்கப்படாத 2004 –05க்கான போனஸ் மற்றும் அன்பளிப்புத் தொகை உடனடியாக அவர்களுக்கு வழங்கப்படும். இதனால், சுமார் 8,000 பணியாளர்கள் பயன் அடைவார்கள். அரசுக்கு கூடுதலாக 2 கோடி ரூபாய் செலவாகும்.

95. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தற்போது தொகுப்பூதியப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வரும் 881 பணியாளர்கள் காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள்.

96. சென்னை மாநகராட்சியில் மழலையர் பள்ளிகளில் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் 102 ஆசிரியர்கள், 102 குழந்தை பராமரிப்பு அலுவலர்கள் (ஆயாக்கள்) 30 அலுவலக உதவியாளர்கள் ஆகிய 234 பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள்.

97. முந்தைய அரசால் அறிவிப்பு செய்தபடி பேரூராட்சிகளில் ஊதிய ஏற்ற முறைக்கு கொண்டு வரப்படாத 2,923 தொகுப்பூதியப் பணியாளர்கள் ஊதிய ஏற்ற முறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார்கள். இந்த ஊதிய ஏற்ற முறையால் ஆண்டுக்கு 13 கோடியே 26 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். ❖

# அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயலாக்கம்

## உள்ளாட்சி அமைப்புகள்

1. உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் இந்த ஆண்டு குறித்த காலத்திற்குள் நடத்தப்படும்.

2. உள்ளாட்சித் தேர்தலில் உறுப்பினர் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கு **சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு,** தேர்தல் நடத்தப்படும்.

3. உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துவதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்றி அமைப்பதற்கும், அவைகளைப் பிரிப்பதற்கும் ஏதுவாக பரிந்துரை செய்ய ஒரு நிபுணர் குழு அமைக்கப்படும்.

4. உள்ளாட்சி அமைப்புகளின் தற்போதைய அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை ஆய்வு செய்து தக்க பரிந்துரைகள் வழங்கிட இந்த அரசு ஒரு நிபுணர் குழு அமைக்க முடிவு எடுத்துள்ளது.

## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

5. நடப்பு ஆண்டு முதல் தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சிகளின் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு புதிய திட்டமான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் வாயிலாக தமிழ்நாட்டிலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளும் வரும் 5 ஆண்டுகளில் மொத்தம் ரூ. 2,500 கோடி அளவிற்கு மாநில அரசின் நேரடி நிதியுதவி பெறும். இத்துறையின்

மூலம் செயல்படுத்தப்படும் மத்திய மாநிலத் திட்டங்களில் இந்த புதிய திட்டமே மிகப் பெரிய திட்டமாகும்.

## இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

6. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ், 1998ஆம் ஆண்டு முதல் கான்கிரீட் கூரை அமைப்பதற்காக 12,000 ரூபாய் மாநில அரசு வழங்கி வந்ததை, முந்தைய அரசு 2004ஆம் ஆண்டில் 9,000 ரூபாயாகக் குறைந்தது. ஆனால், இந்த ஆண்டு கட்டப்பட இருக்கும் 49,850 வீடுகளுக்கு கான்கிரீட் கூரை அமைப்பதற்காக இந்தத் தொகை 9,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக மாநில அரசு கூடுதலாக 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

7. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை 1 கோடி ரூபாய் என்பதை 1 கோடியே 20 இலட்சம் ரூபாயாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயர்த்தி உள்ளார் என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இதனால் மாநில அரசிற்கு ஆண்டிற்கு 47 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

8. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கணினி, பிரிண்டர் மற்றும் Broadband Internet Connection ஆகியவற்றை அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் வாங்கிக் கொள்ளலாம்.

## சிறந்த ஊராட்சிகளுக்கான விருது

9. சிறப்பான மற்றும் புதுமையான முயற்சிகளை செயல்படுத்தும் கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் செயல்பாட்டினை கௌரவிக்கும் வகையில் **உத்தமர் காந்தி ஊராட்சி விருது** வழங்கப்படும். இவ்விருதிற்காக ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்படும் 15 கிராம ஊராட்சிகளுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை, சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி

10. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளில் உள்ள பேருந்துகள் செல்லும் 1,543 கிலோ மீட்டர் நீளம் உள்ள 889 சாலைகள் நபார்டு வங்கி உதவியுடன் 107 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

## வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் கணக்கெடுப்பு

11. 2002ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் கணக்கெடுப்பு முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்ற புகார்கள் காரணமாக, தற்போதுள்ள பட்டியலில் இடம் பெற்றவர்களின் பெயர்கள் மறு ஆய்வுக்காக அந்தந்த ஊராட்சி அலுவலகங்களில்

> **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை 1 கோடி ரூபாய் என்பதை 1 கோடியே 20 இலட்சம் ரூபாயாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயர்த்தி உள்ளார்**

பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். ஆட்சேபணைகள் இருப்பின் மறு ஆய்வு செய்து, இறுதிப் பட்டியல் மீண்டும் கிராம ஊராட்சிகளில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும். அத்துடன் இறுதிப் பட்டியல் இணைய தளத்திலும் வெளியிடப்படும்.

### நகரப்பகுதியில் உள்ள சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி

12. ஊரகப் பகுதியில் உள்ள சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூபாய் 10,000 பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மானியமாக வழங்கப்படுகிறது. இதுபோன்று நகரப் பகுதியில் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள, தர மதிப்பீட்டில் தேர்வுபெற்ற சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி தலா 10,000 ரூபாய் மானியமாக இந்த ஆண்டு மாநில அரசு நிதியிலிருந்து வழங்கப்படும். இதற்காக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### மகளிர் சுயஉதவிக் குழுக்களை ஊக்குவிக்க விருதுகள்

13. சிறப்பாகச் செயலாற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கும், கிராம ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், ஒன்றிய மாவட்ட மற்றும் மாநில அளவிலும் அவர்களை ஊக்குவிக்கும் விதமாக மணிமேகலை விருது வழங்கப்படும். இதற்காக 35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு பிணை வைப்புத் தொகை விலக்கு

14. மகளிர் சுய உதவிக் குழுக்கள் அரசு ஒப்பந்தப் புள்ளிகளில் போட்டியிட ஏதுவாக, சிறு தொழில் நிறுவனங்களுக்கு அளிப்பது போல் சுய உதவிக் குழுக்களுக்கும் பிணைவைப்புத் தொகை கட்டுவதிலிருந்து விலக்கு அளிக்க பரிசீலிக்கப்படும்.

### ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல்

15. ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை வலுவான மக்கள் அமைப்புகளாக உருவாக்குவது இந்த அரசின் மிக முக்கியமான குறிக்கோளாகும். இதற்கு ஏதுவாக பயிற்சிகள் அளிக்கப்பட்டு, இவ்வாண்டு 4,000 கூட்டமைப்புகளுக்கு தொடக்க நிதியாக 10,000 ரூபாய் வீதம் வழங்கப்படும். மேலும் இக்கூட்டமைப்பு களுக்கு கூடுதலாக அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கப்படும்.

### உலக வங்கி நிதி உதவியுடன் "வாழ்ந்து காட்டுவோம்'' திட்டம்

16. ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்றிட தமிழ்நாடு ஆற்றலளிப்பு மற்றும் வறுமைக் குறைப்புத் திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். "வாழ்ந்து காட்டுவோம்" என்ற பெயரில் இத்திட்டம் 15 மாவட்டங்களிலுள்ள, 70 ஒன்றியங்களில், 2,432 கிராம ஊராட்சிகளில், 717 கோடி ரூபாய் செலவில், 6 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். இவ்வாண்டு இந்தத் திட்டத்திற்காக 162 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

### சென்னையில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு விற்பனை மற்றும் கண்காட்சி மையம்

17. தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங் களிலும் செயல்படும் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக சுமார் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் சுய உதவிக் குழு பொருட்கள் விற்பனை மற்றும் கண்காட்சி மையம் வள்ளுவர் கோட்டம் அருகில் உள்ள இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் நிறுவப்படும்.

### சுனாமி வாழ்வாதார மேம்பாட்டிற்கு பொருளாதார உதவிகள்

18. சுனாமியால் பாதிக்கப்பட்ட 12 கடலோர மாவட்டங்களில், ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தின் மூலம்,

⇨ வங்கிக் கடன் பெற சிரமப்படும் உடல் ஊனமுற்றோருக்கு, பொருளாதார மேம்பாட்டிற்காக 10,000 ரூபாய் முழு மானியமாக வழங்கப்படும்.

⇨ சுயஉதவி குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கிட இத்திட்டத்தில் 30,000 ரூபாய் மானியமாகவும், 15,000 ரூபாய் வங்கி கடனாகவும் வழங்கப்படும்.

⇨ பொருளாதார கடனுதவிக்கு 4% வட்டி மானியமாக வழங்கப்படும்.

⇨ சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் பொருளாதாரக் கடனுதவிக்காக 133 கோடி ரூபாயும், திறன் வளர் பயிற்சிக்காக 19 கோடி ரூபாயும், பொருளாதார மேம்பாட்டிற்கு உதவக்கூடிய உள் கட்டமைப்பு வசதிகளுக்காக 38 கோடி ரூபாயும் ஒதுக்கப்படும்.

### ஊரக வளர்ச்சித்துறை சார்ந்த பணியாளர்கள் நலன்

முந்தைய அ.இ.அ.தி.மு.க.ஆட்சியில், ஊரக வளர்ச்சித் துறையில் பணியாளர்களுக்கு எந்தவித நலத்திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை. அரசு அலுவலர் போராட்டத்தின் போது இத்துறையைச் சார்ந்த அலுவலர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். ஆட்குறைப்பு, காலிப்பணியிடம் நிரப்பப்படாத நிலை காரணமாக இத்துறையின் பணிகள் மிகவும் பாதிக்கப்பட்டன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இந்தத்துறை பணியாளர்களின் சிரமங்களைக் குறைக்கும் நடவடிக்கைகளின் தொடக்கமாக கீழ்க்கண்ட நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

19. தற்போது தகுதியுள்ள ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் எழுத்தர்களை இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்குவதற்கு 10 சதவிகிதம் ஒதுக்கீடு உள்ளது. இதை 20 சதவிகிதமாக உயர்த்துவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

20. கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் பகுதி நேர எழுத்தர்கள், தற்பொழுது பெறும் தொகுப்பூதியத்திற்குப் பதிலாக 1.9.2006லிருந்து, காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்படுவார்கள். முழு நேர ஊராட்சி உதவியாளர்களின் காலமுறை ஊதியம் ரூ. 1300–20–1500–25–2000 என்றும், பகுதி நேர ஊராட்சி எழுத்தர்களின் காலமுறை ஊதியம் ரூ. 625–10–725–20–925 என்றும் மாற்றி யமைக்கப்படும். இதன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக சுமார் 3 கோடி ரூபாய் செலவாகும். இதனால் 12,618 கிராம ஊராட்சிகளில் உள்ள உதவியாளர்கள் / பகுதி நேர எழுத்தர்கள் பயன் பெறுவார்கள்.

21. அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போல் ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்கும் சிறப்பு சேமநல நிதி ரூ.5,000லிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

22. துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பதவி உயர்வு பெற தற்போதுள்ள விதிமுறைகளை தளர்த்தி, விரிவாக்க அலுவலர்கள், ஊராட்சி விரிவாக்க அலுவலர் நிலையில் ஒரு வருடம் பணிபுரிந்தாலே, பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கலாம் என உத்தரவிட அரசு பரிசீலித்து வருகிறது.

23. ஊரக வளர்ச்சித்துறையைச் சார்ந்த அலுவலர்கள் 4.5.2000 முதல் 15.5.2000 வரை போராட்டத்தில் ஈடுபட்ட காலம் இது வரை பணிக்காலமாக வரன்முறை செய்யப் படவில்லை. இந்த போராட்ட காலத்தை பணிக்காலமாக வரன்முறை செய்ய அரசு தற்போது முடிவு செய்துள்ளது.

❖ ❖ ❖

## மனித உடலில்...

◈ மனித உணவுப் பாதையின் சராசரி நீளம் – 8 மீட்டர்.

◈ நம் உடலில் காணப்படும் மிகப் பெரிய சுரப்பி – கல்லீரல்.

◈ மூச்சுக்குழலின் சராசரி நீளம் – 10 செ.மீ.

◈ இரு நுரையீரல்களில் பெரியது – வலது நுரையீரல்.

◈ மூளையில் சுவாசத்தைக் கட்டுப்படுத்தும் பகுதி முகுளம்.

◈ ஒரு நிமிடத்திற்கு நாம் சராசரியாக 12 முதல் 15 முறை சுவாசிக்கிறோம்.

◈ உள் மூச்சின் போது காணப்படும் ஆக்ஸிஜனுடைய அளவு 20%.

◈ சுவாசித்தல் நடைபெறும் இடம் – மைட்டோகான்டிரியா.

◈ சராசரி மனிதனுடைய இரத்த அழுத்தம் – 120/80.

◈ நம் உடலில் யூரியா கல்லீரலில் தயாரிக்கப்படுகிறது.

◈ மனித இரத்தம் – காரத்தன்மையுடையது.

◈ நாளமில்லா சுரப்பிகளின் தலைமைச் சுரப்பி எனப்படுவது – பிட்யூட்ரி.

# உழவர் சந்தை


**பெ. ராஜா முத்தையன்**
வனப் பாதுகாவலர்,
சேலம்




உழவனின் நண்பன்! உழவர் சந்தை!
உண்மையான விலை! உழவர் சந்தை!

இந்தா எடுத்துக் கொள் ! இரண்டு ரூபாய் போதுமே! –
உழவர் சந்தை!
பந்தா இல்லாத உழவனின் பாசமிகு வியாபாரம் –
உழவர் சந்தை!

நூறு பேர் கூடி நின்று ! நூதனமாய் சட்டம் போட்டு !
காருக்குள்ளே உட்கார்ந்து ! கறாராய் பேசிவிட்டு – நாங்கள்
வைத்ததுதான் விலை என்று வம்பு பேசி மிரட்டி விட்டு !
இதுவரை பிழைத்து வந்த இடைத் தரகர்களின் விலா எலும்பை
நறுக்கென்று உடைத்து விட்டு ! நாளெல்லாம் பாடுபட்ட
நல்லவனாம் உழவனின், நேர்மிகு, நேரிடை வியாபாரத்தால் !
புல்லரிக்கும் மகிழ்ச்சியில் உழவன் பணப்பை நிரம்பும் இடம் –
உழவர் சந்தை!

அன்று நூறு ரூபாய் கொண்டு சென்றால் நூல் பையும் நிரம்பவில்லை !
பாட்டி சொன்ன கதையெல்லாம் காற்றினிலே போனதப்பா !
இன்று பட்டி தொட்டி மாந்தரெல்லாம் சுதந்திரமாய் நடந்து சென்று !
பத்து ரூபாய் விலையிலே பை நிரம்பும் வித்தையை காணுமிடம் –
உழவர் சந்தை!

பசுமையான காய்கறிகள் ! பல வண்ண காய்கறிகள் !
நித்தம் நித்தம் கூடையில் ! புதுப் புது காய்கறிகள் !
கொத்துக் கொத்தாய் கிடைக்கும் ! சத்தான காய்கறிகள்!
புதுமணத் தம்பதிக்கோ முருங்கைக்காய், வல்லாரை !
இளம் வயதினருக்கு வேண்டுமே ! தேங்காயும், தக்காளியும் !
இல்லற அப்பாவுக்கும் கிடைக்குமே ! அத்திப்பூ !
தொல்லைதரா காய்கள் ! முள்ளங்கியும், வெள்ளரியும்!
கிருமிநாசினி வெங்காயம் ! இரும்புச் சத்து கீரைகள் !
மருந்துகுண பூண்டு ! பாவையருக்கும் வண்ணப் பூக்கள் !
நீரிழிவு மனிதருக்கு ! நோய் தீர்க்க பாகற்காய் !
கோவைக்காய் ! அவரைக்காய்!
சிறு நீரகக் கல்லா ! செவ்வாழைத்தண்டு அங்குண்டு !
நரம்பு முறுக்கேற ! நாடுவீர் கேரட் கிழங்கு !
உடம்பும் இளமை பெற ! உண்ணுவீர் நெல்லி ! எலுமிச்சை !
இடையும், வயிறும் அழகு பெற ! எழில்மிகு இஞ்சி உண்டு !
கொழுத்த உடம்பு குதிரை ஆக ! கொள்ளு கேட்டு வாங்குவீர் !
கர்ப்பிணிக்கோ மாங்காய் ! கால் வீக்கத்திற்கு சுரைக்காய் !
எத்தனையோ காய்கறிகள் ! முத்தான விலையில் கிடைக்கும் –
உழவர் சந்தை !

* * *

# மறைந்த பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிதியுதவி



தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகைத் துறையினரின் நலன் கருதி, உரிய பரிசீலனைக்குப் பின்னர், பத்திரிகைத்துறையில் தொடர்ந்து 20 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் தொடர்ச்சியாக பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், மற்றும் புகைப்படக்காரர்கள் – இவர்களில் பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால், இயற்கை எய்துபவர்களுடைய குடும்பத்திற்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி திட்டத்தின் மூலம், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 1997 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 25 பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 1997 முதல் 2001 வரை 16 பத்திரிகையாளர்களுக்கும் 2001 முதல் 2006 வரை 9 பத்திரிகையாளர்களுக்கும் மேற்படி உதவி வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 29.8.2006 அன்று பின்வரும் நான்கு மறைந்த பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு இந்நிதியுதவியினை வழங்கினார்கள்.

1. **திரு. சாவி (எ) சா. விஸ்வநாதன் (ஆனந்தவிகடன், கல்கி, தினமணிக்கதிர், குங்குமம் மற்றும் சாவி, பருவ இதழ்கள், சென்னை)**

முதுபெரும் தமிழ் எழுத்தாளரும், பிரபல பத்திரிகை ஆசிரியருமான சாவி என்று அனைவராலும்







அன்புடன் அழைக்கப்பட்ட திரு. விஸ்வநாதன் அவர்கள் 9.2.2001ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். அவருடைய துணைவியார் திருமதி ஜானகி விஸ்வநாதன் அவர்கள், இத்துறைக்கு பத்திரிகையாளர் குடும்ப உதவிநிதி வேண்டி 25.5.2006 அன்று விண்ணப்பித்திருந்தார். அவரது விண்ணப்பம், பரிசீலிக்கப்பட்டு, சிறப்பு நிகழ்வாகக் கருதி, திருமதி ஜானகி விஸ்வநாதன் அவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ், ரூபாய் 50,000 வழங்க ஆணையிடப்பட்டது. 29.8.2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திருமதி. ஜானகி விஸ்வநாதன் அவர்களிடம், அதற்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.

2. **திரு. தி. தேசிங்கு (வண்ணத்திரை வார இதழ், சென்னை)**

6–11–2001 அன்று மறைந்த பத்திரிகையாளர் திரு. தி. தேசிங்கு அவர்களின் துணைவியார் திருமதி. தே. ஆர்த்தி அவர்கள், 15–3–2002 அன்று பத்திரிகையாளர் குடும்ப உதவிநிதி வேண்டி விண்ணப்பித்தார். மனுதாரருக்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியாக ரூ.2,00,000 (ரூபாய் இரண்டு இலட்சம்) வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 18–7–2006 அன்று ஆணையிட்டார்கள். 29.8.2006 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், திருமதி. தே. ஆர்த்தி அவர்களிடம், அதற்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.

3. **திரு. எம். இன்பராஜ், (மாலை முரசு நாளிதழ், மதுரை)**

28.8.2002 அன்று மறைந்த பத்திரிகையாளர் திரு. எம். இன்பராஜ், அவர்களின் துணைவியார் திருமதி இ. வேல்தங்கம் அவர்கள், 29.10.2002 அன்று பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியாக ரூ.2,00,000 (ரூபாய் இரண்டு இலட்சம்) வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 18.07.2006 அன்று ஆணையிட்டார்கள். 29.8.2006 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், திருமதி. இ.வேல்தங்கம் அவர்களிடம், அதற்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.

4. **திரு.எம்.சுப்புக்குட்டி (தினகரன் நாளிதழ், திருச்சி)**

13.4.2001 அன்று மறைந்த பத்திரிகையாளர் திரு. எம். சுப்புக்குட்டி அவர்களின் துணைவியார் திருமதி சு. சுப்புலட்சுமி அவர்கள், 19.8.2001 அன்று பத்திரிகையாளர் குடும்ப உதவிநிதி வேண்டி விண்ணப்பித்தார். மனுதாரருக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர் குடும்ப உதவிநிதியாக ரூ.50,000 (ரூபாய் ஐம்பதாயிரம்) வழங்க 23.7.2006 அன்று ஆணையிட்டார்கள். 29.8.2006 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திருமதி. சு. சுப்புலட்சுமி அவர்களிடம், அதற்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலாளர் திரு. வெ. இறையன்பு, இ.ஆ.ப., மற்றும் செய்தி – மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. சி. கோசலராமன், இ.ஆ.ப, ஆகியோர் உடன் இருந்தனர். ✶



# பெரியாரின் தொலைநோக்குப் பார்வை

தந்தை பெரியார் பிறந்தநாள் - செப்டம்பர் 17

இப்போது மக்களில் ஒரு சிலர் மேற்கண்ட "ஆத்மார்த்தம்'' முதலிய "சூட்சமங்களில்'' உள்ள கவலையையும் மூடநம்பிக்கையையும் விட்டு, தம் அறிவையும், அனுபவத்தையுமே நம்பிச் சிந்தித்ததன் காரணமாகவே பல அற்புதங்களும் அதிசயங்களும் காணமுடிந்தபின், மேல்நாடுகளிலே அதிகம்பேர் அந்தப்படி சிந்திக்க முன்வந்து விட்டார்கள். பழைய உலகம் இனி நிலைக்காது என்று முடிவு கட்டுகிறார்கள். புதிய உலகத்தைப் பற்றியே சிந்திப்பதும், சித்தரிப்பதும், எதிர்பார்ப்பதுங்கூட இன்று பல அறிஞரின் கவலையாகப் போய்விட்டது.

ஏன் பிறக்க வேண்டும்? சகல சவுகரியங்களுமுள்ள இப்பரந்த உலகில் உணவுக்காக என்று ஒருவன் ஏன் பாடுபட வேண்டும்? ஏன் சாகவேண்டும்? என்கின்ற பிரச்சினைகள் சிந்தனைக்கு மயக்கமளித்து வந்த சிக்கலான பிரச்சினைகளாக இருந்தவை. இன்று தெளிவாக்கப்பட்டுப் பரிகாரம் தேடப்பட்டு வருகிற காலம் நடக்கிறது, இந்தப் போக்குச் சீக்கிரத்தில் மக்களின் பொதுவாழ்விலேயே பெரியதொரு புரட்சியை உண்டாக்கும் படியான புதிய உலகத்தை உண்டாக்கித்தான் தீரும். இழிவான வேலை என்பது இருக்காது; அடிமைத் தன்மை இருக்காது; ஒருவரையொருவர் நம்பிக்கொண்டு வாழ வேண்டிய அவசியம் இருக்காது; பெண்களுக்குக் காவல் கட்டுப்பாடு, பாதுகாப்பு என்பவையான அவசியம் இருக்காது.

உலக மக்கள் யாவரும் உயர்வாழ்வு வாழ வேண்டுமானாலும், அவ்வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய சவுகரியங்கள் ஏற்படவும், நிலைக்கவுமான காரியங்கள் ஏற்பட ஒரு மனிதனுக்கு ஒருநாள் ஒன்றுக்கு ஒரு மணி நேரம் அல்லது இரண்டுமணி நேரத்துக்கு வேலை செய்யவேண்டிய அவசியமே இருக்காது. ஒரு மனிதன் தன் காலுக்கோ, காதுக்கோ, நாசிக்கோ, நயனத்துக்கோ, வயிற்றுக்கோ, எலும்புக்கோ வலி இருந்தாலும், அவன் "எனக்கு வலிக்கிறது'' என்று சொல்லுவது போல், உலகில் வேறு எந்தத் தனிப்பட்ட மனிதனுக்கு ஏற்படும் சங்கடத்தையும், குறைபாடுகளையும், ஒவ்வொருவரும் (சமூகமே) தங்களுக்கு ஏற்பட்டதுபோல் நினைக்கும்படியும், அனுபவிப்பது போல் துடிக்கும்படியும், அவ்வளவு கூட்டு வாழ்க்கையும், ஒற்றுமை உணர்ச்சியும் ஏற்படும்.

உலகில் எந்த பாகத்திலும் இன்றைய மாதிரியான போர் நடக்காது. மக்கள், மக்களால், யுத்தம், கொள்ளை, கொலை முதலியவற்றின் பேரால் மடியமாட்டார்கள். உணவுக்காக வேலை செய்யவேண்டிய வேலையில்லாத் திண்டாட்டம் இருக்காது. மக்கள், உடற்பயிற்சிக்காக வேலை செய்ய வேண்டுமே என்கின்ற கவலை கொண்டு உழைப்பு வேலைக்காக அலைவார்கள்.

வாழ்வுக்கு வேண்டிய எல்லாத் தேவைத் துறைகளிலும் இயந்திர சாதனங்கள் பெருகும்போது நாட்டு மக்களில் ஒவ்வொருவரும் வருஷத்திற்கு இரண்டு வாரம் வேலை செய்வதனாலேயே மக்களுக்கு அவசியமான எல்லாத் தேவைகளும் பூர்த்தியாகிவிடலாம்.

ஆகவே, ஓர் ஆண்டில் மீதியுள்ள 50 வாரங்களும் மக்களைச் சும்மா, சோம்பேறிகளாய் இருக்கச் செய்யுமே என்று யாரும் பயப்பட வேண்டியதில்லை.

வாழ்க்கைச் சாதனங்களுக்கு எப்படிக் காலமும், யோசனையும், கண்டுபிடிப்புகளும் தேவை இருக்கிறதோ அதுபோலவே மக்களின் ஓய்வுக்கும், உடற்பயிற்சிக்கும், மகிழ்ச்சிக்கும், போக போக்கியத்துக்கும் யோசனைகளும், ஆராய்ச்சிகளும், சாதனங்களும், அவற்றைச் சுலபமாகச் செய்ய வசதிகள் கண்டுபிடிப்பதும், அவை நாளுக்கு நாள் மாற்றமடைவதும் ஆகிய காரியங்களில் மீதி நாட்கள் செலவழிக்கப்படவேண்டி இருக்கும்.

கவிகளும், இதர சித்திரக்காரர்களும், நாவலர்களும், சிற்பிகளும், போட்டி போட்டுக்கொண்டு புதிய உலகை (தோற்றத்தை) உண்டாக்குபவர்களாகவே இருப்பார்கள். திறமையானவர்களுக்குத்தான் வேலையும் மதிப்பும் கிடைக்கும்; மற்றவர்கள் அலட்சியப் படுத்தப்படுவார்கள்.

போக்குவரவு எங்கும் ஆகாய விமானமும், அதிவேக சாதனமுமாகவே இருக்கும்.

கம்பியில்லாத தந்தி சாதனம் ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் இருக்கும்.

ரேடியோ ஒவ்வொருவர் தொப்பியிலும் அமைக்கப் பட்டிருக்கும்.

உருவத்தைத் தந்தியில் அனுப்பும்படியான சாதனம் எங்கும் மலிந்து, ஆளுக்காள் உருவம் காட்டிப் பேசிக்கொள்ளத்தக்க சவுகரியம் ஏற்படும்.

மேற்கண்ட சாதனங்களால் ஓர் இடத்தில் இருந்து கொண்டே பல இடங்களில் உள்ள மக்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கச் சாத்தியப்படும். உணவுகளுக்குப் பயன்படும்படியாக உணவு, சத்துப் பொருள்களாகச் சுருக்கப்பட்டு ஒரு வாரத்திற்கு ஒரு சிறு குப்பியில் அடங்கக்கூடிய உணவு ஏற்பட்டுவிடும்.

மனிதனுடைய "ஆயுள் நூறு" வருஷமென்பது இரட்டிப்பு ஆனாலும் ஆகலாம், இன்னும் மேலே போனாலும் போகலாம்.

பிள்ளைப்பேறுக்கு ஆண் பெண் சேர்க்கை என்பதுகூட நீக்கப்படலாம். நல்ல திரேகத்துடனும், புதிய நுட்பமும், அழகும், திடகாத்திரமும் உள்ள பிரஜைகள் ஏற்படும்படியாக பொலிகாளைகள்போல் தெரிந் தெடுத்து மணிபோன்ற பொலி மக்கள் வளர்க்கப்பட்டு, அவர்களது வீரியத்தை இன்ஜெக்ஷன் மூலம் பெண்கள் கருப்பைகளுக்குள் செலுத்தி நல்ல குழந்தைகளைப் பிறக்கச் செய்யப்படும். ஆண் பெண் சேர்க்கைக்கும், குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப் பட்டுவிடும். மக்கள் பிறப்பு கட்டுப்படுத்தப்பட்டு ஓர் அளவுக்குள் கொண்டு வந்து விடக்கூடும்.

அநுபோகப் பொருள்களும் வெகுதூரம் மாற்ற மடைந்துவிடும். அதற்காக ஏற்படும் செலவும் அதை




அனுபவிக்கும் முறையும் வெகு சுருக்கமாக மாற்ற மடைந்துவிடும்.

ஒரு டன்னுள்ள மோட்டார் கார், ஓர் அந்தர் வெயிட்டுக்கு வரலாம்; பெட்ரோல் செலவு குறையலாம்; பெட்ரோலுக்குப் பதில் மின்சார சக்தியே உபயோகப் படுத்தப்படலாம் அல்லது விசை சேகரிப்பாலேயே ஓட்டப்படலாம்.

மின்சாரத்தின் உபயோகம் எல்லா மக்களுக்கும் பயன்படக்கூடிய விதமாகவும், மக்கள் வாழ்க்கை வசதிகளுக்குத் துணை செய்யும் விதமாகவும் விரியும்– பெருகும், விஞ்ஞானம் வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்கப் பயன்படும் படியான அதிசயப் பொருள்களும், கண்டுபிடிப்புகளும் தனிப்பட்டவர்களின் லாபத்துக்காக என்று முடங்கிக்கிடக்காமல் சகல மக்களும் சவுகரியம் தருகிற பொதுச் சாதனங்களாக அமையும்.

– தந்தை பெரியார் எழுதிய
"இனிவரும் உலகம்" என்னும்
நூலிலிருந்து ...

* * *



அறிஞர் அண்ணா பிறந்தநாள் - செப்டம்பர் 15

# வீட்டுக்கொரு புத்தகசாலை

பழங்காலத்திலே நூல் நிலையங்கள் சரியாக நடத்தப்பெறவில்லை. ஓலைச்சுவடிகள் பல நன்கு காப்பாற்றப்படாமல் பற்பல இடங்களிலே சிதறிப் போய்விட்டன. உலகத்திலே அச்சுப் பொறிகளைக் கண்டு பிடிப்பதற்கு முன்னர், எழுதுவதற்கு வேறு சாதனம் இல்லை. அப்போது ஓலைச்சுவடி சிறந்த சாதனமாக இருந்தது. அச்சுப்பொறிகள் கண்டுபிடித்த பின்னர் புத்துணர்ச்சி ஏற்பட்டது; நல்ல வசதியும் ஏற்பட்டது. அச்சுப்பொறிகள் கண்டுபிடிப்பதற்கு முன்னர் ஓலைச்சுவடியைக் கண்டுபிடித்த அறிவுத்திறனை நாம் பாராட்டுகிறோம்

நான், காணாத ஒரு புத்தகத்தை நூல் நிலையத்திலே கண்டு எடுத்துவிட்டேனானால், என்றுமில்லாத மகிழ்ச்சி ஏற்படுகிறது. நூல் யாரோ ஒருவருடைய சிந்தனை. அந்தச் சிந்தனையை தொகுத்துப் படிக்கிறோம்.

சென்னையில் வாழும் ஒருவனுக்கு, டெலிபோனை உபயோகிக்கத் தெரியாமல் போனால் எப்படியிருக்கும்? தந்தி கொடுக்கத் தெரியாமல் போனால் எப்படியிருக்கும்? துறைமுகத்தில் மிதக்கும் கப்பலைப் பார்த்து, 'ஓ! வீடு மிதக்கிறதா?' என்று கேட்டால் எப்படியிருக்கும்?

உலகத்திலே விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து, இப்பொழுது உச்சநிலையை அடைந்துள்ளது. மேல்நாட்டிலே ஒருவர் பேசுகின்ற நிலையிலே (Television) அவர் பேசுவதைக் கேட்பதுடன் அவரையே நேரில் காணலாம். உலகமே இன்று வீட்டு வாயிற்படியில் வந்து விட்டதே!

என்னுடைய விருப்பமெல்லாம், இத்தகைய, நவீன விஞ்ஞான அறிவைக் கற்பிக்கும் நல்ல ஏடுகள் உண்டாக வேண்டுமென்பதாகும். புதிய ஏடுகள் நல்ல கருத்துக்களை உடையதாக இருக்கவேண்டும். பழைய பெரிய நூல்களின் உள்ள நல்ல கருத்துக்களையெல்லாம் தொகுத்து வெளியிட்டால், மக்களுக்குப் பெரிதும் பயன்படும்.

தமிழை மட்டும் படிப்பதால் நாம் முழு அறிவையும் பெறமுடியாது. மற்ற மொழிகளிலே உள்ள சிறந்த நூல்களையும் நாம் படிக்கவேண்டும். சரித்திர அறிவு பெற வேண்டுமானால் சரித்திரத்தைப் பற்றிய நூல்களைப் படிக்க வேண்டும்! அப்பொழுதுதான் சரித்திர அறிவு பெருகும்.

தொகுப்பு முறையிலே பல நூல்கள் தோன்ற வேண்டும். பொய்யைக் கட்டிவிடாமல் உண்மையிலேயே நல்ல விதத்தில் ஏடுகள் அமைய வேண்டும். நாம் தேடித்தேடிக் கிடைக்காத கருத்தை நூலிலே கண்டால் மகிழ்ச்சி அடைவோம், அறிஞர் எல்லோரும்

ஒன்றுகூடி நல்ல திட்டம் போட்டு நல்ல ஏடுகளைத் தயாரிக்கலாம்.

இக்கால அறிவைக் கலந்து தரக் கூடியதாகவும் சுவைக்கக் கூடியதாகவும், பாருக்குப் பயன்படுவதாகவும் பல நூல்கள் தோன்ற வேண்டும். அகநானூறு – புறநானூறு இவைகளைப் பற்றி மக்களில் பலர் அறியமாட்டார்கள். அவற்றைப் பற்றிய சிறந்த கருத்துக்களையெல்லாம் தொகுத்து மக்களுக்கு நூல் வடிவாகத் தரவேண்டும். நல்ல நூல்கள் பரவினால் வெளி உலகம் தெரியாதிருக்கும் மக்கள், புதிய அறிவைப்பெற்று விழித்துக் கொள்வார்கள்.

நல்ல வரலாறுகளைப் படித்தால்தான் இளம் உள்ளத்திலே புது முறுக்கு ஏற்படும்.

விஞ்ஞான வித்தகர்கள் மக்கள் வாழ்க்கையை வளமாக்க பல அற்புதங்களைக் கண்டுபிடிப்பதை மக்கள் அறியமாட்டார்கள். எதிர்கால உலகம் விஞ்ஞானிகளைப் பற்றிய நல்ல ஏடுகளைத் தயாரித்து, மக்கள் மன்றத்திலே வைத்துப் பொது அறிவை விருத்தி செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் வீட்டுக்கொரு புத்தகசாலையை அமைக்க வேண்டும்.

ஆங்கிலம் தமிழ் அகராதி, அட்லாஸ், சரித்திரப் புத்தகம் இவை இரா, வாங்குவதற்குப் பணமில்லை என்று குறை சொல்ல முடியாது. மற்றவற்றிற்குச் செலவு செய்வதில் ஒரு பகுதியை ஒதுக்கிப் புத்தகங்கள் வாங்குவதற்கென்று செலவிட வேண்டும்.

❖ ❖ ❖

அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை, அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால், வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.

ஒளியின் பிம்பங்களாக நாம் திகழுகிறோம் நமது பண்டைப் பெருமைகளை நாம் உணர வேண்டும். நம்முடைய பரம்பரை பெரியது. நமது தமிழினம், மானமே பெரிதென மதித்த இனம், எவ்வுயிரையும் தன்னுயிர்போல் காத்து வந்தவன் தமிழன். பிறரை எதிர்பார்த்து வாழாதவன் தமிழன், பிறருக்குப் புறமுதுகு காட்டி ஓடாதவன் தமிழன். இமயத்தில் புலி பொறித்து, கடாரத்தை வென்று, ரோம் நகருக்குப் பொன்னாடை விற்றவன் தமிழன்.

இன்று தேவைப்படுகிற கருத்து அந்த நாளிலே தேவைப்படாமல் இருந்திருக்கலாம். செஞ்சிக் கோட்டையின் உள்ளே பகைவர்கள் யாரும் புக முடியாதபடி, அந்தக் காலத்துக்கு ஏற்பக் கோட்டை கட்டப்பட்டது. ஆனால் அந்தக் கோட்டையையே வைத்துக் கொண்டு, இந்தக் காலத்திலே, யாரும் போர் செய்ய முடியாது அந்தக் காலத்து நிகழ்ச்சியையும், இந்தக் காலத்து நிகழ்ச்சியையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். எதையும் சரியா? தப்பா? என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும் சரியில்லாததைத் தூக்கி எறிய வேண்டும்.

நம் மனம் ஒரு மியூசியம் போல இருக்கிறது. எது கொள்ளத்தக்கதோ, அதை ஏற்றுக் கொள்ளுங்கள். எது தள்ளத்தக்கதோ, அதைத் தள்ளி விடுங்கள்.

மாணவர்கள் மனத்தை துலாக்கோல்போல் வைத்து, தாங்கள் கேட்டவற்றை மனமாகிய துலாக்கோலில் இட்டுப் பார்க்க வேண்டும். நேர்மையானவற்றை ஏற்க வேண்டும்; மற்றவற்றைத் தள்ள வேண்டும், அதற்கு ஆசிரியர்கள் வழி செய்ய வேண்டும். பெருந்தன்மையோடு, எந்தக் கருத்துக்கும் நீங்கள் மனத்திலே இடம் தரவேண்டும்

எத்தகைய கருத்துக்கும், நீங்கள் மனத்திலே இடம் தருவதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது, மாணவமணிகளாகிய உங்களுக்கு ஆராயும் அறிவு வேண்டும், நீங்கள் அனைவரும் புத்துலகச் சிற்பிகளாக வேண்டும். உங்களிடம் தீரமும் திறமும் இருந்தால் மட்டும் போதாது இத்துடன் அறிவு ஆராய்ச்சிகளும் தேவை, இதற்கான பண்பும், பயிற்சியும் மிகமிகத் தேவை. அறிவுத் தெளிவோடு ஆராய்ந்து இது சரி, தவறு என்று முடிவுகட்டும் மனப்பான்மை, உங்களுக்கு வேண்டும் இதோடு, திட்டவட்டமான கொள்கையும் பெருநோக்கும் உங்களுக்கு இருக்க வேண்டும்.

*(அறிஞர் அண்ணாவின்*
*"சொற்செல்வம்" நூலிலிருந்து)*

# சொல்லும் செயலும்

ஒரு சமயம் காட்டில் குள்ளநரியை வேட்டைக்காரன் விரட்டினான். வெகுதூரம் ஓடி ஒரு விறகு வெட்டியிடம் குள்ளநரி தஞ்சம் புகுந்தது. அதனிடம் இரக்கம் கொண்ட விறகுவெட்டி பக்கத்திலிருந்த புதரில் அந்தக் குள்ளநரியை ஒளிந்து கொள்ளும்படி சொன்னான்.

சிறிது நேரத்தில் வேடன் துப்பாக்கியுடன் குள்ளநரியைத் தேடிக்கொண்டு வந்தான். அந்தக் குள்ளநரி சாதாரணமானது அன்று. அந்தக் காட்டிற்கு அருகில் இருந்த கிராமத்தில் பல குட்டி ஆடுகளை அடித்துத் தூக்கிச் சென்று தின்றுவிடும். ஆகவேதான் துப்பாக்கி வைத்திருக்கும் வேட்டைக்காரனிடம் அவ்வூர் மக்கள் அந்தக் குள்ளநரி பற்றிப் புகார் கூறினர். அவனும் அந்தக் குள்ளநரியைத் தேடிப்பார்த்தான். ஆனால் கண்ணில்பட்டதும் அது காணாமல் பதுங்கிவிட்டது.

வேட்டைக்காரன் அலைந்து திரிந்து கடைசியாகக் குள்ளநரி பதுங்கியிருக்கும் சரியான இடத்திற்குத்தான் வந்தான். ஆனால், அங்கே இருந்த விறகு வெட்டியைப் பார்த்ததும் "இங்கே சற்று நேரத்திற்கு முன் ஒரு குள்ளநரி ஓடிவந்ததை நீங்கள் பார்த்தீர்களா?'' என்று கேட்டான்.

விறகு வெட்டி, தன்னிடம் தஞ்சம் அடைந்த நரியைப் பற்றி வெளிப்படையாகப் பேச விரும்பவில்லை. "நான் குள்ளநரியைப் பார்க்கவில்லை!'' என்று ஒரு பொய்யைக் குள்ளநரியின் காதில் விழும்படியாக உரக்கக் கூறினான். அவன் பேசுவதைக் குள்ளநரியும் கேட்க வேண்டுமென்று அவன் விரும்பினான்.

விறகு வெட்டி வாயினால் குள்ளநரியைப் பார்க்கவில்லையென்று கூறினானே தவிர, அவனதுகை குள்ளநரி பதுங்கியிருந்த புதரைக் காட்டியது.

வேட்டைக்காரன் விறகு வெட்டியின் கையைக் கவனிக்கவில்லை, வாயினால் சொன்னதைக் கேட்டு வேறு வழியில் குள்ளநரியைத் தேடிச் சென்றுவிட்டான்.

வேடன் மறைந்தான். பதுங்கியிருந்த குள்ளநரி வெளியே வந்தது. விறகுவெட்டியிடம் ஒன்றும் சொல்லாமலே வழி நடக்கத் தொடங்கியது.

"நன்றி கெட்ட குள்ளநரியே! என்னிடம் சொல்லாமல் செல்வதேன்?'' என்று கேட்டான் விறகுவெட்டி.

"நண்பனே! உன் சொல்லைப்போல் உன் செயல் இல்லை, நீ கூறிய சொற்களுக்குப் பங்கம் விளைவித்தது உன் நீள்கரம். உன் சொல்லைப்போல் செயலும் இருந்திருக்குமாயின் நான் உனக்கு மரியாதை காட்டியிருப்பேன். நன்றியும் சொல்லியிருப்பேன்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் பாராமலேயே நடந்து சென்றது குள்ளநரி, கடமை தவறியதாக அது நினைக்கவில்லை.

*ஏ.ஜி.எஸ். மணி எழுதிய*
*"உலகம் போற்றும் கதைகள்"*
*நூலிலிருந்து*





# ஒரு இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு

திரு. ஆற்காடு நா. வீராசாமி
மாண்புமிகு மின்சாரம் மற்றும்
ஊரகத்தொழில் துறை அமைச்சர்

**1. தொழில் துறைக்கு மேலான சேவை அளித்தல்**

ஆளுநர் உரையில் தெரிவித்தபடி, தொழில் முதலீட்டாளர்கள் தொழில் துவங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசு அனைத்து வசதிகளையும் வழங்கும். அதற்கான முனைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தொழில் வணிக இயக்ககம், 269 கணினி மையங்கள் மூலம் தொழில் முனைவோர் பதிவு செய்து தற்காலிக தொழிற்பதிவுச் சான்றிதழ் பெறுவதற்கான வசதிகளை கொண்டுள்ளது. இவ்வியக்ககம் 2006–07 ஆம் ஆண்டில் தொழில் முனைவோர்க்கு நேரடி கணினி மூலம் கூடுதல் வசதிகளை அளிக்க ஒரு திட்டத்தை மேற்கொள்ள உள்ளது. கணினி ஆளுமை வசதிகளை விரிவுபடுத்துவதால் தொழில் முனைவோர் தங்களது மானியம் பெறுவதற்கான விண்ணப்பங்களின் தற்போதைய நிலையை நேரடியாக அறிந்துகொள்ள ஏதுவாகும். இதற்காக ரூ. 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. மாவட்டத் தொழில் மையங்களின் செயல்பாட்டை மேம்படுத்துதல்**

மாவட்டங்களில் தொழில் நடவடிக்கைகள் ஊக்குவிப்பதில் மாவட்டத் தொழில் மையங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. துறையின் அனைத்து திட்டங்கள் மற்றும் ஊக்குவிப்பு முயற்சிகள் அனைத்தும் மாவட்டத் தொழில் மையங்கள் மூலமே செயல்படுத்தப்படுகின்றன. மேலும், பொது மேலாளர் மற்றும் பணியாளர்களின் விரைவான செயல்பாட்டிற்கு 14 மாவட்டத் தொழில் மையங்களுக்கு தகுதியான வாகனங்கள் அளிக்க முடிவு செய்யப் பட்டுள்ளது. இவற்றிற்கான செலவினம் ரூ. 70 இலட்சம் ஆகும்.

**3. புதிய தொழில்களை உருவாக்கி ஒரு இலட்சம் நபர்களுக்கு தரமான வேலைவாய்ப்பளித்தல்**

மாநிலத்தின் உற்பத்தித் திறனைப் பெருக்க ஏதுவாக புதிய தொழிற்சாலைகள் துவங்குவதற்கு உரிய வசதிகளை செய்து கொடுப்பது இத்துறையின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும். துறை நிருவாகத்தை முடுக்கி விடுவதன் மூலம் தொழில் முனைவோருக்கு தேவையான ஊக்குவிப்பும் உதவியும் அளித்து சிறுதொழில் பிரிவில் புதிய தொழில்கள் துவங்கி அதன் மூலம் 31.3.2007க்குள் குறைந்தது ஒரு இலட்சம் நபர்களுக்கு தரமான வேலைவாய்ப்பளிப்பதை இத்துறை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

## 4. தொழிற்சேவை கூட்டுறவுச் சங்கங்களை நெறிப்படுத்துதல்

தொழிற்சேவைப் பணிகள் மாநிலத்தில் பெருகி வருகின்றன. தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்றவர்கள் உள்ளிட்ட வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள திறன்படைத்த பணியாளர்களின் எண்ணிக்கை 1.50 இலட்சத்திற்கும் மேலாகும். அதே சமயம் நகர்ப்புறங்களில் குளிர்சாதன வசதி பழுதுபார்த்தல், குழாய்ப் பணி செய்தல், குளிரூட்டிகள் பழுதுபார்த்தல் போன்ற சேவைப் பணிகளுக்கான தேவை பெருகி வருகிறது. திறன் படைத்த மற்றும் திறன் பெறாத பணியாளர்களான குழாய்ப் பணியாளர், மின்னாள் போன்றோர் பயன்பெறும் வகையில் 2006–07ஆம் ஆண்டில், 10 தொழிற்சேவை கூட்டுறவுச் சங்கங்களை இச்சேவைப் பணிகளில் ஈடுபடுத்த இத்துறை முடிவெடுத்துள்ளது. இச்சேவை சங்கங்கள் மூலம் தொழில் வாய்ப்புகளை இப்பணியாளர்கள் கண்டறிந்து அதன் மூலம் தங்கள் வருவாயையும், தொழிற் திறனையும் மேம்படுத்திக் கொள்வதுடன் இயந்திரங்கள் கையாளும் திறனையும் பெருக்கிக் கொள்ள இயலும். இதனை தனிநபர்கள் எளிதில் பெற இயலாது. 2006–07ஆம் ஆண்டில் இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ.1 இலட்சம் வீதம், ரூ. 20 இலட்சம் மானியமாக வழங்கப்படும். இதன் மூலம் தொழிற்பயிற்சி பெற்ற 500 இளைஞர்களுக்கு இந்தாண்டு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

## 5. சிறுதேயிலை விவசாயிகளுக்கு சேமிப்பு கிடங்கு வசதி அளித்தல்

சிறுதேயிலை விவசாயிகளுக்கு பெருமளவில் உதவிடும் வண்ணம் குன்னூரில் உள்ள இண்ட்கோசர்வ் நிறுவனத்திற்கு கிடங்கு வசதி பற்றாக்குறையாக உள்ளது. ரூ. 140 இலட்சம் மதிப்பீட்டில் 9,000 சதுர அடி பரப்பளவில் கட்டப்படவுள்ள கூடுதல் கிடங்கு வசதிக்கு அரசு ரூ. 30 இலட்சம் மானியம் வழங்கும். இதனால், உற்பத்தி மிகுதியாகும் காலத்தில் கூடுதலாகப் பெறப்படும் தேயிலைப் பொருட்களையும் ISO தர நிர்ணய விதிகளின்படி சேமிக்க இயலும்.

## 6. கயிறுக் குழுமங்களை மேம்படுத்துதல்

மாநிலத்தில் கயிறுத் தொழில் 70,000 பேருக்கு மேல் வேலைவாய்ப்பு அளித்து வருகிறது. இத்துறை கயிறு வாரியத்துடன் இணைத்து வேலூர், சிவகங்கை, தேனி, சேலம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் ரூ. 7.02 கோடி திட்ட மதிப்பீட்டில் 2006–07 ஆம் ஆண்டு முதல் கயிறு குழுமங்களை மேம்படுத்தும் பணியைத் துவக்க திட்டமிட்டுள்ளது. இதனால், இத்தொழிலின் உற்பத்தித் திறன் மேம்படுவதுடன், அடுத்த ஐந்தாண்டுகளில் 70,000க்கும் கூடுதலான கயிறு தொழிலாளர்கள் பயனடைவர்.

## 7. சேகோசர்வ்

சவ்வரிசித் தொழில் இம்மாநிலத்தில் சுமார் 2.5 இலட்சம் ஏக்கர் பரப்பில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்யப்படுவதாலும், அதைக் கொண்டு சேகோ மற்றும் ஸ்டார்ச் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதாலும் மாநிலத்தில் சுமார் 5 இலட்சம் மக்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த மரவள்ளிக் கிழங்குப் பயிரைத் தாக்கி வரும் 'கசாவா மொசைக்' என்னும் வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுநடவுத் திட்டம் ஒன்று ஏற்பாடு செய்து விவசாயிகளுக்கு வழங்குமாறு குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

சேகோசர்வ் சங்கத்தின் முயற்சியால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் சிலவகை சேகோ பொருட்களுக்கு மூன்றாண்டு காலத்திற்கு பாதுகாப்பு வரி (Safeguard Duties) விதிக்கப்படுகிறது. மத்திய அரசினால் விதிக்கப்படும் தீர்வை மற்றும் சுங்க வரி இனங்களில் சேகோசர்வ் சார்பாக அரசு உதவிடும் அதே வேளையில் இவ்வரிவிதிப்பின் முழுபலனையும் அடைய சவ்வரிசித் தொழில் உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்தி, விலையைக் குறைப்பது அவசியமாகும். நவீனமயமாக்கல் மூலம் இக்குறிக்கோளை எய்த சேகோசர்வ் அதன் உறுப்பினர்களுக்கு நவீன இயந்திரங்களை நிறுவ தொழில் அலகு ஒன்றுக்கு ஆகும் செலவில் 50% தொகையை, அதிகபட்சமாக ரூ.4.00 இலட்சத்திற்கு மிகாமல் மானியமாக வழங்கும். இதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் மாநில அரசு சேகோசர்வ் சங்கத்துக்கு அவ்வாறு மானியமாக வழங்கப்படும் தொகையில் 50 விழுக்காட்டை அரசு ஏற்றுக்கொள்ளும். இதற்காக 2006–07 ஆம் ஆண்டில் ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 8. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

சிட்கோ, தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் இதுவரை 43 தொழிற்பேட்டைகளை அமைத்துள்ளது. அதுமட்டுமன்றி 35 அரசு தொழிற்பேட்டைகளை முகவர் முறையில் பராமரித்து வருகிறது.

தருமபுரி மாவட்டத்தில் சிறுதொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கோடு தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்படும். திருப்பூருக்கு அருகில் பனியன் மற்றும் பின்னலாடை தொழில்களுக்கு தொழிற்பேட்டை அமைப்பதற்கான கோரிக்கைக் குறித்து, இவ்வாண்டு ஆய்வு செய்யப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பர்கூர் மற்றும் ஊத்தங்கரையில் உள்ள தொழிற்பேட்டைகளில் குறுந்தொழில் தொடங்குவோருக்காக 300 மனைகள் சுமார் ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**டான்சி**

டான்சி என்றழைக்கப்படும் நிறுவனம் 1965ஆம் ஆண்டு மாநிலம் முழுவதும் உள்ள சிறுதொழில் கூடங்களின் கூட்டமைப்பாக உருவாக்கப்பட்டது. ஆரம்பத் திட்டக்காலங்களில் 64 சிறுதொழில் கூடங்கள் இக்கூட்டமைப்பில் இயங்கி வந்தன. நம் மாநிலத்தில் தொழில் நடவடிக்கைகள் குறைவாக இருந்த காலத்தில் உருவாக்கப்பட்ட இந்த டான்சி நிறுவனமானது சிறுதொழில்கள் நன்கு வளர்ச்சி பெற்றுள்ள தற்காலத்தில் மிகவும் நலிவடைந்து உள்ளது. இதற்கு அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்டு எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளே காரணமாகும். குறிப்பாக 1991–1996க்கு உள்ளான காலக்கட்டத்தில் டான்சி நிறுவனம் தன் வசம் இருந்த நிலங்களைக் கூட விற்கும் நிலைக்குத் திட்டமிடப்பட்டுத் தள்ளப்பட்டது. தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையின் கீழ் அமைந்துள்ள இந்த அரசு மீண்டும் இந்நிறுவனம் மேம்படுவதற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும். முதற்கட்டமாக மின்சார வாரியம், போக்குவரத்துத் துறை போன்ற அரசுத் துறை நிறுவனங்கள் தாங்கள் வாங்கும் பொருட்களின் ஒரு பகுதியை டான்சி நிறுவனத்திடமிருந்து வாங்கிட ஏதுவான ஆணைகள் வெளியிடப்படும். அரசு நிறுவனங்களின் டெண்டர்கள் மூலம் பொருட்களைக் கொள்முதல் செய்யும்போது L1 ஆக வரும் ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள விலையில் டான்சி நிறுவனம் அப்பொருட்களை வழங்கிட முன்வருமானால் டான்சி நிறுவனத்திடமிருந்து 15 சதவிகித பொருட்களை அரசு நிறுவனங்கள் வாங்கிட தக்க ஆணைகள் வெளியிடப்படும்.

**நமது மாநிலத்திலுள்ள ஆயிரக்கணக்கான சிறிய தேயிலை விவசாயிகளுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் உதவிடும் வண்ணம் டீ செர்வ் (Tea Serve) ஏல மையத்தில் விற்கப்படும் தேயிலை மீது தற்போது விதிக்கப்படும் 4 சதவிகித பொது விற்பனை வரி மற்றும் 2 சதவிகித மத்திய விற்பனை வரி ஆகியவை 1 சதவிகிதமாகக் குறைக்கப்படும்.**

**பின்தங்கிய பகுதிகளில் சிறுதொழில்கள் தொடங்கிட ஊக்கமளித்தல்**

கழக ஆட்சியில் தொழில் வளர்ச்சியின்றி பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் வகையில் அப்பகுதியில் தொழில் துவங்க முன்வரும் தொழில் முனைவோருக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டன. அவர்கள் செய்யும் முதலீட்டில் 15 சதவிகிதம் வரை மானியமாக வழங்கப்பட்டது. ஆனால் அடுத்து வந்த அ.தி.மு.க ஆட்சியில் இச்சலுகைகள் மறுக்கப்பட்டதால் மாநிலத்தில் தொழில் வளர்ச்சியில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

மீண்டும் தமிழகத்தில் ஐந்தாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்றுள்ள கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள ஆட்சியின் நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டுள்ளவாறு "தொழில் வளத்தில் பின்தங்கிய பகுதிகளில் ஏற்படுத்தப்படும் தொழில்களுக்கு கடந்த தி.மு.க. ஆட்சியின்போது, முதலீட்டு மானிய நிதியுதவி அளிக்கப்பட்டு வந்தது. இத்திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும் என்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிவிப்புக்கு ஏற்ப தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளைக் கண்டறிய தேவையான வரைமுறைகளைப் பரிந்துரை செய்ய அலுவலர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது."

வரவு செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் குழு தன்னுடைய அறிக்கையை மூன்று மாத காலத்திற்குள் அரசுக்கு வழங்கும். இக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்று சிறுதொழில்களுக்கு முதலீட்டு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**சிறுதொழில்கள்**

சிறுதொழில்கள் தமிழகத்தின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. நாட்டின் மொத்த உற்பத்தியில்

சிறுதொழில்களின் 40 சதவிகிதம் மற்றும் ஏற்றுமதியில் 50 சதவிகிதம் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் சிறுதொழில்களின் முக்கியத்துவம் நன்கு உணர்த்தப்படுகிறது. தமிழகத்தில் 5.16 இலட்சம் சிறுதொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**ஊரகத் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் :**

1. தொழில் வணிக இயக்ககம்
2. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO)
3. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (TANSI)

**தொழில் வணிக இயக்ககத்தின் கீழ் :**

1. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்
2. இண்ட்கோசர்வ்
3. தேயிலை உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கம் (டிசர்வ்)
4. சேகோசர்வ் (ஜவ்வரிசி மற்றும் மரவள்ளிகிழங்கு மாவுப் பொருட்கள்)
5. கயிறு துறை
6. தாய்கோ வங்கி

என பல்வேறு துறைகள் இயங்கி வருகின்றன.

**பாரதப் பிரதமரின் சுயவேலைவாய்ப்புத் திட்டம்**

குறைந்த அளவு கல்வித் தகுதிப் பெற்றுள்ள ஏழை இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ள 18 முதல் 35 வயது வரையுள்ள இளைஞர்கள் சுயதொழில் தொடங்கிட இத்திட்டம் வாய்ப்பளிக்கிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், முன்னாள் இராணுவத்தினர், ஊனமுற்றோர் ஆகியோருக்கு இத்திட்டத்தின் மூலம் பயன்பெற 1.4.1999 முதல் வயது வரம்பு 45ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இத்திட்டத்தின் மூலம் 27,000 ஏழை இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

**தொழில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்**

மத்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகம் தொழில் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு நிதியுதவி அளித்து ஊக்கமளித்து வருகிறது. இதற்கான மொத்த திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 75 சதவீதம் வரை அல்லது ரூ. 50 கோடி வரை இவற்றில் எது குறைந்த தொகையோ அதனை மத்திய அரசு வழங்குகிறது. இத்திட்டத்தின் மூலம் 1. சென்னையில் வாகன உதிரி பாகக் குழுமம், 2. திருப்பூரில் பின்னலாடைக் குழுமம் 3. மதுரையில் தானியம் மற்றும் பருப்பு அரைவைக் குழுமம் 4. கோவையில் மோட்டார் பம்பு மற்றும் பவுண்டரி தொழில் குழுமம் 5. ஆம்பூரில் தோல் தொழில் குழுமம் ஆகியவற்றிற்கு மொத்த திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 370.89 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மொத்த திட்ட மதிப்பீட்டுத் தொகையில் ரூ. 198 கோடியை தனது பங்களிப்பாக வழங்கிட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**டான்சி திரும்பப் பெற்ற இரண்டு நிலங்களுக்கு முத்திரைப் பதிவு கட்டணத்திலிருந்து விலக்கு அளிப்பது பற்றிய குறிப்பு :**

அரசு நிறுவனமான டான்சிக்கு சொந்தமான இரண்டு நிலங்களை ஜெயா பப்ளிகேஷன்ஸ் மற்றும் சசி எண்டர்பிரைசஸ் என்ற இரண்டு நிறுவனங்கள் முறையே 29.5.1992 மற்றும் 30.9.1992இல் மொத்தம் ரூ. 2,56,73,182 செலுத்தி பத்திரப்பதிவு செய்யப்பட்டன. இந்த விற்பனை தொடர்பாக எழுப்பப்பட்ட வழக்கில் இந்த இரண்டு நிறுவனங்களும், மேற்சொன்ன நிலங்களை டான்சி நிறுவனத்திற்கே திருப்பி ஒப்படைக்க முன்வந்தன. இது தொடர்பாக குற்றவியல் நீதிமன்றம் 18.11.2002 நாளிட்ட தனது ஆணையில் மேற்காணும் நிலங்களை திரும்ப டான்சிக்கு ஒப்படைக்கும்பொழுது, அதற்கான விற்பனைப் பத்திரத்தில், அவை வாங்கப்பட்ட விலைக்கு மட்டுமே விற்பனைப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிட்டது. அதன்படி இந்த இரண்டு நிலங்களும் டான்சியிடமிருந்து அவை வாங்கப்பட்ட விலைக்கே 16.7.2003 அன்று விற்பனைப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டன. அதற்காக முத்திரைக் கட்டணமாக டான்சி ரூ. 35.95 இலட்சங்கள் செலுத்தியது. ஆனால் பத்திரப்பதிவுத் துறை 16.7.2003 அன்றைய வழிகாட்டி விலைப்படி (G.L.V.) முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டுமென்று கேட்டு பத்திரங்களை முடக்கி வைத்துள்ளது. இவ்வளவு பெரிய தொகையை டான்சி நிறுவனத்தின் நிதி நிலையைக் கணக்கில் கொண்டு தன்னால் கட்ட இயலாது என்று டான்சி நிறுவனம் அரசுக்குத் தெரிவித்துள்ளது. யாரோ செய்த தவறுக்கு டான்சி நிறுவனம் இழப்பிற்கு உள்ளாவது எந்த வகையிலும் நியாயமில்லை என்பதால் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களிடம் டான்சி நிறுவனத்தின் நிலையை எடுத்துக் கூறி அவரது ஆலோசனையைக் கேட்டேன். அதற்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் டான்சியும் ஒரு அரசு நிறுவனம் தான் என்பதால் மேலும் எஞ்சியுள்ள பதிவுக்கட்டணம் ரூ. 3.18 கோடியை டான்சி நிறுவனம் செலுத்தத் தேவையில்லை என்று விலக்கு அளிக்கலாம் என்று கூறியுள்ளார். எனவே, இதற்கு தகுந்த அரசாணை வெளியிடப்பட்டு முடக்கி வைக்கப்பட்டுள்ள பத்திரங்கள் டான்சி

நிறுவனத்திற்கு விரைவில் வழங்க தக்க ஆணைகள் வெளியிடப்படும் என்பதை இப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலைகள்**

நீலகிரி மாவட்டத்தில் 20,000 சிறுதேயிலை உற்பத்தியாளர்கள் உறுப்பினர்களாகக் கொண்ட 15 தேயிலை தொழில் கூட்டுறவுத் தொழிற்சாலைகளை நடத்தி வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் இத்தொழிற்சாலைகள் 475.87 இலட்சம் கிலோ பச்சைத் தேயிலையை கொள்முதல் செய்து ரூபாய் 4,289.16 இலட்சம் மதிப்புடைய 123.42 இலட்சம் கிலோ தேயிலையை உற்பத்தி செய்துள்ளன. இத்தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலைகளைப் பயன்படுத்தும், சிறுதேயிலை விவசாயிகளுக்கு உதவும் வண்ணம் டாக்டர் கலைஞர் அரசின் நிதிநிலை அறிக்கையில் தேயிலைக்கான விற்பனை வரி குறித்து கீழ்க்கண்டுள்ளவாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

''நமது மாநிலத்திலுள்ள ஆயிரக்கணக்கான சிறிய தேயிலை விவசாயிகளுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் உதவிடும் வண்ணம் டீ சேர்வ் (Tea Serve) ஏலமையத்தில் விற்கப்படும் தேயிலை மீது தற்போது விதிக்கப்படும் 4 சதவிகித பொது விற்பனை வரி மற்றும் 2 சதவிகித மத்திய விற்பனை வரி ஆகியவை 1 சதவிகிதமாகக் குறைக்கப்படும். கோயம்புத்தூர் மற்றும் குன்னூரிலுள்ள பிற ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலைக்கான பொது விற்பனை வரி தற்போதுள்ள 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும் தற்பொழுதுள்ள மத்திய விற்பனை வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகவும் குறைக்கப் படும். இந்த ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலை விற்பனையின் மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனை வரி மற்றும் மேல் வரி ஆகியவை நீக்கப்படும்.''

**தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி லிட் (தாய்கோ வங்கி)**

- தற்போது 27 கிளைகளுடன் இயங்கி வரும் தாய்கோ வங்கி, தனது அடுத்த கிளையை சென்னை, வியாசர்பாடியில் உள்ள கூட்டுறவுத் தொழிற்பேட்டை வணிக வளாகத்தில் விரைவில் செயல்பட உள்ளது.
- தமிழகத்தில் தாய்கோ வங்கிக் கிளை இல்லாத மாவட்டங்களில் தேவை மற்றும் வணிக வாய்ப்புகள் அடிப்படையில் கிளைகள் துவங்கப்படும்.

தொழில் முக்கியத்துவம் வாய்ந்த இதர நகரங்களிலும் தாய்கோ வங்கியின் புதிய கிளைகள் துவங்கப்படும்.

❖ ❖ ❖

# ஊரகப் பகுதிகளில் புதிய துணை மின்நிலையங்கள்

**தமிழ்நாடு மின்சார வாரியம்**

1. மேதகு ஆளுநர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் ஏற்கெனவே அறிவித்தப்படி, பெருகி வரும் மின் தேவையை எதிர்கொள்ளும் பொருட்டு மேட்டூர் மற்றும் வட சென்னை அனல் மின் நிலையங்களில் ஒவ்வொன்றிலும் 500 மெகவாட் திறன் கொண்ட கூடுதல் மின் உற்பத்தி அலகுகள் அமைக்கப்படும்.

2. மேலும் இயக்கத்திலிருக்கும் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 1,000 மெகாவாட் (2x500 மெகாவாட்) விரிவாக்கத் திட்டமும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. உச்ச மின் தேவையை எதிர்கொள்ளும் பொருட்டும் மற்றும் தற்போதுள்ள கையிருப்பின் பேரிலான மின் கட்டண விகித முறையின் அதிக பட்ச பலனை அனுபவிக்கும் பொருட்டும், 500 மெகாவாட் திறன் கொண்ட குந்தா நீரேற்று புனல் மின் திட்டம் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பழுப்பு நிலக்கரி ஆதாரத்தை உபயோகிக்கும் பொருட்டு ஜெயங்கொண்டத்தில் 1,000 மெகாவாட் திறனுடைய திட்டமொன்றை உருவாக்க நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளது. இதற்காக கையகப்படுத்தப்பட்டுள்ள நிலம் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும். இதை விரைவுபடுத்த சிறப்பு வருவாய் பணியாளர்களை நியமிக்க தமிழக அரசு முயற்சிகளை எடுத்து வருகிறது.

5. 'BEST' (Billing of Energy Services by TNEB) என்ற திட்டத்தின் கீழ் கணினிமயமாக்கப்பட்ட தாழ்வழுத்த மின் கட்டணப்பட்டியல் திட்டமானது 615 நகர்ப்புறப் பிரிவுகளில் ரூ. 51.23 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன. இந்த 'BEST' திட்டத்தின் இரண்டாவது கட்டமாக 1.25 கோடி மின் பயனீட்டாளர்கள் அடங்கிய அனைத்து 1,805 ஊரகப் பிரிவுகளும் எடுத்துக் கொள்ளப்பட்டு இந்த வருட இறுதிக்குள் முடிக்கப்படும்.

6. இந்திய அரசின் அணு சக்தித்துறை நீலகிரி மாவட்டத்தில் சிங்காராவில் பைக்காரா

இறுதிநிலை புனல் மின் திட்ட வளாகத்தில் ஒரு நிலத்தடி அறிவியல் ஆய்வகக் கூடத்தை அமைக்க தேர்ந்தெடுத்துள்ளது. இந்திய நியூட்ரினோ ஆய்வகம் (India based Netrino Observatory (INO) என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ஆய்வகக் கூடம் அணுவின் அடிப்படைத் துகள்கள் பிரத்தியேகமாக ஆய்வு செய்வதற்காக அமைக்கப்படுகிறது. இது இந்தியாவிலேயே முதல் ஆய்வுக் கூடமாகத் திகழும்.

**மின் இழப்பைக் குறைத்தல்**

மின் செலுத்துகை மற்றும் மின் விநியோக கட்டமைப்புகளில், இந்தியாவிலேயே தமிழகத்தில் மின் இழப்பு மிகக் குறைந்த அளவாக 18 சதவிகிதமாக இருக்கலாம் என வரையறுத்துள்ளது. தற்போது 1.60 இலட்சம் மின்மாற்றிகள் (Transformers) உள்ளன. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற வளர்ச்சியடைந்த மின் மாற்றிகளில் (Transformers) முதல் கட்டமாக 30.09.2006 க்குள் ஒரு இலட்சம் மின் மாற்றிகளுக்கு மின் அளவிகள் (Meters) பொறுத்தப்பட்டு, எந்தெந்தப் பகுதிகளில் மின் இழப்பு மற்றும் மின் திருட்டு உள்ளன என்பதைக் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவைகளில் மின் இழப்பு மற்றும் மின் திருட்டு ஏற்படும் பகுதிகளில் உரிய தீவிர உடனடி நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் மின் இழப்பினை 15 சதவிகிதமாகக் குறைத்திட இயலும். இதன் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ. 450 கோடி சேமிக்க இயலும்.

**கணினிமயமாக்கப்பட்ட மின்தடை நீக்கு மையம்**

கணினிமயமாக்கப்பட்ட மின்தடை நீக்கு மையம் சென்னையில் வெற்றிகரமாக நடைமுறையில் இருப்பதைத் தொடர்ந்து, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாநகராட்சிகளில் இதைப் போன்ற மையங்கள் ரூபாய் 73 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.மேலும், இந்த வசதியை சேலம், திருநெல்வேலி, ஈரோடு, நாகர்கோவில் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மின்சார வாரிய நிதி நிலை**

தமிழ்நாடு மின்சார வாரியம் நடப்பு நிதியாண்டில் (2006–2007) 46,796 மில்லியன் யூனிட் விற்பனை செய்வதின் மூலம் ரூ. 12,793.46 கோடி வருவாய் ஈட்டும். (அரசு மானியம் நீங்கலாக) இது தவிர வாரியத்தின் இதர வருவாய் ரூ. 465.32 கோடியாக இருக்கும். அரசு மின்வாரியத்திற்கு மானியமாக ரூ. 1,529.71 கோடியை வழங்குகிறது. இதனையும் கணக்கில் கொண்டபின் வாரியத்தின் மொத்த வருவாய் ரூ. 14,788.49 கோடியாகும். இதற்கெதிராக வாரியத்தின் வருவாய் இன செலவு ரூ. 1,6786.58 கோடியாகும். இதன்படி வாரியத்தின் வருவாய் இனப் பற்றாக்குறை நடப்பாண்டில் ரூ. 1,998.09 கோடியாகும்.

மின்வாரியம் மின் செலுத்துகை, மின்பகிர்மான கட்டமைப்பை மேம்படுத்தவும், வலிமைப்படுத்தவும் அதன் மூலம் மின் இழப்பை வெகுவாகக் குறைக்கவும், தடையற்ற தரமான மின்சக்தியை வழங்கவும், நடவடிக்கை எடுத்து வருகிறது. நடப்பு ஆண்டில் 2006–2007 வாரியத்தின் மூலதன செலவினங்கள் ரூ.1,797.65 கோடியாகும்.

ரூபாய் கோடியில்

| | | |
|---|---|---|
| 1. | விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிட | 255.89 |
| 2. | குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிட | 16.00 |
| 3. | வழிபாட்டுத் தலங்களுக்கு | 5.46 |
| 4. | கைத்தறி நெசவாளர்களுக்கு | 11.20 |
| 5. | விசைத்தறி நெசவாளர்களுக்கு | 66.84 |
| 6. | வீட்டு உபயோக இணைப்புகளுக்கு | 1,049.32 |
| 7. | புனல் மின்சக்தி உற்பத்தி இழப்பு மானியம் | 125.00 |
| | மொத்தம் | 1,529.71 |

தமிழ்நாடு மின்சார வாரியம் 2006–2007 ஆம் ஆண்டு நிதி நிலை

| | |
|---|---|
| விற்பனைக்குரிய மின்சார அளவு | 46,796 மில்லியன் யூனிட்டுகள் |
| மின் விற்பனையில் வருவாய் | ரூ. 12,793.45 கோடி |
| இதர வருவாய் | ரூ. 465.32 கோடி |
| அரசு மானியம் | ரூ. 1,529.71 கோடி |
| மொத்த வருமானம் | ரூ. 14,788.49 கோடி |
| மொத்த வருவாயின செலவு | ரூ. 16,786.58 கோடி |
| வருவாயின பற்றாக்குறை | ரூ. 1,998.09 கோடி |

**மின் விநியோக மின்மாற்றிகள் நிறுவுதல்**

கடந்த ஆண்டுகளில் சராசரியாக ஆண்டொன்டிற்கு 6,000 மின் விநியோக மின்மாற்றிகள் (Transformers) மட்டுமே நிறுவப்பட்டன. வேகமாக வளர்ந்து வரும் மின் தேவையைப் பூர்த்தி செய்ய இவை போதுமானதாக இல்லை. மேலும், குறைந்த அழுத்த குறைபாடுகள் மின் நுகர்வோர் மத்தியில் அதிருப்தியை உண்டாக்கியது. இதைத் தீர்க்கும் பொருட்டு நடப்பாண்டில் 14,000 மின் விநியோக மின்மாற்றிகள் (Transformers) நிறுவ உத்தரவிட்டுள்ளது. இதனால் குறைந்த மின் அழுத்த குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்படும்.

## துணை மின் நிலையங்கள் நிறுவுதல்

தமிழகத்தில், நடப்பாண்டிற்கு 60 துணை மின் நிலையங்கள் நிறுவ உத்தரவிடப்பட்டுள்ளது. இவற்றில் 25 மின் நிலையங்கள் ஊரகப் பகுதிகளில் நிறுவப்படும். இதன் மூலம் ஊரகப்பகுதிகளில் தடையற்ற மின்சாரம் கிடைக்க உறுதி செய்யப்படும்.

## விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்

மேதகு ஆளுநர் உரையில் அறிவித்துள்ளபடி சுயநிதி திட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் அளிக்க இந்த அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் 2.4 இலட்சம் விவசாயிகள் பயன் பெறுவர். இதற்காக தமிழக அரசு மானியமாக ரூ. 38 கோடி மின்சார வாரியத்திற்கு வழங்கும்.

மேலும், விவசாயிகளுக்கு இரவில் 8 மணி நேரமும் பகலில் 6 மணி நேரமும் ஆக மொத்தம் 14 மணி நேரம் தடையற்ற மின்சாரம் வழங்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 24 மணி நேரத்திற்குள் மின் இணைப்பு வழங்குதல்

குடியிருப்பு வீடுகளுக்கான மின் இணைப்பு 24 மணி நேரத்திற்குள் கொடுப்பதற்காக உத்தரவு வழங்கப்பட்டு 2000–2001 ஆம் ஆண்டு முடிய 3,87,768 இலட்சம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டன. மீண்டும் 24 மணி நேரத்திற்குள் மின் இணைப்பு கேட்டவர்களுக்கு மின் இணைப்பு வழங்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், தாழ்வழுத்த தொழிற்சாலை புதிய மின் இணைப்புகளுக்கு 5 குதிரை திறனுக்குள் இருக்கும் பட்சத்தில் 24 மணி நேரத்திற்குள் புதிய மின் இணைப்பு வழங்கவும், 5 குதிரை திறனுக்கு மேல் இருப்பின், 15 நாட்களுக்குள் புதிய மின் இணைப்பு வழங்கவும் இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

புதிய மின் இணைப்புகளை உடனடியாக வழங்குவதற்குரிய மின் அளவி, மின்பாதை அமைப்பதற்கான உபகரணங்கள் / தளவாடங்கள் பிரிவு அலுவலகங்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, புதிய மின் இணைப்பு வேண்டுவோர் இனி காத்திருக்க வேண்டிய அவசியம் இருக்காது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மின்சார வாரிய ஊழியர்களுக்கு 50 சதவிகித அகவிலைப்படி அடிப்படை ஊதியத்துடன் இணைப்பு மற்றும் ஓய்வூதியச் சலுகைகள்

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு வழங்கியது போல மின் வாரிய ஊழியர்களுக்கும் 50 சதவிகித அகவிலைப்படியை அடிப்படை ஊதியத்துடன் இணைத்து வழங்க வேண்டும் என்று கோரியுள்ளனர். மின்சார வாரிய ஊழியர்களின் இக்கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் தெரிவித்தேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இக்கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து மின்சார வாரிய ஊழியர்களுக்கு 01.08.2006 அதாவது இன்று முதல் ஐம்பது சதவிகித அகவிலைப்படியை அவர்களது அடிப்படை ஊதியத்துடன் சேர்த்து வழங்கிட ஒப்புதல் அளித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதேபோன்று மின்சாரவாரிய ஓய்வூதியதாரர்களுக்கும் 01.08.2006 முதல் 50 சதவிகித அகவிலைப்படி அடிப்படை ஓய்வூதியத்துடன் இணைத்து வழங்கப்படும். இதனால் மின்சார வாரியத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 10.42 கோடியும் இந்த நிதியாண்டில் மொத்தம் ரூ. 83.33 கோடியும் அதிகப்படியாக செலவாகும். இதன் மூலம் சுமார் எழுபத்து ஏழாயிரம் மின்சார வாரியத் தொழிலாளர்களும் சுமார் அறுபத்து இரண்டாயிரம் ஓய்வூதியதாரர்களும் பயன் பெறுவார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு மின்வாரிய ஓய்வுபெற்ற பணியாளர் முன்னேற்ற சங்கத்தினர், கடந்த ஆட்சியில் அ.தி.மு.க அரசால் பறிக்கப்பட்ட ஓய்வூதியச் சலுகைகளை மீண்டும் வழங்கிடுமாறு கோரியுள்ளனர். இந்தக் கோரிக்கைகளைக் கேட்டுத்தான் கடந்த ஆட்சியின்போது பல்வேறு போராட்டங்களை நடத்தி சிறையிலடைக்கப்பட்டு பல தொல்லைகளுக்கு உள்ளானார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் கூறியவாறு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இக்கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டுள்ளார். மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் இப்பேரவையில் சமர்ப்பித்துள்ள நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு அரசு ஊழியர்களின் ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதற்கு 10.04.2003க்கு முன்பு கடைபிடிக்கப்பட்ட நடைமுறையே மீண்டும் கடைபிடிக்கப்படும் வகையில் 33 ஆண்டுகள் பணி புரிந்தால் மட்டுமே முழு ஓய்வூதியம் பெற இயலும் என்பதை மாற்றி, 30 ஆண்டுகள் பணியாற்றினாலே முழு ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும், ஓய்வு பெறுவதற்கு முந்தைய 10 மாதங்களின் சராசரி அடிப்படை ஊதியத்தில் 50 சதவிகிதமே ஓய்வூதியமாக கணக்கிடப்பட வேண்டும் என்பதை மாற்றி, கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவிகிதம் அல்லது கடைசி 10 மாதங்களின் சராசரி ஊதியத்தில் 50 சதவிகிதம் ஆகியவற்றில் எது அதிகமோ, அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படும் என்றும், 31.07.2006 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தக்க ஆணைகள் வெளியிடப்படும் என தெரிவித்துள்ளார். மேற்படி ஆணைகள் வெளியிடப்பட்டவுடன் மின்வாரிய ஓய்வூதியதாரர்களின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு மின்வாரியம் தக்க ஆணைகள் பிறப்பிக்கும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

கால்நடை பராமரிப்பு – தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் – கால்நடை மருத்துவ பட்டப் படிப்பு முடித்து உள்ளுறைப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை ரூ.1,150லிருந்து ரூ.1,650 ஆக உயர்த்தி வழங்கல்—ஆணை வெளியிடப்படுகிறது.

---

அரசாணை (நிலை) எண் : 166 — நாள் : 7.9.2006

படிக்கப்பட்டது :

1. அரசு ஆணை (நிலை) எண். 188 கா.ப.மீ. (கா.ப.6) துறை நாள். 28.10.96.
2. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக பதிவாளரின் கடித எண். 6155/மதிப்பீட்டுக் குழு /கல்வி –1/2003. நாள். 22.4.2003.

.........

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கால்நடை பட்டப்படிப்பு முடித்து உள்ளுறைப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உள்ளுறைப் பயிற்சி உதவி தொகையாக (Intership Allowance) மாதம் ஒன்றுக்கு அரசு ரூ.250லிருந்து ரூ.750 ஆக உயர்த்தி வழங்கி வருகிறது. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், புதுதில்லி தனது பங்காக வழங்கும் ரூ.400ஐயும் சேர்த்து உள்ளுறைப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,150 (ரூ.750 + ரூ.400= ரூ.1,150) வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி மாணவர்கள் பட்டப்படிப்பு முடித்து தொடர்ந்து 180 நாட்கள் (6 மாதங்கள்) உள்ளுறைப் பயிற்சிக்கு உட்படுத்தப்படுகிறார்கள். மேற்கண்ட பயிற்சிக்கு செல்லும் போது பயணச்செலவிற்கும், இருப்பிடச்செலவிற்கும் உணவிற்கும், தாங்களாகவே செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தற்போதுள்ள விலைவாசி உயர்வினாலும் அவர்களுக்கு அளிக்கப்படும் இவ்வுதவித்தொகை மேற்படி செலவுகளை ஈடுகட்ட போதுமானதாக இல்லை எனத் தெரிவித்து, தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.1,150 உதவித்தொகையினை ரூ.2,000 ஆக உயர்த்தி வழங்கிடுமாறு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பதிவாளர் அரசை வேண்டியுள்ளார்.

2. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பதிவாளரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்த, பின்பு தற்போது வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை நிர்ணயம் செய்யப்பட்டு 8 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும், தற்போதுள்ள போக்குவரத்து, உணவு, தங்குமிடம் ஆகிய செலவுகளைக் கருத்தில் கொண்டு உள்ளுறைப் பயிற்சி பெறும் மாணவர்களின் உதவித் தொகையை மாதம் ஒன்றிற்கு ரூ.1,150லிருந்து ரூ.500 உயர்த்தி ரூ.1,650 (ரூபாய் ஆயிரத்து அறநூற்று ஐம்பது மட்டும்) என (தமிழக அரசு பங்கு ரூ.1,250 இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், புதுதில்லியின் பங்கு ரூ. 400) நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இச் செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படலாம்:–

"2415 வேளாண்மை ஆராய்ச்சியும் கல்வியும்–03 கால்நடை வளர்ப்பு –277 கல்வி–1 திட்டத்தில் சேராதது –AA தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்திற்கு மானியங்கள் – 09 உதவி மானியங்கள் –03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்."

(த.தொ.கு. 2415 –03–277–AA–0936)

4. இவ்வரசாணை நடப்பு கல்வியாண்டு (2006-2007) முதல் (Current academic) நடைமுறைக்கு வருகிறது.

5. இச் செலவினம் ஒரு புதுப்பணி குறித்த செலவினமாகும். காலப்போக்கில் இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்பார்த்து இச்செலவினத்தை எதிர்பாரா செலவு நிதியில் இருந்து முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொ 1)த்துறையில் பிறப்பிக்கப்படும். எதிர்பாரா செலவு நிதியில் இருந்து தேவையான முன்பணம் பெறுவதற்கு நிதி (வ.செ.பொது1) த்துறைக்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வாணையின் நகலுடன் அனுப்பிவைக்குமாறு ஆணையாளர் மற்றும் இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-6. அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். திருத்த துணை மதிப்பீடு 2006-2007க்கான கருத்துருவை அனுப்பும்போது தவறாமல் இந்த தொகையையும் சேர்க்குமாறு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக பதிவாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 2-ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை ஆணையாளர் மற்றும் இயக்குநர் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை -6. அவர்கள் பெற்று, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பதிவாளருக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 47401/கா. ப.மி/2006 நாள்.31.8.2006 மற்றும் கூடுதல் நிதி பேரேடு எண். 467 -ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

**லீனா நாயர்**
அரசு செயலாளர்



கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 135ஆவது பிறந்தநாளையொட்டி, சென்னையில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி அவர்கள், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் மற்றும் மாண்புமிகு மத்திய சட்டம் மற்றும் நிதித்துறை இணை அமைச்சர் திரு.கே.வேங்கடபதி அவர்கள் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

*சிறுகதை*



# பலாப் பழம்

**- வண்ணநிலவன்**

**ப**க்கத்து வீட்டுக்கு பலாப்பழம் வந்திருக்கிறது.

செல்லப்பாப்பா புரண்டு படுத்தாள். கனமான அடி வயிறுதான் சட்டென்று சிமெண்டுத் தரையின் குளுமையை முதலில் உணர்ந்தது. உடம்பெல்லாம் ஒரு விதமான கூச்சம் பரவிற்று. ஸ்டவ் அந்த அறையின் ஒரு மூலையில் சத்தத்துடன் எரிந்து கொண்டிருந்தது. பல திரிகள் கட்டையாகிவிட்டன. மாற்றவேண்டும். சிலது எரியவே இல்லை. தீ சரியாக எரியாமல் அடுப்பில் எதை வைத்தாலும் இறக்குவதற்கு நேரமாகிவிடுகிறது. ஒரு சிறு விஷயம்; திரிகளை மாற்றுவது என்பது. ஆனாலும் திரிகளை மாற்றவில்லை அவள்.

சிமெண்டுத் தரையில் வெறுமனே ஒன்றையும் விரிக்காமல் படுத்துக் கொள்கிறது அவளுக்குச் சின்ன வயசிலேயே பிரியமான காரியம். எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் அந்தக் குளிர்ச்சி எல்லாவற்றையும் மாற்றி மனசை லேசாக்கிவிடும். ஆனால் இப்போது இந்தச் சின்னச் சின்ன விஷயங்கள் எல்லாம்கூட வெகுதூரத்தில் சென்று மறைந்து கொண்டுவிட்டன.

அண்ணாந்து உயரே சுவரில் தொங்கிய மர ஸ்டாண்டை வெறிக்கப் பார்த்தாள். அவளுடைய வீட்டிலிருந்து கொண்டு வந்திருந்த ஹார்லிக்ஸ் பாட்டில்களும், கிளாஸ்கோ டின்களும் புகையடை பிடித்துப் போயிருந்தன, பல பாட்டில்களில் சாமான்களே இல்லை. இருந்த ஒன்றிரண்டு பாட்டில்களிலும் ரொம்பவும் கீழே ஏதேதோ சாமான்கள் கிடந்தன. மனசுக்கு முட்டிக்கொண்டு வந்தது. பார்வையைத் திருப்பி புரண்டு படுத்தாள்.

அவளையொட்டி சீனிவாசன் படுத்துக் கிடந்தான். அவனுடைய பின்புற பனியன் வாரைப் பிடித்துச் சுருட்டிச் சுருட்டி விளையாடினாள். கழுத்துப் பகுதியிலும், ஓரங்களிலும் அழுக்கு சேர்ந்து போயிருந்தது. அவளுடைய கைகளில் பிசுபிசுத்தது. அடிவயிறு தரையில் உரச, இன்னுங் கொஞ்சம் அவனுடைய முதுகோடு தன் வயிறும் மார்பும் ஒட்ட நகர்ந்து படுத்துக் கொண்டாள். அவனுடைய முரட்டுத் தலைமயிருக்குள் விரல்களை விட்டு அளைந்தாள். கொஞ்ச நேரத்தில் அது பிடிக்காமல் அவனுடைய பிடரியின் அடியில் முளைத்திருந்த சின்ன சின்ன முடிகளைத் தொட்டு விளையாடினாள். அவனுடைய அடிக்கழுத்தில் கையை நுழைத்துக் கீச்சங்காட்ட வேண்டுமென்று ஆசையாக இருந்தது. அப்படியே அவனுடைய இடுப்பின் மீது தலையை வைத்துப்

படுத்துக் கொண்டாள். சீனிவாசன் விழித்துக் கொண்டான்.

"இன்னம இந்தப் பக்கம் வாங்க, சொல்லுதேன். ஏய் சீதா அங்க என்னடி ஆச்சு? நான் வந்துட்டேன்னு நீயும் அடுப்ப அப்படியே போட்டுட்டு, வந்திட்டியா?"

"இல்லம்மா... எனக்கு இன்னொரு சொளை வேணும்மா."

"அவளுக்கு மட்டும் கூட ஒண்ணாக்கும்?... நான் அப்பாட்டப் போய் சொல்லப் போறேன்...?"

"ஏய் தடிக் கழுத... கழுதைகளா... ஒண்ணையுமே கண்ணால பாத்திராத மாதிரிதான். லெச்ச கெடுக்கியளே. ஒங்களுக்குப் போயி வாங்கிக் கொண்ணாந்து போடுதாங்களே, அவங்களச் சொல்லணும்."



"இன்னும் ஒண்ணே ஒண்ணும்மா."

"பாடாப் படுத்துதீங்களே. லோசுக் குட்டியைப் பாருங்க. எம்புட்டுப் புள்ள. காய்ச்சலும்மா ஒனக்கு, பண்டம் திங்கக் கூடாதுன்னு சொன்னேன். பாத்துக்கிட்டு பேசாம இருக்கா பாருங்க... நீங்களா? பேருதான் பெரிய பிள்ளைகன்னு பேரு. பிசாசு மாதிரி..."



அந்த அழகு கூடிற்று. இப்போதெல்லாம் செல்லப் பாப்பாவுடைய சிரிப்பில் ஒரு சோர்வு இருக்கிறது. அந்தச் சிரிப்பு அவளுடைய முகத்தில் உண்டு பண்ணின அபூர்வமான சோபையை அவன் ரசித்தான். இன்னொரு தடவை அப்படிச் சிரிக்க மாட்டாளா என்று இருந்தது.

"ஏய்... ஏய்... மாடு, எத்தனை தடவை சொல்லட்டும், கொட்டய எல்லாம் ஒரு எடத்துல துப்புங்கன்னு. ஏம் பிராணன ஏன் இப்பிடி வாங்கணும்?"

"யம்மா... நாம் பாரும்மா எல்லாக் கொட்டயவும் சேத்து வச்சிருக்கேன். இந்தப் புள்ள சீதாக் கொரங்குதான் நெடுகத் துப்பிப் போட்டுருக்கா."

"ஆமா... நீரு ஒம்ம துருத்தியை ஊதிக்கிட்டு கெடயும்."

"ஏட்டி ஒனக்கு என்ன அம்புட்டுக் கொளுப்பா?"

அந்தக் குழந்தைகளுக்குள்ளே ஏதாவது தகராறு வந்திருக்க வேண்டும். இரண்டு குடித்தனங்களுக்கு தடுப்பாக இருந்த பலகைச் சுவரில் யாரோ வந்து மோதி விழுந்ததும், தொடர்ந்து அழுகைச் சத்தமும் கேட்டது.

செல்லப்பாப்பா அவனை அணைத்துப் படுத்திருந்தபடியே தலையை மட்டும் நீட்டி—ஒன்றும் தெரியப்போவதில்லை, என்றாலும்—பலகைத் தடுப்பைப் பார்த்தாள். பலகையின் மீது மோதின அதிர்ச்சியில் ஆணியில் மாட்டியிருந்த சீனிவாசனுடைய சட்டை மட்டும் சுருட்டி எறிந்தது போல் தரையில் விழுந்து கிடந்தது.

திடீர் திடீரென்று அடுத்த பக்கத்திலிருந்து பலாப்பழ வாடை வீசியது.

சீனிவாசன் திரும்பி, அவள் பிரியப்பட்டபடியே அவளை தன் நெஞ்சோடு நெஞ்சாய் வாரியெடுத்துப் போட்டுக் கொண்டான். அவளுடைய முக நெருக்கத்துக்குள்ளிருந்து பல்பொடி வாடை அடித்தது. அவளுடைய கனத்த வயிறு அவனுடைய வயிற்றின் மீது விழுந்து அழுத்திய போது கேட்டான்:

"செல்லப்பாப்பா, ஒனக்கு இப்படி படுத்தா வயிறு அமுங்கலியா? கஷ்டமா இருக்கா?"

செல்லப்பாப்பா பதில் சொல்லாமல் லேசாகச் சிரித்தாள். இரண்டு உதடுகளிலும் வெள்ளை வெள்ளையாய் மேல்தோல் உரித்து பார்க்க அழகாக இருந்தது. மெதுவாகச் சிரிக்கிறபோது பின்னும்

ஏதோவொரு பாத்திரம் சரிந்து உருண்டு விட்டது. ஒரே கூச்சலும் அழுகையும். எல்லாவற்றுக்கும் மேலே பழவாடை மட்டும் தனியே வந்து கொண்டிருந்தது.

எல்லாவற்றையும் செல்லப்பாப்பாவும் சீனிவாசனும் ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்தபடிக்கே கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

செல்லப்பாப்பா கேட்டாள், "ஒங்களுக்கு ஏன் இன்னுஞ் சம்பளம் போடல?"

சட்டென்று சீனிவாசனுடைய முகம் மாறிவிட்டது. அவனுடைய முகத்தைப் பார்த்துவிட்டு, தான் அப்படிக் கேட்டிருக்க வேண்டாமோ என்று யோசனையுடன் பனியன் மேலே ஏறித் திரைந்து போய் தெரிந்த, முடிகள் அடர்ந்த அவனுடைய தொப்புள் குழியையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுடைய

வெதுவெதுப்பான உடம்பின் சூடு அவளுக்கு இதமாக இருந்தது.

"நாங்க எல்லோரும் சம்பளம் வாங்குறது இல்லன்னு முடிவு பண்ணியிருக்கோம். பேச்சு வார்த்தை முடிஞ்சாத்தான் முடிவு என்னன்னு தெரியும்."

அவள் ஒன்றும் பேசாமலிருந்தாள் இரண்டு பேருமே மௌனமாக இருந்தது அவர்களுக்கே பயமாக இருந்தது. இரண்டு பேருமே எப்படியாவது ஏதாவது பேசிவிட வேண்டுமென்று ரொம்பவும் ஆசைப்பட்டார்கள்.

இப்போது பழவாடை ரொம்பவும் காரமாக ஒரு நெடி பரவுவது போல் சின்ன அறை முழுவதும் வீசியது.



அவன் கேட்டான்.

"இது என்னமோ வாடை அடிக்கே; பணம்பழ வாடை மாதிரி..."

"இல்ல, அது பலாப்பழ வாடை" என்று சட்டென்று சொன்னாள் செல்லப்பாப்பா. அவளுடைய வேகம் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவளையே பார்த்தான்.

இன்னமும் பலகைக்கு அந்தப் பக்கத்திலிருந்து அழுகையும் கூச்சலும் ஓயவில்லை. கொஞ்ச நேரத்தில் அந்தப் பழ வாடைகூட போய்விட்டது. ஆனால் அழுகை மட்டும் நிற்கவில்லை. பழம் நறுக்கித் தந்த அம்மாவுக்காக அடுப்பைக் கவனித்துக் கொண்டிருந்த சீதாதான் அழுது கொண்டிருந்தது. அந்த அம்மாள் அந்தப் பையனை கண்டபடி திட்டிக் கொண்டிருந்தாள். வேகமாக வார்த்தைகள் வரும்போது குரல் முறிந்து போய், அழுது விடுவதுபோல தொண்டையை அடைத்துக்கொண்டு வந்தது. அந்தக் குழந்தைகள் படுத்துகிற பாட்டைப் பொறுக்க முடியாத தவிப்பு அந்தக் குரல் நெடுகிலும் கேட்டது. சத்தமும், அழுகையும் கூடக் கூட பழ வாடையையே காணவில்லை.

"செல்லப்பாப்பா ரொம்பக் கஷ்டமா இருக்காம்மா? இந்தக் காப்பித் தண்ணிய மட்டும் போட்டு எறக்கி வையி. கௌப்புல போயி இட்லி ஏதாவது வாங்கிட்டு வாரேன். நீ ஒண்ணுஞ் செய்ய வேண்டாம்." ரொம்பவும் பிரியமாகப் பேசினான் அவன்.

"துட்டு ஏது?"

"அதெல்லாம் இருக்கு. நேத்து அரிகிருஷ்ணங்கிட்டே ஒரு ரூபா கேட்டேன்."

"எந்த அரிகிருஷ்ணன்?"

"அதுதாம்மா. நமக்குக் கல்யாணம் ஆன புதுசுல ஒரு நா சாயந்திரம் வந்துஇந்த நடை வாசல் படியிலேயே இருந்து காப்பியெல்லாம் குடிச்சிட்டுப் பேசிட்டுப் போல?... அவந்தான்."

"ம் ஹூம்..."

"சம்பளம் போட்டுருவாங்க, ஒன்னய டாக்டரம்மா கிட்டக் கூட்டிக்கிட்டு போகலாம்னு பாக்கேன், முடிய மாட்டங்கே... இன்னைக்குச் சாயந்திரம் மேகநாதன் இருபது ரூபா தாரேன்னு சொல்லியிருக்கான்."

"ஒங்க கூட படிச்சாரு, பாத்திரக் கட வைச்சிருக்காருன்னு சொல்லுவீங்களே அந்த ஆளா?"

"ஆமா. அவந்தான். எம்மேலே கொஞ்சம் உருத்து உள்ளவன். சாயந்தரம் போகணும். நேத்து பஜார்ல வச்சுப் பாத்தேன். ஒன்னய ரொம்ப விசாரித்தான் ஒன்னய டாக்டரம்மாகிட்டக் கூட்டுட்டுப் போகணும். கொஞ்சம் பணம் இருந்தாக்குடுன்னு கேட்டேன். கண்டிஷனா சாயந்திரம் வான்னு சொல்லியிருக்கான்."

அவனைப் பார்த்துக் கொண்டே மேகநாதனை நினைத்துப் பார்த்தாள். அவனை அவள்

பார்த்ததில்லை. அவன் எப்படியிருப்பான் என்று மனசிற்குள் பார்த்துக் கொண்டாள். அவனைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. அவனைப் பார்த்துவிட்டு வருகிற போதெல்லாம், அவளை ரொம்பவும் விசாரித்ததாக இவன் சொல்லியிருக்கிறான். அவனைப் பற்றி இவன் பிரஸ்தாபிக்கிற போதெல்லாம் அவனைப் பார்க்க ஆசைப்பட்டிருக்கிறாள். அவனைப் பற்றியொரு சித்திரம்கூட செல்லப்பாப்பா மனசிலிருக்கிறது.

செல்லப்பாப்பா காபி தூளைப் போட்டுவிட்டு ஸ்டவ்வை அணைத்தாள். அதை நகர்த்தி வைத்துக் கொண்டே அவனிடம் சொன்னாள், "அந்த "ஸ்டவ்வு திரி எல்லாம் சிறுசாப்போச்சுப்பா. மாத்தணும்."

"ஆகட்டும், சாயந்திரம் வாங்கிட்டு வாரேன். சாயந்தரம் ரெடியா இரு. வந்ததும் டாக்டர் வீட்டுக்குப் போவோம்."



"இப்ப எதுக்குப்பா? சம்பளம் வாங்குன பொறவு போய்க்கிடலாம்... வீட்டுக்கார ஆச்சிக்கு மொதல்ல வாடகையைக் குடுத்திடுவோம்."

அவனுக்கு கோபம் வந்து விட்டது. பதிலே பேசாமல் உம்மென்று மேலே அண்ணாந்து பார்த்துக் கொண்டு படுத்திருந்தான்.

"என்ன கோவிச்சிட்டீங்க ளாக்கும்? என்னப்பா சொல்லிட்டேன்?"

"என்னத்தைச் சொன்ன? ஈர மண்ணுந் தெருப் புழுதியும்..."

அவள் – செல்லப்பாப்பா, ஒரு காலை மடித்து குனிந்தபடியே உட்கார்ந்திருந்தாள். காபியிலிருந்து, கொதிக்கிற மணங்கலந்த ஆவி காற்றில் அலைந்து போய்க் கொண்டிருந்தது.

திடீரென்று அந்தப் பழவாடை முன்பை விட ஆழமாக வீசியது. ஒருவேளை அந்த அம்மாள் தன் பிள்ளைகளிடம் அந்தப்

பழத்தைக் கொடுத்து அனுப்பி வைப்பாளோ என்று ஆசைப்பட்டாள்.

அவள் உட்கார்ந்திருந்த நிலை அவனுக்கு ரொம்பவும் இரக்கத்தை உண்டு பண்ணிற்று. சட்டென்று எழுந்துபோய் அவளுக்கு எதிரே உட்கார்ந்து கொண்டு அவள் நாடியைப் பிடித்து முகத்தைத் தூக்கினான். கலங்கிப் போயிருந்த கண்களுடன் அவனை ஏக்கத்துடன் பார்த்தாள்.

“பின்ன என்னம்மா? நான் ஒண்ணு சொன்னா நீ ஒண்ணு சொல்லுத. மனுஷனுக்கு கோவம் வருமா வராதா சொல்லு பாப்பம்?”

“நானுந்தான் என்னப் பெரிசா தப்பாச் சொல்லிட்டேன்?”

யாரோ கதவைத் தட்டினார்கள். தொடர்ந்து “யக்கா... யக்கா...” என்கிற குரல் கேட்டது.

செல்லப்பாப்பா பின்னால் இரண்டு கைகளையும் ஊன்றி மெதுவாக எழுந்திருக்க முயன்றாள். அவன் அவளுடைய தோளைத் தொட்டு உட்காரப் பண்ணினான். அவனே எழுந்து போனான். கேட்ட குரல் சீதாவுடைய குரலாக இருந்தது. ‘ஞாபகமாக அந்த அக்கா குடுத்துவிட்டிருக்காங்களே’ என்று மனசிற்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டாள்.

அவன் கதவைத் திறந்தான். சீதாதான் நின்று கொண்டிருந்தது. அவனைப் பார்த்து பேசாமல், அவன் நின்றிருந்த இடைவெளியினூடே இவளைப் பார்த்து “யக்கா, இன்னைக்குச் சாயந்தரம் புட்டாரத்தி அம்மன் கோயிலுக்குப் போயிட்டு வரலாமான்னு அம்மா கேட்டுட்டு வரச் சொன்னா?” என்றாள்.

செல்லப்பாப்பா ஒன்றும் சொல்லாமல் அவனை அண்ணாந்து பார்த்தாள். பார்த்து விட்டுச் சொன்னாள். “இன்னைக்கி எங்கம்மா வர? அக்கா வரலையாம்னு சொல்லு.”

சீதா போகும்போது அவளுடைய கடை வாயில் மேல் உதட்டோரமாக பலாப்பழ நார் ஒட்டிக் கொண்டிருந்ததை செல்லப்பாப்பா பார்த்தாள்.

சாயந்திரம் சீனிவாசன் சொன்னபடி வரவில்லை. ரொம்ப நேரம் கழித்துத்தான் வந்தான். கதவைத் திறந்ததும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டே உள்ளே வந்து உட்கார்ந்தான். சுவரில் மாட்டியிருந்த பெட்ரூம் லைட்டைத் தூண்டி எடுத்துக் கொண்டு வந்து அவனுக்கு முன்னால் வைத்துவிட்டு, அவனுக்கென்று எடுத்து மூடி வைத்திருந்த தட்டைத் திறந்து அவனிடம் தந்தாள். அப்படியே சென்று திரும்பவும் படுத்துக் கொண்டாள்.

திடீரென்று அந்தப் பழவாடை வீசிற்று. ஆச்சர்யத்துடன் எழுந்து படுக்கையில் உட்கார்ந்து கொண்டாள்.

சீனிவாசன் குனிந்து மெதுவாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.



– **“நவீன தமிழ்ச் சிறுகதைகள்”** என்ற நூலிலிருந்து...
(சாகித்ய அக்காதெமி வெளியீடு)

ஓடாநிலையில்

# தீரன் சின்னமலை
## நினைவு ஆடிப்பெருக்கு விழா

ஈரோடு மாவட்டம், அரச்சலூர் – ஓடாநிலையில் 3.8.2006 அன்று அரசின் சார்பில் தீரன் சின்னமலை நினைவு ஆடிப்பெருக்கு விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு மத்திய சமூகநலம் மற்றும் சமூகநீதித்துறை இணை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள், தீரன் சின்னமலை உருவப்படத்தை திறந்து வைத்து அவரது வாழ்க்கை வரலாறு மலரை வெளியிட்டார். பின்னர் அவர் பேசும்போது தெரிவித்ததாவது:

"சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் நினைவு நாள் ஒவ்வொரு ஆண்டும் ஆடிப்பெருக்கு அன்று அரசு விழாவாக நடைபெற்று வருகிறது. இவ்வாண்டும் தீரன் சின்னமலையின் 201–ஆவது நினைவு நாள் அரச்சலூர் – ஓடாநிலையில் ஆடிப்பெருக்கு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. கொங்கு சமுதாயத்திற்கு தமிழக முதலமைச்சர் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். இதன்மூலம் கொங்கு சமுதாயம் உயர்த்தப்பட்டு உள்ளது. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இச்சமுதாயம் சேர்க்கப்பட்டதால் பலர் வேலைவாய்ப்பும் உயர்கல்வியும் பெற முடிந்துள்ளது. தீரன் சின்னமலை வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாக எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். தற்போது பொதுமக்களில் பெரும்பாலானோர் தொலைக்காட்சித் தொடர்களையே அதிகம் கண்டுகளிக்கின்றனர். மேலும் திரைப்படமாக வெளியிட்டால் தமிழ்நாட்டில் உள்ளவர்கள் மட்டுமே காண முடியும். தொலைக்காட்சித் தொடராக வெளியிட்டால் தமிழ்நாடு மட்டுமின்றி உலகம் முழுவதிலும் உள்ளவர்கள் காண இயலும். இதனால் தீரன் சின்னமலையின் வாழ்க்கை வரலாறு உலகம் முழுவதும் பரவ வாய்ப்புள்ளது.

மேலும், மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு பயிற்சி கொடுக்க பயிற்சிக் கூடம் கட்ட வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சிக் கூடத்தை மத்திய, மாநில அரசுகள் அமைக்க முடியாது. தனியார் தொண்டு நிறுவனங்கள் பயிற்சிக் கூடம் அமைத்து மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கலாம். இதற்கான செலவுகளை அரசு ஏற்றுக் கொள்ளும் என்றார்.

விழாவில், தீரன் சின்னமலை வாழ்க்கை வரலாற்றுக் கல்வெட்டினைத் திறந்து வைத்து அவருடைய வாரிசுதாரர்கள் திரு. வி.டி. சுப்பிரமணியம், திரு. ஆர். ரத்தினம், திரு. கே. நடராஜ், திரு. ஆர். நடராஜ், திரு.ஜே. சின்னமலை கிருஷ்ணகுமார், திரு. த. சின்ன சாமி, திரு.ஆர்.சிவக்குமார், திரு.சி.கோபாலகிருஷ்ணன், திரு. ஆர். அர்ச்சுணன், திரு. பி.பார்த்திபன் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்து மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. என்கேகே.பி. ராஜா அவர்கள் தெரிவித்ததாவது,

"இன்றைய இளைஞர்களிடம் சமுதாய உணர்வு அதிகமாக இருக்கிறது. இந்த உணர்வு அவர்களுடைய சமுதாயத்தை உயர்த்துவதற்கு பயன்படுத்த வேண்டும். நம்மால் முடிந்த பணியை சமுதாயத்திற்கும், அதன் வளர்ச்சிக்கும் செய்ய வேண்டும். இளைஞர்களிடம் தான் வருங்கால சமுதாயமே உள்ளது. எனவே அவர்கள் சமுதாய வளர்ச்சிக்கு தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்" என கூறினார்.

விழாவில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியைத் திறந்து வைத்து ரூ.89 இலட்சம் மதிப்பில் 200 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் தீரன் சின்னமலை நினைவு ஆடிப்பெருக்கு விழா தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கி மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள் பேசும்போது, "விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் பெயருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் தமிழக



முதலமைச்சர் அவர்கள் தீரன் சின்னமலை தபால்தலை வெளியிட நடவடிக்கை எடுத்து தபால்தலை வெளியிடப்பட்டுள்ளது. தொடர்ந்து தீரன் சின்னமலையின் பெயரை உலகுக்கு எடுத்து சொல்ல நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், காவிரி ஆற்றில் பாசூர் சோழ சிராமணி இடையே கட்டப்பட்டு வரும் தடுப்பணையின் மேல் பகுதி வழியாக வாகனங்கள் சென்று வரும் வகையில் பாதை அமைக்க ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் நாமக்கல், சேலம் ஆகிய ஊர்களிலிருந்து ஈரோடு மாவட்டத்திற்கு வருவதற்கு வசதியாக இந்த பாதை அமைகிறது" என தெரிவித்தார்.

விழாவிற்கு தலைமை வகித்த மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்ததாவது:

"சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் சிறப்பியல்புகளைப் பரப்புவதற்கு தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்தப் புகழைப் பரப்புவதற்கு இளைஞர்களும் முன்வர வேண்டும். நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்கள், தியாகிகளை வாழ்க்கையின் முன்மாதிரியாக வைத்து வாழ வேண்டும். அவர்கள் செய்த சமுதாயப் பணிகளை நாமும் நம்முடைய சமுதாயத்திற்கு ஆற்ற முன்வர வேண்டும் "என கூறினார்.

விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.கே. கார்வேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஆர். எம்.பழனிசாமி, திரு.கே.வி.ராமநாதன், முன்னாள் அமைச்சர் திரு. துரைராமசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.ராஜ்குமார் மன்றாடியார், அரச்சலூர் பேரூராட்சித் தலைவர் திரு. பாலசுப்பிரமணியம், கொங்கு அமைப்புகளைச் சேர்ந்த திரு. தேவராஜ், திரு.மு. பாலசுப்பிரமணியம், திரு.செல்லமுத்து உட்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக ஈரோடு கோட்ட வருவாய் அலுவலர் திரு ச. குப்புசாமி அனைவரையும் வரவேற்றார். முடிவில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. என். பாலையா நன்றி கூறினார்.

விழாவில், செய்தி – மக்கள்தொடர்புத் துறை, கூட்டுறவுத்துறை, வேளாண்மைத்துறை, கைத்தறித்துறை மற்றும் பல்வேறு துறைகளின் சார்பில் கண்காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. மகளிர் சுயஉதவிக் குழுவினர் கண்காட்சியில் அரங்குகள் அமைத்திருந்தனர். இதில் 3 குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு கொங்கு பேரவை மூலம் பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் கொங்கு கலை அறிவியல் கல்லூரி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள், இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஈரோடு மாவட்ட கலை மன்றம் மற்றும் கோபி மண்டல கலை பண்பாட்டுத்துறை சார்பில் சின்னமனூர் சகோதரிகளின் தீரன் சின்னமலை வரலாற்று பரதநாட்டியம் நடைபெற்றது.

விழா நடைபெற்ற 3.8.2006 அன்று ஓடாநிலை கிராமம் விழாக்கோலம் பூண்டிருந்தது. கொங்கு பேரவையினைச் சார்ந்த பெரியோர்கள் தீரன் சின்னமலை உருவச்சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். தீரன் சின்னமலை மணிமண்டபம் மற்றும் சமுதாயக் கூடம் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பல்லாயிரக்கணக்கான பொதுமக்களுக்கு அன்றைய தினம் அன்னதானம் வழங்கப்பட்டது. அரசு சார்பில் மிகச் சிறப்பாக நடத்தப்பட்ட இவ்விழாவினை அவரது வாரிசுதாரர்கள் மற்றும் கொங்கு பேரவையினைச் சார்ந்த பிரதிநிதிகள் அரசை பெரிதும் பாராட்டினர்.

**– செய்தி மக்கள்தொடர்பு அலுவலர்**
ஈரோடு

# படமும் செய்தியும்

சென்னையில், 4.9.2006 அன்று மேதகு குடியரசுத் தலைவர் டாக்டர் **ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்** அவர்கள், சென்னைப் பல்கலைக்கழகத்தின் 150ஆவது ஆண்டு விழாவையொட்டி, நினைவுத் தபால் தலையினை வெளியிட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். இந்நிகழ்வில், மேதகு தமிழக ஆளுநர் திரு. **சுர்ஜித் சிங் பர்னாலா** அவர்கள், மாண்புமிகு மத்திய மற்றும் மாநில அமைச்சர் பெருமக்கள் பங்கேற்றனர்.






சென்னையில் 8.9.2006 அன்று, "கனெக்ட் 2006" என்று, தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கையும், கோவையில் கட்டப்படவுள்ள தகவல் தொழில் நுட்ப மாதிரி வடிவங்களையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாண்புமிகு மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன் மற்றும் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி, இ,ஆ.ப உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை மீண்டும் அமைத்திட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களுக்கு, இ. கம்யூ. சார்பில் 12.9.2006 அன்று திருவாரூரில் பாராட்டு விழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு மத்திய, மாநில அமைச்சர்கள் மற்றும் இ. கம்யூ. கட்சியின் மாநிலச் செயலாளர் திரு.தா. பாண்டியன், மூத்த தலைவர் திரு. இரா. நல்லக்கண்ணு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்




ஆழ்வார்கள் ஆய்வு மையத்தின் சார்பில் 4.9.2006 அன்று நடைபெற்ற விழாவில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர். **ஆ.ப.ஜெ. அப்துல்கலாம்** அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களுக்கு தொல்காப்பியர் விருதினை வழங்கினார்கள். உடன் ஆழ்வார்கள் ஆய்வு மையத் தலைவர் திரு. இராம வீரப்பன், செயலாளர் திரு. சா. ஜெகத்ரட்சகன், மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் திரு. கா.பொன்முடி, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி ஆகியோர் உள்ளனர்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள், 17.9.2006 அன்று தந்தை பெரியார் அவர்களின் 128ஆவது பிறந்தநாளையொட்டி, சென்னை அண்ணா சாலையிலுள்ள பெரியாரின் திருவுருவச் சிலைக்கு, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா.வீராசாமி உடன் உள்ளார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள், 15.9.2006 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் 98ஆவது பிறந்தநாளையொட்டி, சென்னை வள்ளுவர் கோட்டத்திலுள்ள, அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். மாண்புமிகு மத்திய மற்றும் மாநில அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் முன்னிலையில், தமிழக அரசிற்கும், ஹாங்காங், குரோத்லிங்க் நிறுவனத்திற்கும் இடையே **19.9.2006** அன்று, சென்னை தலைமைச் செயலகத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. குரோத்லிங்க் நிறுவன இயக்குநர் திரு.பீட்டர் டி. நிக்கல்சன், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப மற்றும் தொழில்துறைச் செயலாளர் திரு.சக்தி காந்ததாஸ், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.






மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில், 9.9.2006 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில், செய்தி – மக்கள்தொடர்பு அலுவலர்கள் ஆய்வுக்கூட்டம் – பணிப்பட்டறை நடைபெற்றது. தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலர் திரு.வெ. இறையன்பு, இ.ஆ.ப., செய்தி – மக்கள்தொடர்புத் துறை இயக்குநர் திரு. சி. கோசலராமன், இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.




தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், **19.9.2006** அன்று சென்னையில், மாநில செய்தியாளர்கள் கூட்டம் நடைபெற்றது. அரசின் அனைத்துத் துறை செயலாளர்களும் பங்கேற்று செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார்கள்.

# சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி

**மு**ன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்த நாளையொட்டி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் 20.8.2006 அன்று, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனமும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையும் இணைந்து "ராஜீவ் காந்தியின் புதுப்பிக்கவல்ல எரிசக்தி தினமாக" கொண்டாடியது.

அனைத்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர் பங்கேற்ற பேரணியை கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் நீரஜ் மித்தல் இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். கார்மல் கார்டன் பள்ளியில் புதுப்பிக்கவல்ல எரிசக்தி தொடர்பான கண்காட்சி நடந்தது. பின்னர் நடைபெற்ற புதுப்பிக்கவல்ல எரிசக்தி கருத்தரங்கில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், "புதுப்பிக்கவல்ல எரிசக்தியின் தேவை என்ன என்பதை




தற்போதைய சூழலில் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், "நம் நாட்டில் 4 இலட்சம் மெகாவாட் மின் உற்பத்தி செய்தால்தான் நாம் பல்வேறு வளங்களைப் பெருக்கிக் கொள்ள முடியும். தற்பொழுது 1.30 இலட்சம் மெகாவாட் மின் உற்பத்தி மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த வேறுபாட்டை எதிர்காலத்தில் நாம் சரி செய்திட வேண்டும். இன்றைய சூழலில் எரிபொருள் குறிப்பாக பெட்ரோல், டீசல் பயன்பாட்டினால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது என கண்டறியப்பட்டுள்ளது. இந்தச் சூழலை கருத்தில் கொண்டு புதுப்பிக்கவல்ல எரிசக்தியை பயன்படுத்தினால் மட்டுமே சுற்றுச்சூழலை மேம்படுத்திட முடியும். ஆகையால் தான் மத்திய மாநில அரசுகள் மரபுசாரா எரிசக்தி உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகின்றன.

இக்கருத்தரங்கின் மூலம் பள்ளி மாணவ மாணவியருக்கு மரபுசாரா எரிசக்தி தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, மின் செலவுகளை குறைப்பது போன்றவற்றை தெரிவிப்பதற்காகவும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. எனவே மாணவர்கள் இவ்வாய்ப்பை பயன்படுத்தி எதிர்காலத்தில் அடுத்துவரும் சந்ததியினருக்கு ஒரு வளமான எதிர்காலத்தை காண்பித்திட வேண்டும்.

இயற்கை, சூரியன் என்ற சக்தியை நமக்களித்துள்ளது. அதன் ஆற்றலைப் பயன்படுத்தி மின்சாரம் மற்றும் எரிபொருட்களை நாமே நமக்குத் தேவையான அளவு உற்பத்தி செய்து கொள்ளலாம். (உதாரணம்) மாட்டுச் சாணத்திலிருந்து சாண எரிவாயு தயாரிக்கலாம். அதன் மூலம் உற்பத்தியாகும் எரிசக்தியை சமையல், எரிவிளக்குகள் மற்றும் நீர் இரைத்தல் போன்றவற்றிற்குப் பயன் படுத்தலாம். கோயம்புத்தூர் மாவட்டத்தில் வீடுகளில் 2 கன.மீ. மனிதக்கழிவுடன் கூடிய சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் எரிவாயுவைக் கொண்டு சமையலுக்குப் பயன்படுத்தப் பட்டு வருகிறது.

இந்திய மக்கள் அனைவரும் பல்வேறு வகைகளில் எரிசக்தியைப் பயன்படுத்தினால் வரும் காலங்களில் கனிமவளங்களின் பற்றாக்குறையை ஈடுசெய்ய வாய்ப்புள்ளது. மேலும், தற்போது எரிபொருட்களின் மூலம் ஓசோன் படலத்தில் ஓட்டை விழும் அளவு சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. அவற்றை கட்டுப்படுத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தியினைப் பயன்படுத்தினால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும். எனவே, மேற்குறிப்பிடப் பட்டுள்ள எரிசக்தி தொடர்பான செயல்பாட்டினை இராஜீவ்காந்தி எரிசக்தி தினமாக கொண்டாடப்படும் அவரது பிறந்த நாளன்று விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு மாணவ மாணவியரிடையே கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகிறது" என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
கோயம்புத்தூர்.

* * *



# நெசவாளரை உயர்த்திடும் கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாட்டில் கூட்டுறவு நெசவாளர்களின் வளர்ச்சியில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் முக்கியப்பங்கு வகிக்கிறது. தமிழகத்தில் 2 இலட்சம் நெசவாளர் குடும்பங்கள் உற்பத்தி செய்கின்ற துணிகளை விற்பனை செய்யும் பணிகளை, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் மேற்கொள்கிறது. கடந்த 71 ஆண்டுகளாக கோ–ஆப்டெக்ஸின் அளப்பரிய பணியினால் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன், தரமான விலை மற்றும் நியாயமான வணிக நடவடிக்கைகளின் மூலம் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையும் கோ–ஆப்டெக்ஸ் பெற்றுள்ளது.

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம், புதிய வடிவமைப்புடன் பல வண்ணங்களில், தரமான பட்டு மற்றும் பருத்தி சேலைகளை உற்பத்தி செய்து அவற்றை "சித்திரை தொகுப்பு சேலைகள்" என்ற பெயரில் இவ்வாண்டு கண்காட்சி நடத்தியது. இக்கண்காட்சி தமிழகம் மட்டுமல்லாமல் கர்நாடகம், மகாராஷ்ட்ரா, ஆந்திரா மற்றும் புது தில்லி ஆகிய மாநிலங்களிலும் மகளிரிடையே வரவேற்பினைப் பெற்றது. புதுயுக மகளிர் விரும்பும் 300–க்கும் மேற்பட்ட சுடிதார் இரகங்கள் "யுவா கலெக்ஷன்" என்ற பெயரில் கண்காட்சியில் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

ஓணம் திருநாளையொட்டி, வானவில் கோ – ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் கண்காட்சி மற்றும் விற்பனை நடத்தப்பட்டது.

கும்பகோணத்திற்கு அருகில் உள்ள கோடாலி கருப்பூரில் உள்ள சிற்ப வடிவமைப்பிலிருந்து உருவாக்கப்பட்ட கோடாலி கருப்பூர் சேலை இந்திய குடியரசு தலைவர் விருது பெற்று சிறப்பு சேர்த்தது.

திருமலை – திருப்பதி தேவஸ்தானம் அருள்மிகு வெங்கடேசப் பெருமாளுக்கு அணிவிக்கின்ற மேல்சாத்து உத்திரியம் பட்டாடைகள், "ஓம் நமோ வெங்கடேஸ்வ ராய" என்று தமிழிலும், சமஸ்கிருதத்திலும் வடிவமைக்கப்பட்ட மேல் துண்டு, கல்யாண சேவைக்கு பயன்படுத்திக் கொள்ள பருத்தியிலான துணிகள், தேவஸ்தான உண்டியல் துணிகள் மற்றும் ஆலய குருக்களுக்கான ஆடைகள் ஆகியவை கோ–ஆப்டெக்ஸ் மூலம் வழங்கப் படுகின்றன.

தீபாவளி, ரம்ஜான் திருநாட்களுக்காக அனைத்து கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் அனைத்து இரகங்களும் விற்பனைக்கு வைக்கப் பட்டுள்ளன.

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் சாா்பில் தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை வளாகத்தில் 23.9.2006 முதல் 30.9.2006 வரை நடைபெற்ற நவராத்திரி விழாவினை, 23.9.2006 அன்று கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் தனி அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி எம்.பி. நிர்மலா, இ.ஆ.ப., அவர்கள் பள்ளிக் குழந்தைகளுடன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். அப்போது அவர், நெசவாளர்களின் முன்னேற்றத்திற்கு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் ஊன்றுகோலாக இருக்கிறது என்று தெரிவித்ததுடன், இந்நிறுவனத்தின்மூலம் பள்ளி கல்லூரி மாணவர்கள் கல்வி பயிலுகின்ற போது வருமானத்தை பெறலாம் என்கிற திட்டத்தினையும் அறிவித்தார்.

தீபாவளியையொட்டி 20.9.2006 அன்று முதல் 30 சதவிகித சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுகிறது. 300க்கும் மேற்பட்ட புதிய வடிவமைப்பில் பட்டு மற்றும் பருத்தி சேலைகள், பெட்சீட்கள், வேட்டிகள், லுங்கிகள், திரைச்சீலை ஆகிய இரகங்கள் விற்பனைக்கு உள்ளன.

★ ★ ★

# இராமநாதபுரம் மாவட்டத்தின் சுதந்திரப் போராட்ட வீரர் மாமன்னர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி

வரலாற்றுச் சிறப்பும், புராண–இதிகாச காலத்து தொடர்புடைய கதைகளில் பெருமையும், தொன்றுதொட்டு வருகின்ற வீரத்தின் வலிமையும், இரக்கத்தின் ஈரம் கொண்ட காய்ந்த பூமி, புகழ் வேய்ந்த பகுதியே சேதுபதி சீமையாகும்.

சுதந்திர வரலாற்றுச் சுவடுகளில் மங்காத புகழ் படைத்த மறவர் சீமையும் இதுதான். மக்களாட்சி பூப்பதற்கு முன்பு சேதுபதி மன்னர் ஆட்சியில் இறுதி மாமன்னரும், இராமநாதபுரம் சீமையில் வெள்ளையரின் ஏகாதிபத்தியத்தை வீரமுடன் எதிர்த்து 24 ஆண்டு கொடுஞ்சிறை அனுபவித்து இறுதி மூச்சை சுதந்திர நீருக்கு சொந்தமாக்கியவர் 16ஆவது மாமன்னர் ரிபெல் முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதி ஆவார்.



1760–இல் வீர நிலத்தில் ஆற்றல்மிகு ஜோதியாக அவதரித்தார். 1809 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 23–ஆம் நாள் விடியாத இரவில் வீரத்தின் மூச்சுக் காற்று விண்ணோடு கலந்தது. உயிர்வாழ்ந்த ஆண்டுகள் 49, சிறையில் வாடிய ஆண்டுகள் 24 அவர் தம் 25–ஆம் வயதில் சிறை புகுந்து 49–ஆம் வயதில் மரணமுற்றார்.

### சுதந்திரப் போர்க்களங்கள்

வீரத்தோடு, வஞ்சகமும் கலந்து வளர்ந்ததால், விடுதலைப் பயிருக்கு நயவஞ்சக களையால் நாசம் விளைந்தது. 1795–இல் பிப்ரவரி 8–ஆம் நாள் ஆங்கிலேயே கிழக்கிந்திய கம்பெனியின் கூலிப்படைகள், கப்பம் கட்ட மறுத்த இராமநாதபுரம் சேதுபதி நாட்டின் மீது போர் தொடுத்தது. ஆங்கிலேயப் படைகள் இராமநாதபுரம் கோட்டை வாயிலைக் கடந்து அரண்மனையைச் சூழ்ந்து கொண்டன. ஆங்கிலேயத் தலைமைத் தளபதி மார்ட்டின், படைத்தளபதி ஸ்டீவென்ஸன், ஆங்கிலேயே கலெக்டர் பவுனி ஆகியோரால் மன்னர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவருடைய மந்திரிகள், படைத்தளபதிகள் கைது செய்யப்பட்டனர்.

இராமநாதபுரம் அரண்மனைக் கருவூலம், விலையுயர்ந்த கலைப்பொருட்கள், பொக்கிஷங்கள், அணிகலன்கள் கொள்ளையிடப்பட்டன. எதிர்ப்போரின் தலைகள் வெட்டப்பட்டன. மக்களைப் பயங்கொள்ளச் செய்திட பீரங்கிப்படைகள் வலம் வந்தன. சேதுபதிச்சீமை கிழக்கிந்தியக் கம்பெனியின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தது.

### கலவரம் மூண்டது

விடுதலை வேட்கையுள்ள வீரர்களையும், மக்களையும் துணையாகக் கொண்டு சேதுபதியின் தளபதி மயிலப்பச் சேர்வைக்காரர் 24.4.1794–இல் முதுகுளத்தூர், அபிராமம், கமுதி, குளத்தூர், காடல்குடி, நாகலாபுரம், பாஞ்சாலங்குறிச்சி போன்ற பகுதிகளில் கிளர்ச்சிகளை நடத்தினார். கொள்ளையர்களின் கூடாரங்கள், களஞ்சியங்கள் சூரையாடப்பட்டு தீ வைத்து கொளுத்தப்பட்டன.

கி.பி. 1800–1801–இல் மீண்டும் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர், சிவகங்கை போரட்டக்காரர்களின் ஊக்குவிப்பினால் தொடங்கிய கிளர்ச்சி இராமநாதபுரம் சீமைப்பகுதிகளில் மட்டுமல்லாது மதுரை, திண்டுக்கல் சீமைகளுக்கும் பரவியது. வெள்ளையரது சொத்துக்கள் அழிக்கப்பட்டன. மக்களின் எழுச்சியை ஒடுக்க மலேயா மற்றும் இலங்கையிலிருந்து படைகள் வரவழைக்கப்பட்டு மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

வீரத்தையும், மானத்தையும் காக்க வீறுகொண்டு போராடிய மக்களின் ஆயுதம் வேலும் வாளும், வெடி மருந்து வீச்சுக்களின் முன் வீரம் விலை போகவில்லை. ஆங்கிலேயரின் ஆயுத வலிமை வெற்றி பெற்று வேரூன்றி விட்டது.

மன்னரின் மகுடங்களாக விளங்கிய கோட்டைகள் தரைமட்டமாயின. மறவர்களின் ஆயுதங்கள் பறிக்கப் பட்டன. மக்கள் மீது கடும் வரிச்சுமை ஏற்றப்பட்டது.

மக்களின் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டும் கூட சேதுபதி மன்னரைப் பற்றிய பயம் ஆங்கிலேயர்களை விடவில்லை. கிளர்ச்சியின் சூத்திரதாரி திருச்சிக்கோட்டைச் சிறையிலே இருந்த சேதுபதி என்பதை கண்டறிந்த கலெக்டர் லூஷிங்டன் மக்கள் தொடர்பு கொள்ளாதிருக்க சேதுபதி மன்னரை நெல்லூர் அரணுக்கு மாற்றுமாறு கிழக்கிந்திய கம்பெனி தலைமைக்கு பரிந்துரைத்தார்.

மன்னர் முத்துராமலிங்க சேதுபதி சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே ஒரு இருட்டு அறையில் சிறை வைக்கப்பட்டார்.

உணர்ச்சிகள் அழிக்கப்பட்டு உள்ளத்தின் நம்பிக்கைகள் நசுக்கப்பட்டு ஒவ்வொரு வினாடியும் ஒரு யுகமாக பதினான்கு ஆண்டுகள் சேதுபதி மன்னர் சிறைவாசம் அனுபவித்தே சிதைந்தார்.

இந்திய விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்த முன்னோடிகளில் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி முதன்மையானவர். ஆங்கிலேயரையும், ஆர்க்காட்டு நவாப்பையும் எதிர்த்ததாலே உரிமையையும், உற்றாரையும் இழந்து தனிமைச்சிறையில் வாடி, மடிந்த வீரத்தின் தீபச் சுடராவார் மானங்காத்த மறவர் சீமையின் இறுதி மன்னராக மக்கள் மனங்களில் குடிபுகுந்தார்.

**சாதனைகள்**

ரிபெல் முத்துராலிங்க சேதுபதி 12 ஆண்டுகள் சேது சீமையின் மன்னராக கோலோச்சியுள்ளார், இவரது ஆட்சி வடபுரத்தில் கோட்டைப்பட்டினம் முதல் தென்பகுதியில் விளாத்திகுளம் வரையும் 2,353 சதுர மைல் பரப்பளவு கொண்டிருந்தது.

நிதி சேமிக்கப்பட்டிருந்தது, நீதி தவறாது தலைத்தோங்கியது. வாணிபம் வளர்ச்சியுற்றிருந்தது. கல்வி கடல் கடந்தும் பரவியிருந்தது. கடல் பொருள்களும், நிலவழிப் பொருட்களும் சாலை வழியிலும், நீர் வழியிலும் ஏற்றுமதி செய்யப்பட்டது.

**கல்வி மேம்பாடு**

சேதுபூமி கல்வி நிலையில் மேலோங்க கி.பி. 1785–இல் சுவார்ட்ஸ் பள்ளியினை தொடங்கிட மன்னர் ஆதரவும், நிதியுதவியும் வழங்கினார், இவர் காலத்தில் மீர் ஜவ்வாதப் புலவர், சுங்கடிப்புலவர், முத்தையா புலவர், கங்கமுத்துப் புலவர், மாசிலாமணிப் புலவர் போன்ற கல்வியில் சிறந்து விளங்கிய கல்விமான்கள் சிறப்பிக்கப்பட்டனர். பட்டங்களும், பரிசுகளும் கொடுத்து கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

**ஆன்மீக வளர்ச்சி**

எம்மதமும் சம்மதம், ஆண்டவனை அவரவர் விரும்பும் வழியில் – நெறியில் வழிபட வழிவகுத்துக் கொடுத்தார். இராமேஸ்வரம், திருப்புல்லாணி, திருச்சுழி, திருஉத்திரகோசமங்கை, கமுதி போன்ற இடங்களிலுள்ள கோவில்கள் திருப்பணி செய்யப்பட்டன. இராமேஸ்வரம் கோவிலின் மூன்றாம் பிரகாரத்தினை முடித்து வைத்தவரும் இவரே. ஆன்மீக யாத்திரீகர்களுக்கு இலவச அன்ன சத்திரங்களை அமைத்துக் கொடுத்தார். கோவில்களையும், அன்னதான சபைகளையும் கண்காணிக்கவும், பராமரிக்கவும் கி.பி. 1788–இல் தரும மகிமை, தர்மாசனம், ஜவிதம் போன்ற நிதியங்களை தோற்றுவித்தார். ஆலயங்கள், மசூதிகள், தேவாலயங்களுக்கு மானியங்கள் வழங்கி ஆன்மீகம் காத்தார்.

**உரிமை காத்தவர்**

தன்மானத்தோடு தானும், தனது குடிகளும் வாழ வேண்டும் என்பதற்காக மாற்றாரை வீரத்தோடு எதிர்த்து தம் உடல், பொருள், ஆவியை நாட்டிற்கும், விடுதலைக்கும் காணிக்கையாக்கினார். கி.பி. 1857 சிப்பாய் கலகம் தோன்றுவதற்கு முன்பே, புரட்சிக்கு வித்திட்டார், இராமநாதபுரம் மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட காலத்தில் ஏற்பட்ட ஒவ்வொரு நிகழ்வுக்கும் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி மன்னரின் சுதந்திர வேட்கைப் போராட்டமே முன்னோடியாகத் திகழ்ந்தது. வாழுகின்ற தலைமுறைக்கு வாழ்ந்தவர் பாடம் என்பதற்கு இணங்கவும், சுதந்திரத்தை தண்ணீர் விட்டா வளர்த்தோம். சர்வேசா; இப்பயிரை கண்ணீர் விட்டல்லவோ காத்தோம் என்ற மகாகவியின் கூற்றுக்கு ஏற்பவும், சுதந்திர தாகத்தின் முன்னோடி, வரலாற்று நாயகர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதியின் வீரத்தையும், தியாகத்தையும் வருகின்ற ஒவ்வொரு தலைமுறையும் அறிந்திட தமிழக அரசு இராமநாதபுரம் மாவட்டத்தில் மன்னருக்கு விழா எடுத்தும் வாரிசுகளை சிறப்புச் செய்தும் வருகிறது.

**– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுரம் மாவட்டம்**

* * *


மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு
18.9.2006

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08

